Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 11 திங்கட்கிழமை (26.11.2012) பக்கங்கள் 20 ஓசை – 057

















# மனித உரிமை செயற்றிட்டம் ஐ.நா. கூட்டத்தில் சமர்ப்பிப்பு

## சட்டமா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரில் இலங்கை அரசினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய மனித உரிமை செயற்றிட்டம் தொடர்பாகத் தயாரிக்கப்படவுள்ள அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளதாக சட்டமா அதிபர் பாலித்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அண்மையில் ஜெனிவாவில் நிறைவு பெற்ற மனித பேரவைக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு அறிக்கையொன்றை தயாரிப்பதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இலங்கையின் மனித உரிமைகள் செயற்பாட்டு திட்டம் தொடர்பில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இந்த அறிக்கையில் பரிந்துரைகள் முன்வைக்கப்பட உள்ளது.

மனித உரிமைகள் பேரவையில் கலந்துகொண்ட மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் சுஹத் கம்லத், பிரதி சொலிசிட்டர் ஜெனரல் புவனெக்க அளுவிஹார, அரச தரப்பு சிரேஷ்ட சடடத்தரணி நெரின்புள்ளே ஆகியோரால் குறித்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதமளவில் இந்தத் தயாரிப்புப் பணிகள் நிறைவுபெறும். ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்

19 ஆம் பக்கம் பார்க்க

## அனர்த்த எச்சரிக்கை கோபுரம் நேற்று முதல் பாவனையில்

யாழ். பருத்தித்துறை சுப்பர்மடம் பகுதியில் கடந்த 2 வருடங்களாக முற்றாக சேதமடைந்து காணப்பட்ட அனர்த்த எச்சரிக்கைக் கோபுரம் புனரமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக நேற்றுமுதல் விடப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் யாழ். மாவட்ட அதிகாரி சங்கரப்பிள்ளை ரவி தெரிவித்தார்.

பருத்தித்துறை சுப்பர்மடம் பகுதியில் கடந்த 2 வருடங்களாக முற்றாகச சேதமடைந்து காணப்பட்ட இவ் அனர்த்த எச்சரிக்கைக் கோபுரம் 62 இலட்சம் ரூபா செலவில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சால் புனரமைக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

யாழ். மாவட்டத்தில் 8 அனர்த்த முன்னெச்சரிக்கைக் கோபுரங்கள் உள்ளன. மணற்காடு, நெடுந்தீவு, வல்வெடடித்துறை, சுப்பர் மடம், உடுத்துறை ஆகிய பகுதிகளிலுள்ள 5 எச்சரிக்கை கோபுரங்கள் சூரியக்கதிர் மூலமும் மருதங்கேணி, காரைநகர், ஊர்காவற்றுறை ஆகிய பகுதிகளிலுள்ள

19 ஆம் பக்கம் பார்க்க

## அமைச்சரவையில் மாற்றம் புதிய பிரதமர் யார்?

அமைச்சரவையில் விரைவில் மாற்றம் ஏற்படவுள்ளதாகவும் இதன்போது பிரதமர் டி.எம். ஜயரட்ணவுக்குப் பதிலாக மற்றொருவர் புதிய பிரதமராக நியமிக்கப்படலாம் எனவும் அமெரிக்காவில் ஜயரட்ணவைச் சந்தித்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இது தொடர்பாகவும் ஆராய்ந்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அமைச்சரவையில் மாற்றம் செய்யப்படும் என வரவு - செலவுத் திட்டத்துக்கு

19 ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதியின் மலேஷிய பயணம் இரத்து

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மலேஷியாவிற்கான விஜயத்தை தவிர்த்துக் கொண்டுள்ளார். இலங்கை உயர்ஸ்தானிகர் அலுவலக ஊடகப் பிரிவு இத் தகவலை உறுதிப்படுத்தியுள்ளது.

தவிர்க்கமுடியாத காரணத்தினால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மலேஷியாவிற்கான விஜயத்தை மேற்கொள்ளமாட்டார் என மின்னஞ்சல் மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 4 ஆம் திகதி தொடக்கம் 6 ஆம் திகதி வரை மலேஷியாவில் இஸ்லாமிய பொருளாதார மன்ற ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள மாநாடு ஒன்றில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி செல்லவிருந்தார்.

## அமெரிக்க அரசுடன் பேசமாட்டார் ஜனாதிபதி



அமெரிக்காவுக்கு தனிப்பட்ட பயணத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அமெரிக்க அரச அதிகாரிகளுடன் பேச்சுக்கள் எதையும் நடத்த மாட்டார் என்று அவரது பேச்சாளர் மொகான் சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுக்கு சென்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அங்கு இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தக் கூடும் என்று ஊகங்கள் வெளியிடப்பட்டன. எனினும் இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள ஜனாதிபதியின் பேச்சாளர் மொகான் சமரநாயக்க,

19 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை விவகாரங்களைக் கையாள தனிப்பிரிவை அமைக்கும் ஒபாமா

அமெரிக்கா ஜனாதிபதி பராக ஒபாமாவின் இரண்டாவது ஆட்சிக்காலத்தின்போது இலங்கை விவகாரங்களைக் கையாள்வதற்கான விசேட அரச உயர்மட்டக் குழு ஒன்று தனியாக ஏற்படுத்தப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதுவரை காலமும் இலங்கை விவகாரங்களை ஆசிய பிராந்தியத்துக்கான அமெரிக்க இராஜதந்திரிகளே கையாண்டு வந்தபோதிலும் ஜனாதிபதி ஒபாமாவின் புதிய நிர்வாகத்தின் கீழ் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களமே நேரடியாக இலங்கை விவகாரங்களை நேரடியாகக் கையாளவுள்ளது.

ஜனாதிபதி ஒபாமா ஜனவரியில் மீண்டும் சத்தியப்பிரமாணம்



செய்யும்போது இராஜாங்கத் திணைக்களத்தின் உயர்மட்டப் பதவிகளில் மாற்றங்கள் கொண்டுவரப்படவுள்ள வேளையில் ஆசிய விவகாரங்களை கையாள்வதில் அனுபவமுடையவர்கள் முக்கிய பதவிகளில் அமர்த்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேசமயம், அமெரிக்க அரசின் புதிய மாற்றங்களுக்கு முகம கொடுக்கும் வகையில் இலங்கை

19 ஆம் பக்கம் பார்க்க

## பிரதம நீதியரசர் பதவியை ஏற்குமாறு கோரவில்லை

### என்கிறார் மொஹான் பீரிஸ்

(கொழும்பு)

தற்போதைய பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க பதவியில் இருந்து நீக்கப்பட்டால், பிரதம நீதியரசராக பதவியேற்குமாறு தம்மிடம் யாரும் கேட்கவில்லை என்று முன்னாள் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் தெரிவித்துள்ளார். மொஹான் பீரிஸ் பிரதம நீதியரசர் பதவியை எதிர்பார்த்திருப்பதாக அண்மையில் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இது தொடர்பில் அவர் தமது மறுப்பை வெளியிட்டுள்ளார்.

நீதித்துறை தொடர்பில் தற்போது அவர் ஜனாதிபதியின் ஆலோசகராக செயற்பட்டு வருகிறார்.

எனவே நாட்டின் அடுத்த பிரதம நீதியரசராக அவரே நியமிக கப்படுவார் என்று தகவல்கள் வெளியாகியிருந்தன.

இதனை மறுத்துள்ள மொஹான் பீரிஸ் சரியான ஒருவர் அந்தப் பதவிக்கு நியமிக்கப்படுவார் என்று குறிப்பிட்டுள்ளார்.

### பெண்களுடன் சேஷ்டை

## தடுக்கமுற்பட்ட வேளை சாரதி, நடத்துனர் மீது தாக்குதல்

மதுபோதையில் பெண்களுடன் மினிபஸ்ஸில் சேஷ்டை விட முயன்றவர்களை தடுக்க முற்பட்ட நடத்துனரும் சாரதியும் தாக்கப்பட்ட சம்பவமொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளமை தொடர்பாக சுன்னாகம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சுன்னாகம் மாசியப்பிட்டிக்கு இடையில் வைத்து இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணத்தில் இருந்து சுன்னாகம் ஊடாக அளவெட்டி செல்லும் மினிபஸ்ஸொன்றில் குடிபோதையில் காணப்பட்ட நான்குபேர் ஏறியுள்ளனர்.

இவர்கள் பஸ்ஸில் பயணித்த பெண்களுடன் தகாத முறையில் நடக்க முற்பட்டதை அவதானித்த பஸ் நடத்துனர், அதனை தடுக்க முயன்றபோது அவரை மேற்படி குழுவினர் தாக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

19 ஆம் பக்கம் பார்க்க

# கூடங்குளம் அணு உலைக்கு எதிராக மன்னார் மக்களுக்கு விளக்கமளிப்பு



கூடங்குளம் அணு உலைக்கு எதிராக, கூடங்குளம் அணு உலைக்கு எதிரான மக்கள் இயக்கம் ஏற்பாடு செய்திருந்த விழிப்புணர்வுக் கருத்தரங்கு கடந்த சனிக்கிழமை காலை 11 மணியளவில் மன்னார் பிரஜைகள் குழு பணி மனையில் இடம்பெற்றது.

இதன் போது கூடங்குளம் அணு உலைக்கு எதிரான மக்கள் இயக்கத்தின் தலைவர் துமிந்த நாகாமகே,கொமினியுஸ் கட்சியின் தலைவர் அஜீத் சுரேந்திர ரூபசிங்க, பிரசாத் மஞ்சு உட்பட சுமார் 15 பேர் கொண்ட குழுவினர் மன்னாருக்கு வருகை தந்திருந்தனர்.

இதன் போது மன்னார் பிரஜைகள் குழுவில் இடம் பெற்ற அணு உலைக்கு எதிராக மக்களுக்கு தெளிவுபடுத்தும் கருத்தரங்கின்போது மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை செபமாலை, மன்னார் நகர சபை முதல்வர் எஸ்.ஞானப்பிரகாசம், மன்னார் பிரதேச சபையின் உப தலைவர் ஏ.சகாயம்,நகர சபை, பிரதேச சபை உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், மீனவ சங்கங்களின் தலைவர்கள், அருட்தந்தையர்கள், மனித உரிமைகள் ஆர்வலர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த நிகழ்வு இடம் பெற்றுக்கொண்டிருந்த போது மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசெப்பு ஆண்டகை அவர்களும் வருகை தந்திருந்தார். இதன் போது வருகை தந்திருந்த கூடங்குளம் அணு உலைக்கு எதிரான மக்கள் இயக்க உறுப்பினர்களினால் இலங்கையில் இதன் தாக்கம் தொடர்பாகவும் குறிப்பாக மன்னார் மாவட்டம் இந்த கூடங்குளம் அணு உலைக்கதிர் வீச்சினால் எதிர்நோக்கவுள்ள பிரச்சினைகள் தொடர்பாகவும் தெளிவான விளக்கமளிக்கப்பட்டது.


## பிற்போடப்பட்டுள்ளது

வடமராட்சி காரணவாய் வேதரனியேஸ்வரா வித்தியாலயத்தில் இன்று நடைபெறவிருந்த வருடாந்த பரிசில்தினவிழா தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக பாடசாலையின் அதிபர் ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்த பரிசில்தின நிகழ்வு பற்றி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (02)

# திராட்சை செய்கையில் விவசாயிகள் ஆர்வம்

(யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணத்தில் பணப்பயிர்களான புகையிலை, திராட்சை போன்றவற்றில் தற்போது விவசாயிகள் திராட்சைச் செய்கையிலேயே அதிக அக்கறை காட்டி வருகின்றனர்.

30 வருடங்களுக்கு மேலாக நடைபெறும் திராட்சை பழ உற்பத்தியில் தற்போது யாழ்ப்பாணத்தில் 101 ஹெக்ரயர் நிலப்பகுதியில் திராட்சை உற்பத்தி நடைபெறுவதாக யாழ். விவசாயத் திணைககழக பழப்பயிர்ச்செய்கைகள் பாடவிதான உத்தியோகத்தர் திருமதி லதா ஜெனகன் தெரிவித்தார்.

திராட்சைப்பழவகைக்கேற்ற மண்வளம் நிறைந்த தெல்லிப்பளை, சண்டிலிப்பாய், உரும்பிராய், புத்தூர் வேலணை, கரவெட்டி ஆகிய பிரதேசங்களிலேயே அதிகளவு திராட்சை உற்பத்தி செய்யப்படுகின்றது. செம்மண் நிறைந்த நிலமே திராட்சை பயிரிடுவதற்கு சிறந்ததாகும். ஆரோக்கியமான திராட்சைக் கொடிகள் பதினைந்து தொடக்கம் இருபது வருடங்களுக்கு தொடர்ந்தும் பயன்தரும். ஒருஏக்கருக்கு 320 செடிகள் நடலாம் இவ்வாறு அதிக வருமானத்தை ஈட்டித்தரக்கூடிய இத்திராட்சைப் பயிர்ச் செய்கையில் அனுபவம் வாய்ந்தவர்கள் மட்டுமே அதிகளவு வெற்றிகண்டுள்ளனர்.

# இந்து ஆலயங்களுக்கு பயன்தரும் மரக்கன்றுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள இந்து ஆலயங்களுக்கு பயன்தரும் மரக்கன்றுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

யாழ். மாவட்ட கலாசாரத்திணைக்களம் மேற்படி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இம்மாவட்டத்தில் உள்ள பிரபலமான இந்து ஆலயங்களில் தென்னை மற்றும் பழ மரக்கன்றுகள் நாட்டுவதற்கு இடவசதியுள்ளன. என்பதனை அவதானித்து அத்தகைய ஆலயங்களுக்கு மேற்படி மரக்கன்றுகளை வழங்குவதற்கு யாழ். மாவட்ட கலாசாரத திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஏற்கனவே ஒரு தொகுதி மரக்கன்றுகள் பிரதேச செயலகங்களின் ஊடாக விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் யாழ். செயலக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# கலாசார, இலக்கிய போட்டியில் காரைநகர் மாணவன் முதலிடம்

(யாழ். நிருபர்)

சமுர்த்தி சிறுவர் கழகங்களுக்கிடையிலான கலாசார மற்றும் இலக்கியப் போட்டிகளில் காரைநகரைச்சேர்ந்த செல்வன் ஈ.தமிழ்ச் சுடர் அகில இலங்கையில் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளார்.

அகில இலங்கை சமுர்த்தி சிறுவர் கழகங்களுக்கிடையிலான கலாசார மற்றும் இலக்கியப் போட்டிகள் கடந்த மாதம் எம்பிலிப்பிட்டியவில் நடைபெற்றது. இதில் காரைநகர் பிரதேச செயலகத்தில் இருந்து நான்கு நிகழ்வுகள் பங்கேற்றிருந்தன. இவற்றுள் அறிவிப்பாளர் போட்டியில் பங்கு பற்றிய தரம் 2 இல் கல்வி பயிலும் யாழ்ற்ரன் கல்லூரி மாணவன் ஈ.தமிழ்ச்சுடர் அறிவிப்பாளர் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

சாதனையாளரான 7 வயதையுடைய இம்மாணவன் வன்னி யுத்தத்தின் போது ஒரு கண்ணை இழந்துள்ளான் இவரது தந்தையும் காணாமற் போயுள்ளார். இவ்வாறு இழப்புகளின் மத்தியிலும் இம்மாணவன்பெற்றசாதனையைப் பலரும் பாராட்டியுள்ளனர். (10)

# கால்வாயை உயர்த்திய அணையால் மகாறம்பைக்குளம் விவசாயம் பாதிப்பு

(வவுனியா)

வவுனியா, மாமடு குளத்தில் இருந்து மேலதிகமாக வெளியேற்றப்படும் நீர் செல்லும் காலவாய்ப் பகுதியை கொக்குவெளி விவசாயிகள் உயர்த்தி அணை கட்டியமையால் மகாறம்பைக்குளம் விவசாயிகள் பாதிப்படைந்துள்ளதாகக் கமநல சேவைகள் திணைக்களத்தில் மகாறம்பைக்குளம் கமக்காரர் அமைப்பினர் கடந்த சனிக்கிழமை முறைப்பாடு செய்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்,

"நீண்டகாலமாக மாமடு குளத்தில் இருந்து செல்லும் நீரானது கால்வாய் ஊடாகச் சென்று பறங்கியாற்றை அடைகின்றது. இதன்போது விவசாயிகள் தமககுத் தேவையான நீரைப் பெற்று விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடியதாக அமைந்திருந்தது. எனினும் தற்போது கொக்குவெளிப் பிரதேசத்தில் மீள்குடியேறியுள்ள மக்கள் அக் கால்வாயை நீர்ப்பாசனத்தின் விதிமுறைக்கு மாறாக மறித்து அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றின உதவியுடன் உயரமாக அணையிட்டுள்ளமையால் மகாறம்பைக் குளத்தில் அமைந்துள்ள சுமார் 20 ஏக்கர் விவசாய நிலம் நீர் நிரம்பி விவசாயம் செய்ய முடியாதுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் எங்களால் கமநல திணைக்களத்தில் உள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. நாங்கள் இம்முறை விவசாய செய்கையில் பெரும் பாதிப்பை எதிர்கொள்கின்றோம். எனவே இது தொடர்பில் எங்களுக்கு உரிய தீர்வை பெற்றுத் தரவேண்டும்" என்றனர்.

# வீதிப்புனரமைப்பு நடவடிக்கையில் பாதுகாப்பு சமிக்ஞைகள் அவசியம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுவதினால் இதுவரை வீதிப் பாதுகாப்பு சமிக்ஞைகள் இல்லாத காரணத்தால் அவ்வழியே பயணம் செய்யும் பயணிகள் பாரிய நெருக்கடியை எதிர் நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக குறித்த வீதி திருத்தத்தின்போது ஒரு பக்கம் மட்டுமே திருத்தப்படுவதால் போவதற்கும் வருவதற்கும் ஒரு வழியினைப் பயன்பத்துவதால் சிலநேரங்களில் போக்குவரத்து இடையூறுகள் ஏற்பட்டு வருகின்றன.

அத்துடன் குறித்த வீதிக்கு குறுக்காக இரவு நேரங்களில் பெரல்கள் கயிறுகள் கட்டப்பட்டு இருப்பதனால் இரவு நேரங்களில் விபத்துக்கள் அதிகமாகக் காணப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பாக பல்வேறுதடவைகள் உரியவர்களிடம் தெரிவிக்கப்பட்ட போதும் எந்தவிதமான நடவடிக் கையும் எடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (02)

# இன்று கும்பாபிஷேகம்

(கிரு-சிகரம்)

திருநெல்வேலி தெற்கு பரமேஸ்வரா சந்தி அருள்மிகு வீரகத்தி விநாயகர் தேவஸ்தான புனருத்தாரண துவிதல் ராஜகோபுர அஷ்டபந்தன பஞ்சகுண்டப பிரதிஷ்டா மஹாகும்பாபி ஷேகம் நேற்றுமுன்தினம் முதல் ஆரம்பமாகியது.


காலை முதல் புண்ணியாஸ்தானங்கள் நடைபெற்று இரவு 9.50மணிக்கு மூலமூர்த்தி முதல் பரிவார தெய்வங்கள் என அனைத்து மூர்த்திகளுக்கும் பிரதிஷ்டா நிகழ்வு நடைபெற்றது.

மாலையில் புதிதாக அமைக்கப்பட்ட ராஜகோபுரத்திற்கும் ஏனைய கோபுரங்களுக்கும் அந்தணர்கள் மந்திரம் ஓத கலசங்கள் பிரதிஷ்டா செய்யப்பட்டது.

தொடர்ந்து நேற்றுக் காலை 8.00 மணிமுதல் எண்ணெய்க்காப்பு பூஜைகள் நடைபெற்று தொடர்ந்து அடியார்களால் பிள்ளையார் உட்பட அனைத்து பரிவார தெய்வங்களுக்கும் எண்ணெய் சார்த்தும் நிகழ்வும் நடைபெற்றது.

இன்று விநாயகப் பெருமானுக்கான மகா கும்பாபிஷேகம் மற்றும் கர்ப்பக்கிரக மற்றும் பரிவார மூர்த்திகளுக்கான அபிஷேகமும் நடைபெறவுள்ளது. புதிதாக ஆலயத்தில் எழுந்தருளியுள்ளபஞ்சமுக விநாயகர் அழகிய மஞ்சத்தில் வீதி உலாவரும் நிகழ்வும் மாலை நடைபெறவுள்ளது.

# சனசமூக நிலையத்திற்கு தளபாடங்கள் கையளிப்பு



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்பின்பேரில் ஈ.பி.டி.பி. யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன ரினின் (உதயன்) இவ்வாண்டுக்கான பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டநிதி ஒதுக்கீட்டின் கீழ் காரை நகர் வேதரடைப்பு சனசமூக நிலையத்திற்கு தளபாடங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

காரைநகர் பிரதேசசபை தலைமையலுவலகத்தில் நடை பெற்ற நிகழ்வில் ஈ.பி.டி.பியின் காரைநகர் பிரதேச அமைப் பாளரும், காரைநகர் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான வீ. கண்ணன் (ரஜனி) மற்றும் காரைநகர் பிரதேசசபை செயலாளர் கனகதுரை ஆகியோர் இணைந்து தளபாடங்களை சனசமூக நிலையத்தலைவரிடம் கையளித்தனர். இதில் பிரதேச சபை உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.





யாழ். இந்து ஆரம்ப பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா நேற்று நடைபெற்றபோது விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், மாணவிகளின் கலை நிகழ்வையும் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட திருமதி கிருபாகரி இளங்கோவன் மாணவிக்கு பரிசில் வழங்குவதையும் அருகில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் நிற்பதையும் காணலாம்.

(படம்: கே.நந்தகுமார் (02)

## யாழ்.மாநகரசபை எல்லைக்குள் டெங்கு நுளம்பின் பெருக்கம் குறைவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை எல்லைக் குட்பட்ட பகுதியில் டெங்கு ஒழிப்புக்கான நடவடிக்கைகள் அதிகரிக் கப்பட்டுள்ளதோடு, டெங்குநோயின் தாக்கமும் குறைக்கப்பட்டுள்ளதாக யாழ். மாநகரசபை பிரதம பொது சுகாதார பரிசோதகர் எஸ்.ஜீவ[illegible]தன் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கை யில், தற்போது மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு நோயின் தாக்கம் குறைவடைந்துள்ளது. எனினும் எமது குழுவினர் டெங்கு நோய்க்கு ஏதுவான பகுதி யென அடையாளம் காணப்ப டும் இடங்களுக்கு புகையூட்டல் மற்றும் சுத்திகரிப்பு மேற்கொள் ளல் மற்றும் அறிவுரைகள் வழங் கல் என்பன மேற்கொள்கின்ற னர். சில இடங்களில் பொலிஸா ரும் இணைந்து கொளகின்றனர்.

தற்போது சமூக அமைப்பு களை ஊக்கப்படுத்தி டெங்கு நோயைக் கட்டுப்படுத்த நடவ டிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கிராமிய மட்டத் தில் ஒவ்வொரு கிராம சேவை யாளர் பிரிவுகளிலும் டெங்கு ஒழிப்புக்கான குழுக்கள் உரு வாக்கப்படுகின்றது. இதற்கு அப்பகுதி கிராம சேவகர்கள் தலை வராகவும், பொது சுகாதார பரி சோதர் செயலாளராகவும் மக் கள் உறுப்பினர்களாகவும் இருநது செயற்படும் போது அவ்வப் பகுதியின் டெங்குநோய் தடுப்பு நடவடிக்கை சீராகவும், நேர்த்தி யாகவும் நடைபெறும். இதற்கு அமைய நாவாந்துறை சுகாதார பாிசோதகர் பிரிவிலுள்ள 5 கிராம சேவகர் பிரிவுகளிலும் இவ்வாறு குழுக்கள் அமைக்கப்பட்டதோடு, அதன் செயற்பாடுகள் வலு வடைந்து வருவதனால் தற்போது டெங்கு நோயின் தாக்கம் குறைந்து காணப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## சின்னக்கடை நவீன சந்தையில் மூடப்பட்டுள்ள மூன்று மலசலகூடங்கள்

(குருநகர்)

சின்னக்கடை - நவீன சந்தை யில் அமைந்துள்ள மூன்று மலசல கூடங்களும் ஒரு மாதகாலமாக மூடப்பட்டிருப்பதாக தெரிவிக்கப படுகிறது.

இதனால் சின்னக்கடை சுற்று வட்டத்தில் வர்த்தக நிலையங் களை வைத்திருப்போர் மற்றும் சந்தைக்கு வருகை தருவோர் தமது அடிப்படைத் தேவை களை நிறைவேற்ற முடியாமல் உள்ளதாகவும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

மேலும் மலசலகூடக் குழி களின் மேல்மூடி அகற்றப்பட் டுள்ளதால் சுற்றாடலில் துர் நாற்றம் வீசுவதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை சுகாதாரப் பிரிவு அதிகாரி அப்பகுதி வர்த்தகர் களிடம் இருந்து நூறு ரூபா வீதம் அறவிட்டிருப்பதாகவும், ஆயினும் இன்னமும் எந்தவித சுத்திகரிப்பு, புனரமைப்பு வேலை கள் நடைபெறவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (68)

## புதிய கிராம அபிவிருத்திச் சங்கம் பொன்னாலையில் அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

பொன்னாலையில் புதிய கிராம அபிவிருத்திச் சங்கம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. கடந்த 22 ஆம் திகதி வியாழக்கிழமை பொன்னாலை மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்ட பத்தில் இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் இதற்கான நிர் வாகத்தெரிவும் இடம்பெற் றது.

இதன்போது புதிய கிராம அபிவிருத்திச் சங்கத்தின் நிர் வாகசபை தலைவராக நா.பொன் ராசா தெரிவு செய்யப்பட்டார். நிர்வாகத் தெரிவை வலிகாமம் மேற்கு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆ.கோகுலன் நடாத்தி வைத்தார்.

இதன்போது கருத்து தெரி வித்த அவர், மீள்குடியேற்றம் நடைபெறும் இத்தருணத்தில் கிராமத்தின் எதிர்கால அபி விருத்தி வேலைகளை முன் னெடுத்துச்செல்ல பொன்னாலை கிராம அபிவிருத்திச் சங்கம் அர்ப் பணிப்புடன் செயலாற்றவேண் டும் என்று தெரிவித்தார்.

இந்தப் பொதுக்கூட்டத்தில் ஜே-170 கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சர்வானந்தன், சமுர்த்தி உத்தியோகத்தர் சிவா னந்தன் ஆகியோரும் பெரு மளவான பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

## பிள்ளையார் பெருங்கதை

(சாவகச்சேரி)

விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் வரும் வியாழக்கிழமை பிள்ளையார் பெருங்கதைப் படிப்பு ஆரம்பமாகவுள்ளது.

வியாழக்கிழமை முதல் தினமும் மாலை 3 மணிக்கு கும்ப பூசை நடைபெற்று பிள்ளையார் பெருங்கதை படிக்கப்படும். தொடர்ந்து இருபது நாட்கள் நடைபெறும் கதைப்படிப்பைத் தொடர்ந்து இருபத்தோராம் நாள் கஜமுகாசுரன் போர் நடை பெறவுள்ளது.

உபயகாரர்கள் தமது விழாக்களை திறம்படச் செய்ய நிர் வாகத்தினருடன் தொடர்பு கொள்ளுமாறும் விரதம் அனுஷ்டிப்போர் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறும் வேண்டப்பட் டுள்ளார்கள்.

## நெற்பயிரை தாக்கும் பீடைகள்; விவசாயிகளுக்கு அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

நெற்பயிர்களில் இலைமடிச் சுட்டி, கபில நிற தண்டுத்தந்தி போன்ற பீடைகளின் தாக்கம் காணப்படுவதாக விவசாய திணைக்களத்தினர் தெரிவித் துள்ளனர்.

தென்மராட்சி, புத்தூர் கிழக்கு, திக்கிராய், சங்கரத்தை, நவாலி, கப்பூது, கைதடி போனற பகுதிகளில் இவற்றின் தாக்கம் அவதானிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, குறித்த பகுதி விவசாயிகள் நெற்பயிரில் பீடைத்தாக்கம் உள்ளதா எனக் கண்டறிந்து. பொருத்தமான பீடை நாசினியினைப் பயன் படுத்தி அவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும்.

இது தொடர்பான மேலதிக தகவல்களைக் குறித்த பிரதேச விவசாய போதனாசிரியர் களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள முடியும் எனக் கூறப் படுகிறது. (54)

## அதிபர் நியமனம்

(அளவெட்டி)


அளவெட்டி மகாஜன சபை கலைஞர் வட்டச் செயலாளரும் முன்னாள் தலைவரும் தெல்லிப் பளை மகாஜனக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியருமான வைத் திலிங்கம் விஜயபாஸ்கரன் குட்டியப்புலம் அ.த.க பாட சாலையின் அதிபராக கடந்த 16 ஆம் திகதி முதல் பொறுப் பேற்றுக்கொண்டார்.

அருணோதயக் கல்லூரி மற்றும் யூனியன் கல்லூரியின் பழைய மாணவரான இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிகத்துறை பட்டதாரியா வார்.

அத்துடன் கல்வியற்துறை யில் முதுமாணிப்பட்டத்தைப் பெற்றுள்ளதுடன், தற்போது முதுதத்துவமாணிக் கற்கையை தொடர்ந்து வருகின்றார்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் கல்வியற்துறையின் வருகைதரு விரிவுரையாளராகவும் பணி புரிந்து வருகின்றார்.

## திருக்கார்த்திகைத்தீபம்



சைவ அன்பர்களின் பிரதான மாதங்களில் கார்த்திகை மாதம் ஒன்றாகும். கார்த்திகை மாதம் பௌர்ணமி அன்று கார்த்திகை நட்சத்திரம் வருவதனால் இம் மாதம் கார்த்திகை என அழைக்கப் படுகிறது.

திருமாலுக்கும் பிரமனுக்கும் யார் பெரியவர் என்ற விவாதம் புராணம் கூறும் கதையாகும். சிவன் ஜோதியாகத் தோன்ற அடியையும் முடியையும் தேடி முறையே விஷ்ணுவும் பிரமாவும் சென்றனர்.

விஷ்ணு தோல்வியை ஒத்துக்கொண்டு திரும்பினார். ஆனால் பிரம்மாவினால் தோல்வியை ஒத்துக்கொள்ள முடியவில்லை. ஜோதியின் முடியிலிருந்து உதிர்ந்து விழுந்த தாழம்பூவை சாட்சியாக்கவும் முயன்றார். அதனால் பொய்ச்சர்ட்சி கூறிய தாழம்பூ பூசைக்கு உதவாத பூவாகியது. பிரம்மாவுக்கு தனி ஆலயம் அமையவில்லை என்பது வரலாறு

இவ்வாறு பரம்பொருள் ஜோதியாகத் தோன்றிய தினம் கார்த்திகைத் தீபமாகக் கொண்டாடப் படுகிறது. ஜோதி மலையாகத் தோன்றிய சிவன் அண்ணாமலை என்று அழைக்கப்பட்டார். அகந்தை அழிந்த தினம் கார்த்திகைத் தீபத் தினமாகும்.

புராணம் கூறும் இக் கதையில் ஆழ்ந்த உட்பொருள் உண்டு. இறைவனின் பரம்பொருளைக் காணப் புறப்பட்டவர்கள் விஷ்ணு, பிரம்மா ஆகியோர். இதில் விஷ்ணு மகாலட்சுமியின் கணவன் செல்வத்திற்கு அதிபதி. பிரம்மா சரஸ்வதியின் நாயகன் கல்விக்குரியவர். இக் கதையில் அடியையும் முடியையும் தேடிச் சென்றது செல்வமும் கல்வியுமாகும்.

இரண்டினதும் நோக்கத்தை அடைய முடியவில்லை. இதிலிருந்து செல்வம், கல்வி மூலம் அறியப்பட முடியாதது பரம்பொருள் எனும் உண்மை விளக்கப்படுகிறது. ஆணவம் என்ற இருள் அகன்று. உண்மையான பக்தி ஒன்றினால் மட்டுமே இறைவனை அடைய முடியும் எனும் பேருண்மை புலப்படுகிறது.

செலவு செய்து ஆலயம் அமைத்தாலும் நூல் பல கற்றாலும் காண முடியாத பரம்பொருளை உள்ளத்தில் - பந்தியில் வைத்து நினைப்பவருக்கு ஜோதியாக பரம்பொருள் தோன்றும் நாள் கார்த்திகைத் தீபத் திருநாளாகும். - *'சொல்லின் செல்வர்' இரா.செல்வவடிவேல்*

நம்பிக்கை குறையும் போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான். - ஜான்மில்டன்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## மக்கள் தொகை வளமாக மாறுதல்!

புலம்பெயர்ந்து செல்ல நேர்வதில் உள்ள மிக முக்கிய பிரச்சினையே நம் அடையாளங்களை இழத்தல் என்பதுதான். எந்த நாட்டினராக இருந்தாலும், தொடரும் தலைமுறைகள் தாம் குடியேறிய மண்ணில் தங்களுக்கு தனித்துவம் தரும் அடையாளங்களை அவமானமாகக் கருதி அவற்றை இழந்து ஒரு பெருங்கூட்டத்தில் தங்களைக் கரைத்துக் கொள்ள முயற்சி செய்வதுதான் உலக இயல்பாக இருக்கிறது.

படிப்பு, வாழ்க்கை வசதிகள், வாழும் முறைகளை உள்வாங்கிக் கொள்ளல் மூலம் போய்ச் சேர்ந்த நாட்டுப் பிரசைகளாகவே அவர்கள் மாறுவதில் ஒன்றும் வியப்பில்லை. இவர்கள் புலம்பெயர்ந்து சென்ற ஐரோப்பிய, அமெரிக்க நாடுகள் அங்கே பயன்படுத்தப்படாமல் மீந்து கிடக்கும் பெருமளவு நிலங்களில் குடியேற்றுவதற்கும், அங்கு வேலை செய்வதற்கும் மக்கள் தேவைப்படுவதால் குடிவரவை அனுமதிக்கிறார்கள். ஐக்கிய அமெரிக்கக் குடியரசு வருடந்தோறும் 55 ஆயிரம் பேரை உலகெங்கிலுமிருந்து தனது நாட்டுக் குடியுரிமை பெற அழைக்கிறது. இவ்வாறு குடியுரிமை வழங்குவதில் கனடா முதலிடம் வகிக்கிறது.

அதேசமயம் ஆசிய ஆபிரிக்க நாடுகளில் ஏழ்மையும் இனப் படுகொலைகளும் அதிகரித்து, மக்கள் அந்த நாடுகளில் வாழ இயலாமல் மேலைநாடுகளுக்குப் புலம்பெயர்ந்து செல்லும் அகதிகளின் எண்ணிக்கை உயர்ந்து வருகிறது.

இவர்கள் தங்கள் நாடுகளுக்கு இனி என்றாவது முழுமையாகத் திரும்பி வந்து வாழ விரும்புவார்கள் என்று தோன்றவில்லை. இவர்கள் தற்போதுள்ள நாடுகளில் குடியுரிமை பெறுவதிலும், சொத்துகள் சேர்ப்பதிலும், அந்த வாழ்க்கை வசதிகளின் அடிமைகளாகி விட்டிருப்பதையும் பார்க்கும்போது, சில காலத்துக்கு இங்கு வந்து வந்து திரும்பிச் செல்லும் பயணிகளாகவும், அடுத்தடுத்த சந்ததிகள் வராமலே விடக்கூடிய நிலைமையும்தான் அதிகம் இருப்பதாகத் தெரிகிறது.

இந்த புலம்பெயர்ந்து வந்தவர்களினால் உருவான பிரச்சினைகளைத் தீர்க்க முடியாமல் பல நாடுகள் சிக்கலுக்கு உள்ளாகியுள்ளன. அதிகரிக்கும் மக்கள் தொகை என்பது, அந்தந்த நாடுகளிலும் பற்றாக்குறைகளையும் சமூகச் சிக்கலையும் தான் உருவாக்கும். மக்கள் தொகை அளவுக்கதிகமாகி விடாமல் பார்த்துக் கொண்டால்தான், நாட்டில் வசிக்கிற மக்கள் ஒரு தரமான வாழ்க்கையை வாழ முடியும். அதுமட்டுமல்ல, பொதுவாக எல்லாத் தரப்பு மக்களும் மதிக்கத்தக்க வாழ்க்கையை வாழ்வதற்கு, அந்த அரசுகளும் ஆவன செய்ய முடியும்.

அதேநேரத்தில் மக்கள்தொகைப் பெருக்கம் ஒரு நாட்டுக்குப் பாரம் அல்லது பலவீனம் என்பதாக மட்டும் பார்க்கக் கூடாது. பெருகும் மக்கள் தொகை, வளமாக மாற்றப்பட வேண்டும். அப்போது நிச்சயம் அந்த நாட்டுக்கு அது ஒரு வலுதானே தவிர, பாரம் அல்ல. முன்னாள் உலக வங்கியின் தலைவர் றொபேர்ட் மக்னமாரா தன் கட்டுரை ஒன்றில் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார். "எதிர்கால உலகின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக விளங்கப் போவது வளர்ந்துவரும் மக்கள் தொகைதான். பின்தங்கிய, வளர்முக நாடுகள் மக்கள் தொகையை நிலைப்படுத்தவும், இருக்கும் மக்களின் ஆற்றலைப் பெருக்கவும் முனைய வேண்டும். இதற்கு மானுடம் தவறுமேயானால், ஏழைகளின் வாழ்வு மேலும் தாழ்ந்த நிலைக்கும், வசதியுள்ளவர்களின் வாழ்வு எட்ட முடியாத உச்சத்துக்கும் சென்றுவிடும்" என்கிறார் அவர்.

சமூகம் பொறுப்புடன் செயற்பட்டு, அறிவின் அடிப்படையில் வாழ ஆரம்பிக்கும் போது மக்கள் மதிப்பை உணர ஆரம்பிப்பார்கள். மக்கள் பேறு என்பது அரியதான ஒன்றாக மாறும். அறிவு சார்ந்த வாழ்வில் மக்கள் வளமாக மாறுவார்கள். நாட்டின் வலுவாக இருப்பார்கள்.

- ஆசிரியர்

# 13 ஆம் அரசியல் திருத்தம்; அழுத்தங்கள் அதிகரிக்க வாய்ப்பு

## இப்படி கூறுகின்றார் சம்பிக்க

(கொழும்பு)

அரசியல் அமைப்பின் 13 ஆம் திருத்தம் தொடர்பாக எதிர்காலத்தில் சர்வதேச அழுத்தங்கள் அதிகரிக்கக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளதாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

13 ஆம் அரசியல் திருத்தத்துக்கு மேலே சென்று, அதிகாரப் பகிர்வினை வழங்க வேண்டும் என்று சர்வதேசத்தின் அழுத்தங்கள் அதிகரிக்கவிருப்பதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த சூழ்ச்சி குறித்து அறிந்திருந்தும் மௌனமாக இருந்தால், அடுத்த வருடம் மார்ச் மாதம் சர்வதேச நாடுகள் ஒன்றிணைந்து, 13 ஆம் திருத்தச் சட்டத்தின் அதிகார பகிர்வுகளை அமுலாக்க வேண்டும் என்ற கட்டாய அழுத்தங்களை ஏற்படுத்தும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, 13 ஆம் திருத்தச் சட்டத்தில் தேவையான விடயங்களை சேர்த்தும், தேவையற்ற விடயங்ளை நீக்கியுமே பயணிக்க வேண்டிய நிலை காணப்படுவதாக, அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார். மதுகமவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். தேவையற்ற விடயங்களை 13 ஆம் திருத்தச் சட்டத்தில் இருந்து நீக்கி, தேவையான விடயங்களை உள்ளடக்கிய தீர்வின் ஊடாகவே பயணிக்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

# விசேட தேவையுடையோருக்கு சலுகை; சட்டமா அதிபரிடம் புதிய சட்ட வரைபு

(கொழும்பு)

விசேட தேவையுடையோரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டம் சட்டமா அதிபரின் அனுமதிக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா நேற்று முன்தினம் நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

விசேட தேவையுடையோர் தொடர்பான ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரட்ண எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோதே அமைச்சர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் முற்பகல் வாய்மூல பதிலுக்கான கேள்வி நேரத்தின்போது ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இந்த வினாவை எழுப்பினார்.

குறிப்பாக இலங்கையில் அங்கவீனர்களின் விகிதாசாரம் குறித்தும் 2007 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகளின் அங்கவீனர்களுக்கான சாசனத்தில் இலங்கை கைச்சாத்திட்டுள்ளதா என்றும் எரான் விக்ரமரட்ண வினவினார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா 2011 ஆம் ஆண்டின் குடிசன மற்றும் வீட்டு வசதிகள் மதிப்பீடுகளுக்கு அமைய 1.62 வீத அங்கவீனர்கள் நாட்டில் இருப்பதாக சுட்டிக் காட்டினார்.

அத்துடன் 2007 ஆம் ஆண்டில் அங்கவீனர்களுக்கான ஐக்கிய நாடுகளின் சாசனத்தில் இலங்கை கைச்சாத்திட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதேவேளை 2006 ஆம் ஆண்டில் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட அங்கவீனர் உரிமைகளை பாதுகாக்கும் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படாமல் இருப்பதற்கான காரணம் குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரட்ண கேள்வியெழுப்பினார். இந்த சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் அனுமதி கிடைத்ததும் நாடாளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்வதாக அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்தார்.

# வடக்கில் மழை தொடரும்

(கொழும்பு)

நாட்டின் கிழக்கு திசை, கீழ் வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள தாழமுக்க நிலை காரணமாக, நாட்டின் பல பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்யலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலைநிலை அவதான நிலையத்தின் தகவல்படி, இந்த தாழமுக்க நிலையினால் அதிக அளவான மழை மேகங்கள் நாட்டை சூழ்ந்து காணப்படும் என்று தெரிகிறது.

இதனால் நாட்டின் பலபாகங்களில் மாலை மற்றும் இரவு வேளைகளில் கடுமையான இடியுடன் கூடிய மழை பெய்யலாம் என்று எதிர்வுகூறப்பட்டுள்ளது.

குறிப்பாக கிழக்கு, வடக்கு, வடமத்திய, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களில் கடுமையான மழை பெய்யக் கூடிய சாத்தியம் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளில் 150 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி ஏற்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இதேவேளை நேற்றுமுன்தினம் பெய்த மழையின் காரணமாக நாட்டின் பல பகுதிகளில் பல்வேறு அனர்த்தங்கள் பதிவாகியுள்ளன.

மாத்தறை, இரத்தினபுரி மற் றும் நுவரெலியா மாவட்டங்களி லும் மண்சரிவு மற்றும் மரம் வீழ்ந்த சம்பவங்களும் பதிவாகி இருப்பதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

# நிதி அமைச்சு பதவியை ஜனாதிபதி துறக்கவேண்டும்

## ஜாதிகஹெல உறுமய கோரிக்கை

ஜனாதிபதி அமைச்சுப் பதவிக்களை அலங்கரிக்கக் கூடாது என்றும் அது முற்றிலும் பொருத்தமற்றது என்றும் ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது. நிறைவேற்று அதிகாரம் கொ்ண்ட ஜனாதிபதி, அமைச்சுப் பதவிகளை வகிப்பது பொருத்தமற்றது என ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் கூறியுள்ளார். ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை தமது கட்சி ஏற்றுக்கொண்டாலும், பாதுகாப்பு அமைச்சைத் தவிர ஏனைய அமைச்சு பதவிகளை ஜனாதிபதி வகிப்பது பொருத்தமற்றது. இதனடிப்படையில் நிதியமைச்சையோ, ஏனைய அமைச்சுக்களையோ ஜனாதிபதி வகிப்பது ஏற்புடையதல்ல. அத்துடன் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி நீதிமன்றத்திற்கு பொறுப்புக்கூற முடியாது என்ற நிலையில், நாட்டில் உள்ள சகலரும் சட்டத்தின் முன் சமமானவர்கள் என்ற நிலைமை இல்லாது போயுள்ளது. ஜனாதிபதியானவர் நாடாளுமன்றத்திற்கும், நீதிமன்றத்திற்கும் பொறுப்புக் கூறவேண்டிய வகையில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் எனவும் ரத்ன தேரர் கூறியுள்ளார்.

# கடன்வாங்கி செய்மதி அனுப்புவதா?

## 'நெருப்பு' எடுக்கிறது ஐ.தே.க.

(கொழும்பு

உலகின் 45 ஆவது நாடாக செய்மதியை அனுப்புவதற்காக அரசாங்கம் 4200 கோடி ரூபாவை செலவழித்துள்ளது.

இந்த நிதியானது சீனாவிடம் இருந்து முற்று முழுதாக வணிகக் கடன் அடிப்படையில் பெறப்பட்டுள்ளது. ஆனால் வரவு - செலவுத் திட்டத்தில் மகளிர் விவகார அமைச்சுக்கு 10 கோடி ரூபாவே ஒதுக்கியுள்ளது. என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்த நாயக்க தெரிவித்தார்.

வன்னியில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள விதவைப் பெண்கள் செல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

அவர்கள் குறித்த புனர்வாழ்வுச் செயற்பாடுகள் திருப்திகரமாக இல்லை எனினும், அரசாங்கம் செய்மதிக்காக வணிகக் கடனாகப் பெறப்பட்ட 4200 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்றார்.




# உள்ளங்கையில் உலகம்

ச.திருமலைராஜன்

**அப்பிள் நிறுவனம் தன் ஐஃபோன் 5 மொடலில் கூகுள் மேப் வசதியை நீக்கிவிட்டு தன் சொந்த மேப் வசதியை அளித்திருக்கிறது. காரணம், அதன் மூலமாக சேகரிக்கப்படும் பயனர்களின் முக்கியமான தகவல்களுக்காகவே. அத்தகவல்களின் சந்தை மதிப்பு ஏராளம், அவற்றை சேகரித்து விற்பனை செய்வதற்காகவே இந்த நிறுவனங்கள் அடித்துக் கொள்கின்றன. ஒருவர் எந்தெந்த நேரங்களில் எங்கே செல்கிறார், எங்கே வசிக்கிறார், எதை வாங்குகிறார், எதை விரும்புகிறார் என்பதைத் தொடர்ந்து கண் காணித்து சேகரிப்பதன் மூலமாக அவரது நுகர்வுப் பாணியை அறிந்து கொள்வதன் மூலமாக அவருக்குத் தேவைப்படும் பொருட்களை அவரிடம் எளிதாக விளம்பரப்படுத்தி அவரிடம் விற்பனை செய்ய முடிகிறது.**

சமீபத்தில் நான் கலிபோர்னியா நெடுஞ்சாலையில் ஒரு வித்தியாசமான கார் ஒன்றைக் காண்கிறேன். அந்தக் காரின் தலையில் ஒரு சிறிய புகைக் கூண்டு போன்ற ஒன்று சுழன்று கொண்டிருக்கிறது. உள்ளே ஓட்டுநர் இருக்கையில் ஒருவரும், அருகில் ஒருவரும் சாவகாசமாக அமர்ந்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் என்னைப் போல ஸ்டீயரிங் பிடிக்காமல், ப்ரேக்கையும், க்ளட்சையும் அழுத்தாமல் ஹாயாக அமர்ந்து வருகிறார்கள். அந்த விட்டலாச்சார்யாக் காரோ அந்த நெரிசலான வீதியில் லாவகமாகப் புகுந்தும், நுழைந்தும், நெளிந்தும் என்னை முந்திச் சென்று விடுகிறது. எந்த விதமான தவறையும் செய்வதில்லை எந்தக் காரையும் இடித்து விபத்தையும் ஏற்படுத்துவதில்லை.

ஆம், அது கூகுள் தற்பொழுது சோதனை செய்து வரும் தானியங்கிக் கார். ஒரு கார் தன்னைத் தானே ஓட்டிக் கொண்டு போக வேண்டிய இடங்களுக்குச் செல்வது, இன்னும் ஒரு பத்தாண்டுகளில் நம் வீதிகளில் சாத்தியமாகப் போகிறது. எந்தவொரு இடத்துக்கும் நாமாகவே தேடி, வழி கண்டு பிடித்துப் போகும் சுவாரசியமான பயணங்கள் எல்லாம் ஏற்கனவே பழங்கதையாகி விட்டன.

சிறு வயதில் பல முறை நான் தொலைந்து போயிருக்கிறேன். ஆனால் இனி சிறு குழந்தைகளுக்கும் சொற்ப நேரம் கூட காணாமல் போய் விடும் தருணங்கள் அமையப் போவதில்லை. இனி எவருமே எங்குமே அவ்வளவு எளிதாகக் காணாமல் போய்விட முடியாது. அந்த சுவாரசியங்கள் எல்லாம் இனிமேல் சிறுவர்களுக்குக் கிடைக்கப் போவதில்லை.

நெடுந்தொலைவுப் பயணங்களின் பொழுது மனிதர்களிடம் வழி கேட்பதும், அவர்களும் உற்சாகத்துடன் போட்டி போட்டுக் கொண்டு நமக்கு உதவ முனையும் ஆர்வமும், அவர்கள் முகத்தில் காணப்படும் திடீர் மகிழ்ச்சிகளும், நட்பும், உற்சாகமும் பயணங்களின் அற்புதமான தருணங்களாகவே இருந்ததுண்டு. அவை இனி இல்லை.

கடல்களில் டொல்பின்களும், திமிங்கிலங்களும் செல்லும் வழிகளைக் கண்டறிவது முதல் பல சதுரமைல் பரப்புள்ள மாட்டுப் பண்ணைகளில் தொலைந்து போகும் மாடுகளைக் கண்டுபிடிப்பது வரை ஜி.பி.எஸ். சகல துறைகளிலும் பயன்பாட்டுக்கு வந்து விட்டது. பள்ளிக்கூடம் செல்லும் பிள்ளைகளிடம் ஜி.பி.எஸ் ஒன்றை மாட்டி விட்டுவிட்டால் அவர்கள் எங்குஇருக்கிறார்கள் என்ற தகவல் தெரிந்து விடுகிறது. தொலைந்து போகச் சாத்தியமுள்ள அனைத்து சாதனங்களிலும் குட்டியாக ஒரு ஜி.பி.எஸ். பொருத்தி விட்டால் அவற்றைத் தேடுவதும் கண்டு பிடிப்பதும் எளிதாகி விடுகிறது. கூகுளின் அபாரமான சேவைகளில் முக்கியமானது கூகுள் எர்த். நினைத்த நேரத்தில் நாம் உலகின் எந்த மூலையில் இருந்து கொண்டு உலகின் எந்த மூலைக்கும் பறந்து சென்று பார்த்து விட முடிகிறது. ஊர் நினைவு வருகிறதா உடனே மனவேகத்தில் ஊருக்குப் போய் கூகுள் எர்த் மூலமாக நமது தெருக்களில் நடந்துவிட்டு வந்து விடலாம். உலகின் பல இடங்களுக்கும் சமீபத்திய செயற்கோள் படங்களை அளிக்கின்றன. சேவையைப் பொறுத்து, உடனடியான நேரடியான படங்களை அளிக்கின்றது.

கூகுள் இந்த தொழில்நுட்பத்தை, அதன் அடுத்தடுத்த பயன்பாட்டுத் தளங்களுக்கு எடுத்துச் சென்று கொண்டேயிருக்கிறது. அவற்றில் ஒன்று கூகுள் கண்ணாடிகள். இந்த கண்ணாடிகளை மாட்டிக் கொண்டு நடக்கும் பொழுது நாம் ஒரு ஹோட்டலைக் காணும் பொழுதோ ஒரு கட்டடத்தைக் காணும் பொழுதோ அவற்றின் தகவல்களை அந்தக் கண்ணாடியிலேயே நமக்கு காட்சிப் படுத்தி விடுகிறது. சூப்பர் மார்க்கெட்டுக்குச் செல்லும் பொழுது நாம் ஒரு பொருளைக் கண்டால் உடனே அதன் பார் கோடைப் படித்து அந்தப்பொருள் பற்றிய அனைத்து விபரங்களையும் சேகரித்து நம் கண்ணாடியில் காண்பித்து விடுகிறது. கூடவே அதே பொருள் அருகாமையில் ஒரு பத்து மைல் சுற்று வட்டாரத்தில் இதை விட மலிவான விலையில் கிடைக்கும் விபரத்தையோ அதை எத்தனை பேர்கள் விரும்பியுள்ளார்கள் என்றோ இதை விட குறைவான விலையில் இதை விடத் தரமான இன்னொரு பொருள் இருக்கும் விபரத்தையோ உங்களுக்கு அளிக்கலாம்.

ஜி.பி.எஸ். தொழில் நுட்பத்தின் எண்ணற்ற சாத்தியங்களில் ஒன்றுதான் நான் நெடுஞ்சாலையில் கவனித்த அந்தக் கூகுள் காரும் கூட. ஏற்கனவே ஆளில்லா ட்ரோன் விமானங்கள் மூலமாக பாகிஸ்தானிலும், ஆப்கானிஸ்தானிலும் அமெரிக்கா குண்டுபோட்டுக் கொண்டிருக்கிறது. இதுவரை ஐந்து இலட்சம் மைல்களுக்கு மேலாக ஓட்டுநர் இல்லாத தானியங்கிக் கார்களை, வெற்றிகரமாக எந்தவித விபத்தும் இன்றி, பரபரப்பான சாலைகளில் ஓட்டிச் சோதித்திருக்கிறார்கள்.

கூகுள் கார்கள் வீதிக்கு வரத்தேவையான சட்டங்கள் நிறைவேற்றப்பட்டு அடுத்த பத்தாண்டுகளுக்குள் வீதியில் தானாகவே ஓடப்போகின்றன. நாம் செல்ல வேண்டிய விலாசத்தை அந்தக் காரிடம் சொல்லி விட்டு ஹாயாக பேப்பர் படிக்கவோ, செல்போனில் அரட்டை அடிக்கவோ, சினிமா பார்ப்பதோ அல்லது குட்டித் தூக்கம் போடவோ செய்யலாம். நம் இலக்கை அடைந்தவுடன் அதுவாகவே பார்க்கிங் லொட்டில் தன்னை நிறுத்திக்கொண்டு நம்மை இறங்கச் சொல்லி அன்பாகக் கோரும். கூகுள் தெருப்பார்வையின் உதவி கொண்டும், அந்தக் காரின் முன்னும் பின்னும் பக்கவாட்டுகளிலும் பொருத்தப்பட்ட சென்சார்களின் உதவி கொண்டும், இந்தக் கார்களில் உள்ள கம்ப்யூட்டர்கள் அந்தக் கார்களின் அனைத்து சென்சார்களும் பெறும் அனைத்துத் தகவல்களையும் வாங்கி, அலசி ஆராய்ந்து, பத்திரமான பயணத்துடன் சரியான இலக்கிற்குக் காரைத் தானாகவே ஓட்ட வழி செய்கின்றன.

ஜி.பி.எஸ் மென்பொருள்களின் சாத்தியங்கள் ஏராளமானவை. ஆனால் அவற்றின் பயன்பாடுகளுக்கு நடுவே, அவை தரும் வசதிகளுக்கு நாம் ஒரு கடுமையான விலையைக் கொடுக்க வேண்டி வருகிறது. அது நம் தனி மனித சுதந்திரம். மேற்குறிப்பிட்ட அனைத்து வகை சாத்தியங்களும் நமது தனிநபர் சுதந்திரத்திற்குள் பெரும் அளவு ஊடுருவல் செய்யப் போகின்றன.

நாம் ஒரு இடத்திற்குச்செல்லஅதன் விலாசத்தை அளித்து கூகுளில் தேடும் பொழுதே நாம் விசாரித்த ஊர்களில் உள்ள லொட்ஜ்களின் விளம்பரங்களும், அங்குள்ள உணவகங்களுக்கான கூப்பன்களும், வாடகைக் காருக்கான விளம்பரங்களும் நம்மை வந்து மொய்த்து விடுகின்றன. நாம் இணையத்தில். பரிமாறிக் கொள்ளும் எந்தத் தகவலும், தேடும் எந்த விபரமும், பார்க்கும் எந்தத் தளமும், கேட்கும் எந்த இசையும், படிக்கும் எந்தச் செய்தியும் நாம் மட்டுமேஅறிந்தவை அல்ல. அவை உடனடியாகச் சேகரிக்கப்பட்டு, நம் தேவைகளை ஊகித்து அவற்றுக்கேற்ற பொருட்களையும்,சேவைகளையும் நமக்கு விற்பனை செய்ய உதவும் தகவல் சுரங்கமாகவும், விளம்பரக் கருவியாகவும் கூகுள் மாற்றி விடுகிறது.

கூகுள் எர்த் மூலமாகவோ கூகுள் தேடல் மூலமாகவோ நாம் செய்யும் எந்தவொரு தேடலுமே தொடர்ந்து கைப்பற்றப்பட்டு உடனுக்குடன் நம் தேவைகள் தீர்மானிக்கப்பட்டு ஏராளமான விற்பனை நிறுவனங்களுக்கு விலைக்கு விற்கப்படுகின்றன. நமக்கென்று நம் அந்தராத்மா மட்டுமே அறிந்த இரசனைகள் விருப்பங்கள் என்று எதுவுமே மிச்சமிருக்கப் போவதில்லை.

வீடுகளும், அலுவலகங்களும், கார்களும், மனைவிகளும், கணவர்களும், வேலையாட்களும்,குழந்தைகளும், கள்வர்களும், காவலர்களும், காதலர்களும், கயவர்களும், காமுகர்களும், விலங்குகளும், பறவைகளும், மீன்களும் தொடர்ந்து ஏதோ ஒரு கருவியினால், ஏதோ ஒரு செயற்கைக்கோளினால் எப்பொழுதும் கண்காணிக்கப்பட்டுக் கொண்டேயிருக்கிறார்கள். இந்தக் கண்காணிப்புக்கு ஆட்படுபவர்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. பெரியண்ணன்கள் எப்பொழுதும் நம்மைப் பார்த்துக் கொண்டேயிருக்கிறார்கள். இந்த விதமான தனிநபர் போக்குவரத்துக்களைக் கண்காணிக்கும் செயற்கைக் கோள் இடம் சுட்டும் மென்பொருட்கள் பல்வேறு சமூக உளவியல் சிக்கல்களையும் ஏற்படுத்துகின்றன.

(17ஆம் பக்கம் பார்க்க)

# ஷிரானிமீதான குற்றச்சாட்டுக்கள் அரசியல் உள்நோக்கம் கொண்டவையா?

## பேராயர் டியூலிப் டி சிக்கோரா கேள்வி



(கொழும்பு)

பிரதம நீதியரசர் சிரானி பண்டாரநாயக்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் அரசியல் நோக்கங்களைக் கொண்டதாக உள்ளதென அதி வணக்கத்திற்குரிய பேராயர் டியூலிப் டி சிக்கோரா தெரிவித்துள்ளார்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் அரசியல் சார்ந்த 14 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவற்றில் பல குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் தற்போது திடீரெனக் குற்றம் சுமத்தப்பட வேண்டிய அவசியம் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எப்போதோ இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அண்மைய உச்ச நீதிமன்ற தீர்ப்புக்களை அடுத்து, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

குற்றச்சாட்டுக்களை சுமத்திய ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுபபினர்களே விசாரணை நடாத்தும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் கூடுதலாக அங்கம் வகிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இதனால் விசாரணைகள் பக்கச்சார்பற்ற முறையில் சுயாதீனமாக நடைபெறும் என்பது கவனிக்கப்பட வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை மீளப் பெற்றுக் கொள்ளவோ அல்லது பிரதம நீதியரசருடனான முரண்பாடுகளைப் பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்த்துக்கொள்ளவோ இன்னமும் அரசாங்கத்திற்கு சந்தர்ப்பம் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அண்மையில் வெலிக்கடைச் சிறைச்சாலையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பிலான விசாரணைகள் பக்கசார்பற்ற முறையில் நடைபெற வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

கைதிகளும் இந்த நாட்டின் பிரஜைகள் எனக் கருதி விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

# சிறைச்சாலைகளில் துப்பாக்கிகள் தேவையில்லை

(கொழும்பு)

சிறைச்சாலை பாதுகாப்பு அதிகாரிகளிடம் உள்ள துப்பாக்கிகள் அனைத்தையும் மீளப்பெறுவதற்கு பாதுகாப்பு அமைச்சு முடிவு செய்துள்ளது.

அண்மையில் வெலிக்கடைச் சிறைச்சாலையில், இடம்பெற்ற கலவரத்தின்போது அங்கிருந்த ஆயுதக்களஞ்சியத்தை கைதிகள் உடைத்து, 90 துப்பாக்கிகளை கைப்பற்றிய சம்பவத்தை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ எல்லா ஆயுதங்களையும் ஒப்படைக்குமாறு சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் நடந்து கொண்டிருந்தபோது, சிறைச்சாலை அதிகாரிகளுக்கு தன்னியக்க ஆயுதங்கள் வழங்குவதற்கு நான் எதிர்ப்புத் தெரிவித்திருந்தேன்.

ரி-56 ரகத் துப்பாக்கி போன்ற தன்னியக்க ஆயுதங்களைக் கவனமாக கையாளவேண்டும்.

தவறாக கையாளப்பட்டால், அப்பாவி உயிர்களை இழக்க வேண்டியிருக்கும் என்று தெரிவித்துள்ளார்.

# ஊழல் குற்றச்சாட்டுக்கள் ஆணைக்குழுவில் குவிகின்றன

## அரசியல்வாதிகளுக்கு அதிக சம்பந்தம்

(கொழும்பு)

முறையற்ற வகையில் சொத்துச் சேர்த்தமை தொடர்பில் ஆளும் கட்சியின் முன்னிலை நாடாளுமன்ற உறுப்பினர்கள் 30 பேருக்கு எதிராக இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில், குறித்த 30 பேருக்கும் எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக இலஞ்ச மற்றும் ஊழல்களுக்கு எதிரான ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சுமார் 60 பிரதேச சபை உறுப்பினர்களுக்கு எதிராகவும் இலஞ்சக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. அத்துடன் நாட்டின் அரசியல்வாதிகள் மற்றும் முக்கியஸ்தர்கள் என்று 400 பேர் மீது இலஞ்ச ஊழல் குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன என்று இலஞ்ச ஊழல்களுக்கு எதிரான ஆணைக் குழுவின் தலைவர் ஜெகத் பாலபட்டபெந்தி குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை பலர் முறைப்பாடுகளைச் செய்துள்ள போதும், பயம் காரணமாக தமது பெயர்களை குறிப்பிடாத நிலையில் தமது ஆணைக் குழுவினால் விசாரணைகளை மேற்கொள்ள முடியாதுள்ளதாகவும் பாலபட்டபெந்தி தெரிவித்துள்ளார்.

# கூடங்குளத்தால் நீண்டகால பாதிப்பு

(கொழும்பு)

தமிழகத்தில் அமைக்கப்படும் கூடங்குளம் அணுமின்னுற்பத்தி நிலையத்தினால் இலங்கையர்களுக்கு நீண்டகால பாதிப்புகள் ஏற்படலாம் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் அணுசக்தி அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் அனில் ரஞ்சித்தை மேற்கோள் காட்டி, ஆங்கில ஊடகம் ஒன்று இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

இதில் இருந்து ஏற்படுகின்ற கசிவின் காரணமாக, புற்று நோய் போன்ற நீண்டகால நோய்கள் ஏற்படலாம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அணுக்கசிவுகள் உணவுப் பொருட்களில் பரவுவதால் இந்த நிலை ஏற்படலாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கிழங்குக்கறியில் "சயனைட்" கிளம்பியது சர்ச்சை

## நாடாளுமன்றில் பரபரப்பு

நாடாளுமன்றில் பரிமாறப்பட்ட உணவில் சயனைட் நஞ்சு கலக்கப்பட்டதா என்ற சந்தேகம் பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது. நாடாளுமன்ற சமையற்கூடத்துக்கு அனுப்பப்பட்ட கோஹிலா கிழங்கில் சயனைட் நச்சுப் பொருள் கலந்திருந்தது அரச இரசாயனப் பகுப்பாய்வாளரின் விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த 9 ஆம் திகதி நாடாளுமன்ற சமையற் கூடத்தில் சமைக்கப்பட்ட கோஹிலாக் கிழங்குக் கறி, வழக்கத்துக்கு மாறாக சிவப்பு நிறத்தில் இருந்தது. இதையடுத்து, சமைக்கப்பட்ட மற்றும் சமைக்கப்படாத கிழங்கு மாதிரிகள் அரச இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இதையடுத்து மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் முடிவு நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்று தெரிவித்துள்ளது. இந்த அறிக்கையிலேயே, நாடாளுமன்ற சமையற் கூடத்துக்கு அனுப்பப்பட்ட கோஹிலா கிழங்கில் சயனைட் நஞ்சு கலந்திருப்பது கண்டறியப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நாடாளுமன்றப் பொலிஸார் பலரிடம் வாக்குமூலங்களைப் பெற்றுள்ளனர். விசாரணைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. அதிகளவில் பயன்படுத்தப்பட்ட உரம், அல்லது பூச்சிக்கொல்லியினால் கோஹிலா கிழங்கில் சயனைட் நச்சு ஏற்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுவதாகவும் கொழும்பு ஆங்கில வாரஇதழ் தெரிவித்துள்ளது.

# சீறிப் பாய்கிறார் ரணில் பி.பி.சி. செய்தியாளர்மீது

(கொழும்பு)

பி.பி.சி.யின் கொழும்புச் செய்தியாளர்கள் அரசின் வலையில் சிக்கியுள்ளதாகவும் அரசிடமிருந்து சலுகைகளைப் பெற்றுக் கொண்டு எதிர்க்கட்சிக்கு எதிராக செயற்பட்டு வருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குற்றம் சாட்டியுள்ளார்.

அத்துடன் பி.பி.சி ஊடகவியலாளர்களின் நடவடிக்கைகள் குறித்து விசாரணை நடத்துமாறு எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க அந்த ஊடக நிறுவனத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார். பி.பி.சி ஊடகத்திற்காக பணியாற்றி வரும் சந்தன கீர்த்தி பண்டார மற்றும் எல்மோ பெர்னாண்டோ ஆகியோரின் நடவடிக்கைகள் குறித்து விசாரணை நடத்தமாறு, ரணில் விக்ரமசிங்க பி.பி.சி.யின் தலைவர் கிறிஸ்டோபர் பெட்டன் பிரபுவிடம் கோரியுள்ளார்.

குறித்த இரண்டு ஊடகவியலாளர்களும் பி.பி.சி.யின் ஊடக ஒழுக்க விதிகளை மீறிச் செயற்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

அரசாங்கத்தினால் வழங்கப்படும் 12,00,000 ரூபா பெறுமதியான வட்டியில்லா வாகன கடனுக்காக விண்ணப்பித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த வாகனக் கொள்வனவிற்கான வட்டித் தொகை மக்களின் வரிப் பணத்தினால் ஈடு செய்யப்பட உள்ளதாகத் தெரிவித்துள்ளார். குறித்த ஊடகவியலாளர்களின் இந்த நடவடிக்கை ஊடக ஒழுக்க விதிகளுக்குப் புறம்பானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வாகனங்களையும், மடிக்கணனிகளையும் பெற்றுக் கொண்ட சில ஊடகவியலாளர்கள் தமக்கு எதிராக செய்திகளை வெளியிட்டு வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

# கொழும்பில் போதைவர்த்தகம் உச்சம்; பொலிஸாருடன் 'பனியுத்தம்' ஆரம்பம்

(கொழும்பு)

கொழும்பு நகரில் சூடு பிடித்திருக்கும் போதைப்பொருள் வர்த்தகம் காரணமாக கோட்டை மேயருக்கும் பொலிஸ் திணைக்களத்துக்கும் இடையில் பனிப்போர் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது.

இதன் ஒரு கட்டமாக கோட்டை பிரதேசத்தில் போதைவஸ்து வர்த்தகத்துடன் தொடர்புடைய பொலிஸ் அதிகாரிகளின் பெயர்களை வெளிபபடுத்தப் போவதாக கோட்டை மாநகரசபையின் மேயர் ஜனக ரணவக்க எச்சரித்துள்ளார்.

தாம் இந்தியப் பயணத்தை முடித்துக்கொண்டு இந்த வாரம் நாடு திரும்பியதும் இந்தத் தகவல்களை வெளியிடப் போவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்காக செய்தியாளர் சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்து அதில் வைத்து போதைவஸ்து வர்த்தகத்தில் தொடர்புடைய பொலிஸ் அதிகாரிகளின் பெயர்களை வெளியிடப்போவதாக ஜனக தெரிவித்துள்ளார்.

போதைவஸ்து வர்த்தகத்தில் ஈடுபடுபவர்களுடன் தொடர்புடைய பொலிஸ் அதிகாரிகளால் தமது உயிருக்கு ஆபத்து உள்ளதாக அவர் பொலிஸ் மா அதிபருக்கு அறிவித்துள்ளார்.

எனினும் நாட்டில் உள்ள சட்டத்தின்படி மேயர் ஒருவருக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்க முடியாது என்று பொலிஸ் மா அதிபர் பதிலளித்துள்ளார்.

இந்தநிலையில் மேயரின் கருத்துக்கள் பொலிஸ் திணைக்களத்துக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தயுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் குற்றம் சுமத்தியுள்ளார்.

# சீனப்பெண் கைது

(கொழும்பு)

சுற்றுலா வீசாவில் இலங்கைக்கு வந்து வியாபாரத்தில் ஈடுபட்ட சீனப் பெண் பிரஜை ஒருவர் கண்டியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கண்டி பொலிஸ் குழு ஒன்று மேற்கொண்ட தேடுதலின் போது இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண் கண்டி பிரதேசத்தில் கையடக்கத் தொலைபேசி விற்பனையில் ஈடுபட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை கண்டி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# வடக்கில் சகஜநிலை; ஜனாதிபதிக்கு பாராட்டு



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் சகல உரிமைகளுடன் வாழும் சகஜநிலையை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஏற்படுத்தி தருவார் என்ற நம்பிக்கை எமக்குண்டு என ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் 67ஆவது பிறந்தநாள் நிகழ்வு அண்மையில் இலங்கை போக்குவரத்து சபையின் வடபிராந்திய தலைமையலுவலகத்தில் நடைபெற்ற போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


அங்கு அவா உரையாற்றுகையில், தென்னிலங்கை மக்கள் எவ்வாறு சுதந்திரமாகவும், சுபீட்ச மாகவும் வாழ்கின்றார்களோ அவ்வாறே வட இலங்கை மக்களும் வாழ்கின்ற ஓர் சூழலை ஜனாதிபதி எமக்கு ஏற்படுத்தி தந்துள்ளார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்திலேயே அழிவு யுத்தத்திற்கு முடிவுகட்டப்பட்டு தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழக் கூடிய சூழல் ஏற்பட்டுள்ளது.

கூடிய வாக்குப் பலத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை கொண்ட அரசாங்கமாக ஜனாதிபதி தலைமையிலான அரசு திகழ்கின்றது.

எனவே இவரது ஆட்சிக காலத்தில் தமிழ் மக்களுக்கு பூரண உரிமைகிடைக்கும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது என அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் 51ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி கேணல் பாரிஸ், சபையின் வடபிராந்திய முகாமையாளர் அஸ்கர், உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# பயிற்சிக் கருத்தரங்கு



(யாழ்ப்பாணம்)

கிராம அபிவிருத்தித் திணைக்களம் யு.என்.ஏச்.சி.ஆர். நிறுவன அனுசரணையுடன் யாழ். மாவட்டத்திலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்களை வலுப்படுத்தும் நோக்குடன் பயிற்சிக்கருத்தரங்குகளை பிரதேச செயலக பிரிவுகள்தோறும் நடாத்தி வருகின்றது.

அந்தவகையில், வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சங்கரத்தை, பண்ணாகம், அராலி, தொல்புரம் ஆகிய இடங்களில் 5 பிரிவுகளாக இந்தப் பயிற்சிக் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன. ஒவ்வொரு பிரிவிலும் அண்மித்த இடங்களிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்களைச் சேர்ந்த 20 பேர் இப்பயிற்சி நெறியில் கலந்துகொண்டு பயன்பெற்றனர். இதில் கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அதிகாரிகள் மற்றும் யு.என்.ஏச்.சி.ஆர். நிறுவன அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

## தரம் 9 மாகாணமட்டப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணி


(அச்சுவேலி)

தற்போது நடைபெற்றுவரும் தரம் 09 இற்கான மாகாணமட்டப் பொதுப் பரீட்சைக்குத் தோற்றிய யாழ்ப்பாண வலய மாணவர்களின் வினாத்தாள்களின் மதிப்பீட்டுப் பணிகள், யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகத்தின் முகாமைத்துவ மண்டபத்தில் இடம்பெற்று வருகின்றது.

ஒவ்வொரு பாட வினாத் தாள்களும் பரீட்சை இடம் பெற்ற மறுநாளே அப்பாடத் துறை சார்ந்த ஆசிரியர்களினால் பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோரின் மேற்பார்வையின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றன.

மேலும் மதிப்பீட்டின் பின்னர் ஒவ்வொரு பாடசாலையினதும் மாணவர்கள் பெற்றுக் கொண்ட புள்ளிகள் ஒரே பார்வையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு அவை தனித்தனியாக படிவங்களில் பதிவுசெய்யப்பட்டும் வருகின்றன. (03)

## பரமர் சங்கமம்



"சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி" எண்ட பழமொழி தான் ஞாபகத்துக்கு வருகுது.

ஏனெண்டா கடந்த 10ஆம் திகதி சனிக்கிழமை மாலை ராஜாத்தியேட்டர் ஒழுங்கேல அந்த ஊடகவியலாளரைக் கண்டன்.

ஏற்கனவே தெரிந்த நண்பர்தான். கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் இருந்து வெளிவரும் அச்சு ஊடகங்கள் இரண்டுக்கும் மேற்பட்டதுக்கு சேகரிக்கும் செய்திகளை வஞ்சகம் இல்லாமல் பகிர்ந்தளிப்பவர்.

"2011ஆம் ஆண்டு டிசம்பர் 19ஆம் திகதி வெளியான பரமர் சங்கமம் எல்லாம் சரி. வடபகுதி ஊடகச் சங்கம் பற்றித் தெரிவித்து இருந்தது பிழை; அதில் அங்கத்தவராகவுமில்லை" எண்டார்.

"பிழையெண்டால் அதைத் தெரிவிக்கவேண்டியது தான் ஆனைகூட அடிசறுக்கும். உதாரணமாக நீர்கூட பல செய்திகளில் பிழை விட்டிருப் பீர். ஏன் ஒரு சம்பவத்தை அத்தனை ஊடகமும் ஒவ்வொண்டும் ஒவ் வொரு மாதிரித்தான சொல்லுது" எண்டன். மெதுவாக நழுவினார்.

ஆயினும் சம்பவத்தை மக்களுக்கு உடனடியாகத் தெரிவித்து விடுகிறது. அதுதானே ஊடக, பத்திரிகா தர்மம். எனக்குப் பத்திரிகையாளர் சங்கம் சம்பந்தமாகக்கிடைத்த தகவலை மக்கள் மயப்படுத்த அதில் அங்கத்தவராக இருந்துதான் செய்ய வேண்டுமெண்டதும் நியதி இல்லையே!

நியதியாக இருக்கவும் முடியாது; இருக்கக்கூடாது. ஊடகவியலாளர்களுக்கு தகவல்களைப் பெறச் செல்கின்ற யாழ்.போதனாவைத்தியசாலை மற்றும் அரச, தனியார் செயலகங்களில் பல தடைகள், கட்டுப்பாடுகள் போடப்படுகின்றன.

அவற்றை நிவர்த்தி செய்வதற்கு ஊடக அமைப்புகள் தேவை. 2011 இல் யாழ்.இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட சுதந்திர ஊடகவியலாளர் சங்கம் என்ன செய்கிறது?

விழாவொன்று எடுத்து தலைவர், சார்புநிலை ஊடகவியலாளர்களுக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்ததை அறிய முடிந்தது. ஏழை, வசதிகள் இல்லாத ஊடகவியலாளர்களுக்கு முன்னேற்ற கரமான செயல்பாடுகளில் ஈடுபடுவதாக அறியமுடியவில்லை.

முன்னதாக இருந்த சங்கத்துக்கு வெளிநாட்டு நிறுவனமொன்று குறிப்பிட்ட தொகையை யுத்த நெருக்கடி காலத்தில் வழங்கி இருந்தது. தனியார் ஒருவரிடமா வழங்க முடியும்?

2005ஆம் ஆண்டளவில் எல்லாமாக நான்கு நாளிதழ்கள் வெளிவந்து கொண்டிருந்தன. அவற்றில் எல்லாமாக 40, உட்பட்ட ஊடகவியலாளர்களே அப்பொழுது இருந்தனர்.

வழங்கிய தொகையை உறுப்பினர்களுக்கு என்றில்லாமல் பங்கிட்டு வழங்கி இருக்கவேண்டும். அதனை விட்டு தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் குறிப்பிட்ட சிலர் அந்தத் தொகையைக் கபளீகரம் செய்திருந்தனரென்றே சொல்லப்பட்டிருந்தது.

அதுபிழை என்பவர்கள் இப்பொழுதும் காலங்கள் பெரிதாக ஓடிவிடவில்லை. எந்த நிறுவனம், மொத்தத் தொகை எவ்வளவு வழங்கி இருந்தது, அதை எவ்விதம் ஆராருக்கெல்லாம் வழங்கினார்கள் என்ற அறிக்கையை வெளியிட வேண்டும். தலைவர் கதிர்காமத்தம்பி என்பவரை மட்டுமே அதனில் பிரதஸ்தா பித்து இருந்தேன். பேச்சுக்குப் பேச்சு அது பிழை, பிழை எனச் சொன்ன ஊடகவியலாளர், மேலும் பரமேஸ்வரன், தயாபரன் என்றும் சிலபேர் களை அன்று குறிப்பிட்டுக் கதைத்தார். பரமர் சொன்னது பிழையெண்டால் சரியான உண்மையை வெளியிட வேண்டியது ஊடகவியலாளர் சங்கத்தின் பொறுப்பல்லவா? என்ன நான் சொல்லுறே...

## திருக்கார்த்திகை உற்சவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி - மீசாலை கிழக்கில் உள்ள சித்திரவேலாயுதப் பெருமான் ஆலயத்தில் திருக் கார்த்திகை உற்சவமும் கந்த புராண படலபூர்த்தியும் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளன.

நாளையதினம் காலை 8.00 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளும் தொடர்ந்து வள்ளியம்மை திருமணப்படலமும் இடம்பெறவுள்ளன. அத்துடன் வேலாயுதப் பெருமான் வள்ளியம்மை சமேதரராய் தீப ஒளி சூழ்ந்து வீதி வலம் வரும் காட்சியும் இடம்பெறவுள்ளது.

## பௌர்ணமி விழா

(சாவகச்சேரி)

கல்வாய் பூரணை புட்கல சமேத கரிகர ஐயப்பன் ஆலய மாதாந்த பௌர்ணமி உற்சவம் நாளை இடம்பெறவுள்ளது.

நாளை மாலை 4.00 மணிக்கு கும்ப பூசை நடைபெற்று, அதனைத்தொடர்ந்து அபிசேக ஆராதனைகள் நடைபெறவுள்ளதோடு, விசேட வசந்த மண்டபப் பூசையும் பதினெட்டாம் படி பூசையும் நடைபெறவுள்ளன.

எம்பெருமான் பூரணா புட்கல சமேதரராக உள்வீதி உலா வந்து அடியவர்களுக்கு அருள் பாலிக்கவுள்ளார். (இ)

## முரசின் இன்றைய பலன்

(26.11.2012 - திங்கட்கிழமை)


நந்தன வருஷம் கார்த்திகை மாதம் 11 ஆம் திகதி. நட்சத்திரம் அச்சுவினி முற்பகல் 10.40 வரை. திதி: திரயோதசி. பிற்பகல் 4.30 வரை. சித்தாமிர்தம்.
இராகுகாலம் 7.42 - 9.12 வரை. சுபநேரம் 12.12 - 1.42 வரை
-நாளை திருக்கார்த்திகை விரதம்-
(குமராலயதீபம்)

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | உற்சாக மனது. வெகுநாள் விருப்பம் நிறைவேறும். கூடுதல் மூலதனம் செய்து, தாராள பணவரவு. உறவினர்களின் வருகை, வீட்டில் மகிழ்ச்சி. உத்தியோகத்தர்களுக்கு பாராட்டு. |
| ரிஷபம் | உங்களை சிலர் தவறாக நினைக்கக் கூடும். நிதானம் சிரமம் தவிர்க்கும். கூடுதல் உழைப்பு. மிதமான பணவரவு. அறப்பணி ஆர்வம். பிறருக்கும் உதவுவீர்கள். புத்திரரால் மகிழ்ச்சி. |
| மிதுனம் | தொடங்கும் செயல்களில் வெற்றி. தொழில் அபரிமித வளர்ச்சி. உபரி வருமானம். இல்லறத்துணை விரும்பியது தருவீர்கள். எதிர்பார்த்த சுபசெய்தி வரும். உறவினர் உதவுவர். |
| கடகம் | சிலரது பேச்சு சங்கடப்படுத்தலாம். வேலைச்சுமை குறையும். சராசரி பணவரவு. நண்பர் கொண்டாடுவர். உடல்நலம் சிறக்கும். வெளியூர் பயண வாய்ப்பு. மாணவர்க்கு உயர்ச்சி. |
| சிம்மம் | பொறுமையுடன் செயல்படுவீர்கள். தொல்லைகள் நீங்கும். வெற்றி வரும். தொழில், இலக்கு நிறைவேறும். தாராள பணவரவு. சேமிப்பீர்கள். இனிய பேச்சால் காரியம் நிறைவேறும். |
| கன்னி | மனதில் கலை உணர்வு. அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வீர்கள். தொழில் அபிவிருத்தி. உபரி வருமானம். பழைய விவகாரத்தில் நல்ல தீர்வு. பொன் பொருள் சேர்க்கை. |
| துலாம் | அமைதியும் அன்பும். மனதில் புதிய நம்பிக்கை. முன்னேற்றகர பணி தொடங்குவீர்கள். ஆதாயம். வீடு, வாகன திருத்தம். சொந்த நலனில் அக்கறை. அவசியத் தேவை நிறைவேறும். |
| விருச்சிகம் | மனதில் சிறு அளவிலான நம்பிக்கை குறைவு. எதிர்பார்த்த பணம் வந்துசேரும். புதிய செலவு வரும். நெடுநாள் தேவை பூர்த்தியாகும். தாய்வழி உறவால் நன்மை. நட்பு சூழும். |
| தனுசு | சிலர் உங்களை அளவுக்கு மீறி புகழ்வர். விழிப்பாக இருந்தால் தொல்லை தவிர்க்லாம். பணிச்சுமை. அளவான பணவரவு. குடும்பத்தேவைக்கு கடன் பெறுவீர்கள். வாகன கவனம். |
| மகரம் | செயல்களில் திறமை. எதிர்கால வளத்திற்கு அனுகூலம் உருவாகும். தொழில் வளர்ச்சி. அதிக வரவு. வீட்டுப்பொருட்கள் வாங்குவீர்கள். அரசு உதவி கிடைக்கும். உறவுகள் வருகை. |
| கும்பம் | வீண்பேச்சு தவிர்க்கவும். உடல்நலத்தில் கவனம். தொழில் மந்தம். நண்பர் உதவி. வரவுக்கேற்ப செலவு. பயணத்திட்டத்தில் மாறுதல். பகையறிந்து விலகுதல் நன்மை. |
| மீனம் | நல்ல செயல்களில் ஆர்வம். நண்பர்களிடம் வரவேற்பு. தொழில் முன்னேற்றம். உபரி வருமானம். பகையறிந்து விலகுதல் நன்மை. வெளியூர் சுபசெய்தி. பிணி நீங்கி ஆரோக்கியம். |

# ஒப்பீடு வேண்டாம்

## புஜாரா வேண்டுகை



(மும்பை)

என்னை ராவிட்டுடன் ஒப்பிட்டு பேசுவது தவறானது என புஜாரா தெரிவித்துள்ளார்.

களத்தில் நிலைத்து நின்று ஆடுவது துடுப்பாட்ட வீரர்களுக்கு முக்கியம். அந்த வகையில் நான் தொடர்ந்து சிறப்பாக விளையாட முடியும் என்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். எப்போதும் அந்த நிலையை தக்க வைக்க முயற்சி செய்வேன். உள்நாட்டு போட்டிகளில் ஆடிய அதே உத்தியைத்தான் சர்வதேச போட்டியிலும் பின்பற்றுகிறேன்.

டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் தலா 10 ஆயிரம் ஓட்டங்களுக்கு மேல் எடுத்துள்ள ராகுல் ராவிட்டுடன் என்னை ஒப்பிடுவது தவறானது. நான் இப்போதுதான் சர்வதேச போட்டிகளில் அடியெடுத்து வைத்திருக்கிறேன்.

எனவே, எனக்கு கூடுதல் நெருக்கடியை ஏற்படுத்திக்கொள்ள நான் விரும்பவில்லை. நான் இந்திய அணியில் தொடர்ந்து இடம்பெற்று, எனது இயற்கையான ஆட்டத்தை தொடரவே விரும்புகிறேன்.


அகமதாபாத் போட்டியில் இரட்டைச் சதம் அடித்ததைவிட, மும்பை மைதானத்தில் சதம் அடித்தது சிறப்பானது. ஏனெனில், மும்பையில் துடுப்பாட்டம் செய்வது மிகவும் கடினம். இந்த சூழ்நிலையிலும் சதம் அடித்தது திருப்தியாக உள்ளது. தொடர்ந்தும் சிறப்பான ஆட்டத்தைவெளிப்படுத்துவேன் எனவும் அவர் தெரிவித்தார்.

# தொடர் மே.தீவுகள் வசம்

(குல்னா)

பங்களாதேஷ் அணிக்கெதிரான டெஸ்ட் தொடரை மேற்கிந்தியத்தீவுகள் அணி முழுமையாகக் கைப்பற்றிக் கொண்டது. பங்களாதேஷ், மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவதும், இறுதியுமான போட்டி பங்களாதேஷின் குல்னாவில் நடைபெற்றது. இதில் முதல் இனிங்ஸில் பங்களாதேஷ் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 387 ஓட்டங்களைப் பெற்றது. மேற்கிந்தியத்தீவுகள் அணி அதன் முதல் இனிங்ஸில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 648 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில், ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. இந்நிலையில் 261 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய பங்களாதேஷ் அணி, பெஸ்டின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் பங்களாதேஷ் அணி இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 287 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நசீர் உசைன் 94, ஹஷிப் அல் ஹசன் 97, தமிம் இக்பால் 28 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பெஸ்ட் 40 ஓட்டங்களைக் கொடுத்து ஆறு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

27 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக களமிறங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி ஐந்தாம் நாள் ஆட்டத்தின் மதியபோன இடைவெளிக்கு முன்னரே விக்கெட் இழப்பின்றி 30 ஓட்டங்களைப் பெற்று வெற்றியிலக்கை அடைந்தது. இதில் கிறிஸ் கெய்ல் ஆட்டமிழக்காது 20 ஓட்டங்களைப் பெற்றார். இதன் மூலம் டெஸ்ட் தொடரை 2 – 0 என்ற கணக்கில் மேற்கிந்தியத்தீவுகள் அணி கைப்பற்றிக் கொண்டது. போட்டியின் ஆட்டநாயகனாக சாமுவேல்ஸும், தொடர் நாயகனாக சந்தர்போலும் தெரிவானார்கள்.



# வெற்றியை நோக்கி ஆஸி.



(அடிலெய்ட்)

தென்னாபிரிக்க அணிக்கெதிரான அடிலெய்ட் டெஸ்ட் போட்டியில் வெற்றியை நோக்கி அவுஸ்ரேலிய அணி பயணிக்கின்றது.

தென்னாபிரிக்க, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டி அடிலெய்டில் நடைபெற்று வருகின்றது.

இதில் இரண்டாவது இனிங்ஸில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 111 ஓட்டங்களைப் பெற்றிருந்த அவுஸ்ரேலிய அணி நான்காம் நாள் ஆட்டத்தை நேற்றுத் தொடர்ந்தது. இதில் மேலும் 156 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்து. இரண்டாவது இனிங்ஸிற்காக எட்டு விக்கெட்டுக்களை இழந்து 267 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் அவுஸ்ரேலிய அணி ஆட்டத்தை நிறுத்தியது. இதில் மைக்கல் ஹசி 54, மைக்கல் கிளார்க் 38, டேவிட் வோனர் 41, பற்றிசன் ஆட்டமிழக்காது 29 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மோர்கல், கிளெய்ன்வெற்ட் தலா மூன்று, ஸ்டெயின் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 430 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடி வரும் தென்னாபிரிக்க அணி நேற்றைய நான்காம் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்ட வேளை நான்கு விக்கெட்டுக்களை இழந்து 77 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் பீற்றர்சன் 24 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். ஆட்டமிழக்காது பிளிசர்ஸ் 19, டிவில்லியர்ஸ் 12 ஓட்டங்களுடன் களத்திலுள்ளனர். பந்து வீச்சில் லம்ப் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இப்போட்டியில் தென்னாபிரிக்க அணி வெற்றி பெற எட்டு விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் இன்னும் 353 ஓட்டங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அவுஸ்ரேலியா முதல் இனிங்ஸ் 550. தென்னாபிரிக்கா முதல் இனிங்ஸ் 388. இன்று போட்டியின் இறுதி நாளாகும்.

# கைகொடுத்த ஆலோசனை

(மும்பை)

பந்து வீச்சுப் பயிற்சியாளர் முஸ்தாக் அகமட் கொடுத்த ஆலோசனையின் மூலமே இந்திய அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதல் இனிங்ஸில் சிறப்பாக செயற்பட முடிந்தது என இங்கிலாந்து அணியின் சுழற்பந்து வீச்சாளர் பனிசர் தெரிவித்தார். ஸ்வானுக்கும் ப்யிற்சியாளர் முஸ்தாக் பல நுணுக்கங்களைக் கற்று கொடுத்துள்ளார். இந்தியாவில் முஸ்தாக் அகமட் பல போட்டிகளில் விளையாடியுள்ளதால் இந்திய சூழ்நிலை அவருக்கு நன்கு தெரியும். இந்திய வீரர்கள் எந்தப் பந்தை அடித்து ஆடுவார்கள், எந்தப் பந்தில் திணறுவார்கள் என்பது அவருக்குத் தெரிந்து இருக்கிறது. அதனை எங்கள் இருவருக்கும் கற்று கொடுத்துள்ளார். அவர் கொடுத்த ஆலோசனை மூலம் சச்சினை வீழ்த்தினேன் எனவும் தெரிவித்தார்.

# தொடர்ந்தும் சொதப்பல்

ராஜ்யசபா எம்.பி. ஆகிவிட்ட சச்சின், கிரிக்கெட் போட்டிகளில் தொடர்ந்து சொதப்புகிறார். இங்கிலாந்து அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதல் இனிங்ஸில் போல்டான இவர் இரண்டாவது இனிங்ஸிலும் 8 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்து சொந்த ஊர் ரசிகர்களை ஏமாற்றியுள்ளார். கடந்த 23 ஆண்டுகளாக விளையாடி வரும் சச்சின், சமீப காலமாக ஓட்டங்கள் எடுக்க திணறி வருகிறார். கடைசியாக விளையாடிய 6 டெஸ்டில், 10 இன்னிங்ஸில் 15, 8, 25, 13, 19, 17, 27, 13, 8, 8 என மொத்தம் 153 ஓட்டங்களை மட்டுமே எடுத்துள்ளார். இதில் நான்கு முறை போல்டாகினார்.



# தோல்வியில் பிடியில் இந்தியா

(மும்பை)

இங்கிலாந்து அணிக்கெதிரான இரண்டாவது போட்டியில் இந்திய அணி தோல்வியின் பிடியில் சிக்கித் தவிக்கின்றது.

இந்திய, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான நான்கு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டி மும்பையில் நடைபெற்று வருகின்றது.

இதில் முதல் இனிங்ஸிற்காக ஆடிய இங்கிலாந்து அணி குக், கெவின் பீற்றர்சன் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் இங்கிலாந்து அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 413 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கெவின் பீற்றர்சன் 233 பந்துகளை எதிர்கொண்டு 20 பவுண்டரிகள், நான்கு சிக்ஸர்கள் அடங்கலாக 186 ஓட்டங்களையும், குக் 270 பந்துகளை எதிர்கொண்டு 13 பவுண்டரிகளுடன் 122 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் ஓஜா ஐந்து, அஸ்வின், ஹர்பஜன்சிங் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

86 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடி வரும் இந்திய அணி பனிசர், ஸ்வான் ஆகியோரின் சுழற்பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்து வருகின்றது. இறுதியில் நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, இந்திய அணி அதன் இரண்டாவது இனிங்ஸில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 117 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய கௌதம் கம்பீர் ஆட்டமிழக்காது 53 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். மற்றும் அஸ்வின் 11 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். மற்றைய அனைத்து வீரர்களும் ஒற்றை இலக்க ஓட்டத்துடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். பந்து வீச்சில் பனிசர் 61 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களை வீழ்த்தினார். ஸ்வான் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இந்திய அணி மூன்று விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் 31 ஓட்டங்களால்முன்னிலை பெற்றுள்ளது. இந்தியா முதல் இனிங்ஸ் 327. நேற்றைய நாள் மட்டும் 15 விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ரெய்லர், வில்லியம்ஸன் சிறப்பாட்டம்

# மீண்டது நியூசிலாந்து



(கொழும்பு)

ரெய்லர், வில்லியம்ஸன் ஆகியோரின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் நெருக்கடியிலிருந்து மீண்டது நியூசிலாந்து அணி. இலங்கை, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டி கொழும்பு பிரேமதாச விளையாட்டு அரங்கில் நேற்று ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிவரும் நியூசிலாந்து அணி முதலிரு விக்கெட்டுக்களையும் 14 ஓட்டங்களுக்குள் பறிகொடுத்து தடுமாறியது. இந்நிலையில் மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த ரெய்லர், வில்லியம்ஸன் இணை மிகவும் சிறப்பான முறையில் ஆடி அணிக்கு வலுவான ஆரம்பத்தைப் பெற்றுக் கொடுத்துள்ளனர். நேற்றைய முதல் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்ட வேளை, நியூசிலாந்து அணி இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 223 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் ரெய்லர் ஆட்டமிழக்காது 119 ஓட்டங்களையும், வில்லியம்ஸன் ஆட்டமிழக்காது 95 ஓட்டங்களையும் பெற்றுள்ளனர். இவ்விருவரும் இது வரை இணைப்பாட்டமாக 209 ஓட்டங்களைப் பெற்றுள்ளனர். பந்து வீச்சில் குலசேகர, எரங்க தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தியுள்ளனர். நேற்றைய முதல் நாள் ஆட்டம் ஒன்பது ஓவர்கள் மீதமுள்ள நிலையில் போதியளவு வெளிச்சமின்மை காரணமாக நிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# காலிறுதியுடன் வெளியேறியது வடமாகாணம்

(களனி)

தேசிய மட்ட கால்பந்தாட்டப் போட்டியில் வட மாகாண அணிகளான யாழ். மாவட்டம், மன்னார் மாவட்டத் தெரிவு அணிகள் காலிறுதிப் போட்டியுடன் வெளியேறியுள்ளது.

தேசிய கால்பந்தாட்ட அணிக்கு வீரர்களைத் தெரிவு செய்வதற்காக, 21 வயதுப்பிரிவு மாவட்ட அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்ட போட்டிகள் களனி மைதானத்தில் நடைபெற்றன.

இந்த போட்டிகளில் பங்குபற்றியிருந்த யாழ்ப்பாண மாவட்ட அணி கடந்த வியாழக்கிழமை அம்பாறை அணியினை 4-0 என்ற கோல் கணக்கில் வென்றிருந்து. தொடர்ந்து இரண்டாவது சுற்றில் கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா மாவட்ட அணியினை எதிர்கொண்டது.

இதில் ஆட்டத்தின் தொடக்கம் முதல் பந்தை தம் வசம் வைத்திருந்தது யாழ்ப்பாண மாவட்ட அணி. அடுத்தடுத்து 5 கோல்களைப் போட்டு வவுனியா அணிக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தது.

வவுனியா அணி பதிலுக்கு ஒரு கோலினைப் போட்டது. பதிலுக்கு யாழ்ப்பாண மாவட்ட அணி மேலும் ஒரு கோல் போட்டது. முதல் பாதி ஆட்டத்தில் 6:1 என்ற கோல் கணக்கில் யாழ்ப்பாண மாவட்ட அணி முன்னிலைபெற்றது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் யீாழ்ப்பாண மாவட்ட அணி மேலும் இரண்டு கோல்களைப் போட்டது. இதன் பின்னர் வவுனியா அணி மேலும் கோல்கள் போடாமல் தடுத்து வந்தது.

இறுதி நேரத்தில் வவுனியா மாவட்ட அணி ஆறுதலுக்கு ஒரு கோலினைப் போட்டது. இறுதியில் 8:2 என்ற கோல் கணக்கில் யாழ்ப்பாண மாவட்ட அணி வெற்றிபெற்று காலிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

காலிறுதிப் போட்டியில் கண்டி மாவட்ட அணியுடன் மோதிய யாழ். மாவட்ட அணி இறுதி வரை பெரும் போராட்டம் நடத்தியது.இறுதியில்0-2 என்ற கோல் கணக்கில் கண்டி மாவட்ட அணி யுடன் தோல்வியுற்று தொடரிலிருந்து யாழ். மாவட்ட அணி வெளியேறியது.

இதேவேளை, மன்னார் மாவட்ட அணி காலிறுதிப் போட்டியில் களுத்துறை மாவட்ட அணியுடன் மோதியது. இதில் களுத்துறை மாவட்ட அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. இந்நிலையில் வடமாகாண அணிகள் காலிறுதிப் போட்டியுடன் வெளியேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (93)




# விரைவில் இரண்டாவது சுற்று

(யாழ்ப்பாணம்)

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இரண்டாவது சுற்று ஆட்டங்கள் விரைவில் நடைபெறும் எனப் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதில் முதல் சுற்று ஆட்டங்கள் தற்போது நிறைவடைந்துள்ள நிலையில், ஒவ்வொரு குழுவிலும் அதிக புள்ளிகளைப் பெற்றுள்ள அணிகள் இரண்டாவது சுற்றுக்குத் தகுதிபெறும் என்றும், அதற்கு அமைய போட்டி அட்டவணை தயாரிக்கப்பட்டும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

அந்த வகையில் இரண்டாவது சுற்று ஆட்டங்கள் அடுத்த மாதம் முற்பகுதி அல்லது பிற்பகுதியில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி)

# தென்மராட்சி பிரதேச மட்ட கரப்பந்து மட்டுவில் ஐங்கரன் சம்பியன்

(மட்டுவில்)

தென்மராட்சிப் பிரதேச அணிகளுக்கிடையில் நடைபெற்ற ஜனாதிபதி தங்கக் கிண்ண கரப்பந்தாட்டப் போட்டியில் மட்டுவில் ஐங்கரன் அணி சம்பியனானது.

டயலொக் ஜி.எஸ்.எம். அனுசரணையுடன் தென்மராட்சிப் பிரதேச கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் நடைபெற்ற ஜனாதிபதி தங்கக் கிண்ணக் கரப்பந்தாட்டப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை குமரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

பல அணிகள் பங்குகொண்டபோதும், இதன் இறுதிப் போட்டிக்கு மட்டுவில் குமரன் அணியும் ஐங்கரன் அணியும் மோதின.

இதில் முதல் செட்டை 25-16, இரண்டாவது செட்டை 25-16, மூன்றாவது செட்டை 25-18 என்ற கணக்கில் கைப்பற்றிய மட்டுவில் ஐங்கரன் அணி, தென்மராட்சிப்பிரதேச மட்ட சம்பியனானதுடன், மாவட்ட மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பிரதேச மட்டப் போட்டிகள் நிறைவடைந்தவுடன் யாழ். மாவட்ட மட்டப் போட்டிகள் நடைபெறும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மாவட்ட மட்டப் போட்டிகள் எதிர்வரும் 17, 18ஆம் திகதிகளில் நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், பிரதேச மட்டத்தில் வெற்றிபெற்ற அணிகளைத் போட்டிக்குத் தங்களைத் தயார்படுத்திக் கொள்ளுமாறும் யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார். (118)

# வரலாற்றில் சூப்பர் கோல்



நட்பு கால்பந்துப் போட்டியில், சுவீடனின் இப்ராகிமோவிச் அடித்த கோல், கால்பந்து வரலாற்றில் சிறந்த கோல் என்று பாராட்டப்படுகிறது.

சுவீடன், இங்கிலாந்து அணிகள் மோதிய நட்பு கால்பந்து போட்டி, சுவீடனினில் உள்ள சோல்னா நகரில் நடந்தது. இதில் கப்டன் இப்ராகிமோவிச் (வயது-31), நான்கு கோல் அடிக்க சுவீடன் அணி, 4-2 என இங்கிலாந்தை வீழ்த்தியது.

இந்தப் போட்டியின் 84ஆவது நிமிடத்தில் சுவீடன் அணிக்கு பிரீ-கிக் கிடைத்தது. இதில் கிடைத்த பந்தை 6 அடி, 5 அங்குல உயரமுள்ள இப்ராகிமோவிச், 8 அடி உயரத்துக்கு அந்தரத்தில் பறந்து, சைக்கிள் கிக் பாணியில் கோல் ஏரியாவை நோக்கி அடித்தார். அப்போது 25 அடி உயரத்தில் பறந்த பந்து, 90 அடி தூரத்தில் இருந்த கோல் போஸ்ட்டுக்குள் புகுந்து சூப்பர் கோலாக மாறியது.

கடந்த 1986 உலக கோப்பை காலிறுதியில் இங்கிலாந்துக்கு எதிராக ஆர்ஜென்ரீனாவின் மாரடோனா, தனி ஆளாகச் சென்று அடித்த கோல், 1970இல் உலக கோப்பை இறுதிப் போட்டியில் பிரேசிலின் கார்லோஸ் அல்பெர்டோ அடித்த கோல்களை விட சிறந்ததாக பார்க்கப்படுகிறது.

இப்ராகிமோவிச் கூறுகையில், பந்து என்னிடம் வந்த போது, கோல் கீப்பர் அந்தப் பகுதியில் இல்லை. எதற்கும் முயற்சித்துப் பார்ப்போம் என அடித்தேன். அதிர்ஷ்டவசமாக கோலாகி விட்டது. இதில் அதிர்ஷ்டமும், திறமையும் சேர்ந்துள்ளது என்றார்.

நூற்றாண்டின் சிறந்த கோல் என வர்ணிக்கப்பட்ட நிலையில், இந்த ஆண்டின் முதல் 10 கோல் பட்டியலில் சேர்க்க முடியவில்லை. ஏனென்றால், இதற்கு ஒரு மணி நேரம் முன்பு தான், 2012ஆம் ஆண்டின் முதல்-10 கோல்களை, சர்வதேச கால்பந்து கூட்டமைப்பு (பிபா)தேர்வு செய்தது. இதனால், அடுத்த ஆண்டு வேண்டுமானால் பரிசீலிக்கப்படலாம்.

# ஜனாதிபதி தங்கக் கிண்ண கால்பந்து

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெற்றிக் கிண்ண கால்பந்தாட்ட போட்டித் தொடர் எதிர்வரும் 3ஆம் திகதி முதல் 9ஆம் திகதி வரை நாவலப்பிட்டி ஜயதிலக்க மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இப்போட்டித்தொடரில்பங்களாதேஷ், மாலைதீவு, பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகள் பங்குகொள்கின்றன. இப்போட்டியில் முதலாவது ஆட்டத்தில் இலங்கை-மாலைதீவு அணிகள் மோதுகின்றன. அதே தினம் மற்றொரு ஆட்டத்தில் பங்களாதேஷ்-பாகிஸ்தான் அணிகள் மோதுகின்றன.

பாகிஸ்தான் - மாலைதீவு, இலங்கை-பங்களாதேஷ் அணிகள் 5ஆம் திகதியும் மோதுகின்றன.


இப்போட்டித் தொடர் குறித்து இலங்கை கால்பந்தாட்ட முகாமையாளர் குறிப்பிடுகையில், நான்கு நாடுகளுக்கிடையிலான கால்பந்தாட்டப் போட்டியில் இலங்கை அணி சாதிக்கும் என எதிர்பார்க்கின்றோம். வலுவான அணியை நாம் தெரிவு செய்திருப்பது மகிழ்ச்சி. கால்பந்தாட்டப் போட்டிகளிலும் இலங்கை அணி முத்திரை பதித்து வருகின்றது. வீரர்களின் அர்ப்பணிப்பான செயற்பாட்டை வெளிப்படுத்துவதாக அமைகின்றது. ஜனாதிபதி தங்கக் கிண்ண கால்பந்துப் போட்டியின் வெற்றிக் கிண்ணத்தை இலங்கை அணி கைப்பற்றிக் கொள்ள வேண்டும் என்பதே எங்கள் இலக்கு. அது முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.



முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பாடசாலைகள், இளைஞர் கழகங்கள், விளையாட்டுக்கழகங்களைச் சேர்ந்த வீர,வீராங்கனைகளுக்கான கரப்பந்தாட்டப் பயிற்சி முகாம் கடந்த வாரம் துணுக்காய் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இப்பயிற்சி முகாமில் அதிகளவிலான வீர, வீராங்கனைகள் பங்குகொண்டு கரப்பந்தாட்டம் தொடர்பான விளங்களைக் கற்றுக்கொண்டனர். இப்பயிற்சி முகாமில்- தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி கரப்பந்தாட்ட பயிற்றுநர் தயாளபாலன், துணுக்காய் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் உட்பட பலர் கலந்து கொண்டு கரப்பந்தாட்டம் தொடர்பான நுணுக்கங்களைக் கற்றுக்கொடுத்தனர். பங்குகொண்டோரில் சிலருடன் பயிற்சியாளர்கள் இருப்பதைக் காணலாம். (93)

# தீர்வு எது என்று கூட்டமைப்பினர் சொல்ல வேண்டும்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இந்தியா தனது நிலைப்பாட்டை தளர்த்திக் கொண்டதன் மூலம் தமிழர்களுக்கு வழங்கியிருக்கும் தெளிவான செய்தி என்னவென்றால் - தற்போதைய சூழலில்



- யதீந்திரா கட்டுரையிலிருந்து -

இலங்கை அரசை முற்றிலுமாகப் பகைத்துக் கொள்ளும் வகையில் இந்தியா எந்தவொரு செயற்பாட்டையும் மேற்கொள்ளப் போவதில்லை என்பதே அந்தச் செய்தி. இதற்கு முன்னரும் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் இந்தியா தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியிருக்கிறது. இன்றைய சூழலில் கொழும்பிலிருந்து அதிகம் அன்னியப்படுவது பொருத்தமான ஒன்றல்ல என்பதுதான் இந்தியாவின் நிலைப்பாடாக இருக்க வேண்டும். ஆனால் இந்தியா இதன்மூலமும் இலங்கைக்கு ஒரு எச்சரிக்கைக் குறிப்பையும் வழங்கியிருக்கிறது - இந்தியா மனங்கொண்டால் இலங்கையை சர்வதேசத்திலிருந்து தனிமைப்படுத்த முடியும். எனவே இந்திய நலன்களுக்கு முரணாக இலங்கை செல்லுமிடத்து அதனைச் செய்வதற்கு இந்தியா ஒருபோதும் தயக்கம் காட்டாது என்பதையும் இந்தியா மறைமுகமாக உணர்த்தியே இருக்கிறது எனலாம். இதனை இலங்கையும் நன்கு அறிந்தே செயற்படுகிறது.

ஆனால் இங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் விடயங்களைப் பார்த்தால், ஒரு விடயம் வெள்ளிடைமலை. நடைபெற்றுக் கொண்டிருக்கும் அனைத்து விடயங்களும் இந்திய - இலங்கை நலன்களை மையப்படுத்தியதாக இருக்கின்றதேயன்றி, தமிழர் நலனை முன்னிறுத்தியதாக இல்லை. கொழும்பை அதிகம் பகைத்துக் கொள்ளாத ஓர் அணுகுமுறையை இந்தியா கொண்டிருக்கிறதெனின், இந்தியாவின் ஊடாக எத்தகைய உதவியை எதிர்பார்க்கலாம் என்பது குறித்து தமிழர் தலைமை சிந்திப்பது அவசியம். தவிர, நாங்கள் கூறியவற்றை மன்மோகன் சிங் மிகவும் கூர்மையாக அவதானித்துக் கொண்டிருந்தார். அவரது பதிலில் ஒரு உறுதி தெரிந்தது என்றவாறு கதைகள் சொல்லிக்கொண்டிருப்பதை விடுத்து, தமிழர்களின் தலைமையாசனத்தைக் கைப்பற்றியிருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஒரு தெளிவான, பகிரங்கமான அரசியல் நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டியிருக்கிறது. இந்தியா குறித்து அபரிமிதமான நம்பிக்கைகளை வெளியிட்டுக் கொண்டிருப்பதைவிடுத்து, நிலைமைகளை துல்லியமாக மதிப்பிட்டு அதற்கேற்ப செயலாற்றுவதே இன்றைய தேவையாகும்.

இலங்கையின் வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை பூர்த்தி செய்யும் வகையில் ஏற்றுக்கொள்ளக் கூடியதொரு தீர்வு அவசியம் என்னும் கருத்தை இந்தியா கொண்டிருக்கிறது. ஆனால் அந்த ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வு எவ்வாறு அமைய வேண்டும் என்பதை இந்தியா ஒருபோதுமே கூறப்போவதில்லை. அதனை கூறவேண்டிய பொறுப்பு தமிழர் தலைமையான கூட்டமைப்பிற்கே உண்டு. ஆனால் இந்தியா ஆங்காங்கே வெளிப்படுத்திவரும் கருத்துக்களைத் தொகுத்துப் பார்த்தால், 13ஆவது திருத்தச்சட்டத்தின் அடிப்படையிலான ஒரு தீர்வில் தமிழர் தரப்பு உறுதியாக இருப்பின் அதற்கு இந்தியா உதவ முன்வரலாம் என்றே தெரிகிறது. ஆனால் தமிழ் தேசியக் கூட்டமைப்பிடம் அவ்வாறானதொரு உறுதியான நிலைப்பாடோ, ஆகக் குறைந்தது அதற்கான உடன்பாடு கூட இல்லை.

13ஆவது திருத்தச் சட்டம் என்பது இந்தியாவைப் பொறுத்தவரையில், அதன் பனிப்போர் கால மூலோபாயத்தின் விளைவான இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் வெளியீடுகளில் ஒன்றாகும். இன்றைய இந்தியா, மூலோபாய ரீதியாகவும், நாடுகளுக்கு இடையிலான உறவுரீதியாகவும் முற்றிலும் வேறுபட்டதொரு இந்தியாவாக இருக்கிறது என்பதை தமிழ் தலைமை கவனிக்க வேண்டும். எனவே பனிப்போர் கால இந்தியாவிடம் எதிர்பார்த்ததை, இன்றைய இந்தியாவிடம் கூட்டமைப்பு எதிர்பார்ப்பது கூட்டமைப்பின் அரசியல் இயலாமையையே நிரூபிக்கின்றது.

எனவே இந்தியா வழங்கியிருக்கும் தெளிவான செய்தியை கருத்தில் கொண்டு, தமிழ் தேசியக் கூட்டமைப்பு 13ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் பயணிப்பதற்கான உறுதிப்பாட்டை வெளிப்படுத்துவதே இன்றைய காலத் தேவையாகும். அடுத்தவர்கள் எங்களுக்கான தீர்வை சொல்லுவார்கள் என்னும் கற்பனையில் கயிறு திரித்துக் கொண்டிருந்தால், 1970ஆம் ஆண்டு, தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகத் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்கள் கூறிய அதே வாசகத்தை, இன்னும் ஒரு சில வருடங்களில், திருகோணமலை காளிகோவில் முன்றலில் நின்று கொண்டு, இன்றைய தமிழரசுக் கட்சியின் தலைவர் இராஜவரோதயம் சம்பந்தன் ஐயா சொல்ல வேண்டிவரும்.

# எழுபது வயதில்...









கற்றுக்கொள்ள எந்த வயதும் தடையில்லை என்பதை நிரூபிக்கும் வகையில், எழுபது வயதில் ஒரு பெண் Under water photography (நீருக்குள் மூழ்கி புகைப்படம் எடுத்தல்) கலையை கற்றுக்கொண்டதுடன், அந்தத் துறையில் பெரும் நிபுணராகி, அது தொடர்பாக மூன்று புத்தகங்கள் எழுதியுள்ளார் என்றால் ஆச்சரியம் தானே.

அவர் பெயர் லெனி ரிபென்ஸ்டால். 1902இல் ஜேர்மனியில் பெர்லின் நகரில் பிறந்தவர். ஓவியராக, நடனக் கலைஞராக, நடிகையாக, ஒளிப்பதிவாளராக, தயாரிப்பாளராக படிப்படியாக எழுச்சி பெற்றவர்.

ஒலிம்பிக் போட்டிகளை, முதன் முதலாக ஆவணப்படமாக தொகுத்தவர் இவரே. 1936இல் பெர்லினில் நடைபெற்ற இந்த ஒலிம்பிக் போட்டிக்காக, அறுபதுக்கும் மேற்பட்ட ஒளிப்பதிவு கலைஞர்களை இயக்கினார். ஸ்லோ மோஷன், பனோராமிக் வியூ, பிஷ் ஐ என்று இன்றைய காலகட்டத்தில் பயன்படுத்தும் அனைத்து வித தொழில்நுட்பத்தையும், அப்போதே செயல்படுத்திக் காட்டியவர்.

ஜேர்மனியின் சர்வாதிகாரி ஹிட்லரை, உலகிற்கு படமாக அறிமுகப்படுத்தியவர். அவர் நடத்திய நாஜி கட்சியின் மாநாடு மற்றும் பிரம்மாண்டமான பேரணியை தொகுத்தவர். பின், ஆட்சி மாறியதும் ஹிட்லரின் ஆதரவாளர் என்ற நோக்கில் கைது செய்யப்பட்டார். ஆனால், இவர் கைது செய்யப்பட்டதில் எந்தவித நியாயமும் இல்லை.. இவர் ஒளிப்பதிவாளராக தன் கடமையைச் செய்ததைத் தவிர, வேறு எவ்வித தவறும் செய்ததற்கான முகாந்திரம் இல்லை என்று சொல்லி நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டவர்.

இப்படி நடன மாதுவாக, நடிகையாக, சினிமா தயாரிப்பாளராக, ஒளிப்பதிவாளராக பல்வேறு பரிணாமங்களை எடுத்திருந்தாலும், கடைசியில் இவரது மனது மையம் கொண்ட இடம் புகைப்படத்துறை தான். புகைப்படத்துறையின் பல்வேறு பரிமாணங்களையும் தொட்டவர்.


ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான சூடானுக்கு சென்று, அங்குள்ள பழங்குடியினர் பற்றி இவர் எடுத்த படங்கள் ஏராளம். இதை வைத்தும் பல புத்தகங்களை வெளியிட்டு உள்ளார். அவை ஒவ்வொன்றும் பழங்குடியினர் பற்றிய பாடப் புத்தகங்கள் போன்றே இன்றும் கருதப்படுகிறது.

சமீபத்தில், இவர் தன் 101ஆவது வயதில் காலமானார். இறப்பதற்கு முதல் நாள் கூட, ஒரு புகைப்படம் எடுப்பது தொடர்பான கருத்தரங்கில் கலந்து கொண்டார். தான் ஏற்றுக்கொண்ட துறையில் புதுமையை புகுத்தியதும், சமுதாய நலனுடன் கடினமாக உழைத்ததும், இவருக்கு புகழை தேடித் தந்துள்ளது.

# சகோதர பாசம்!

லூத்விக் வான் பிதோவன் மிகப்பெரிய இசைக் கலைஞராக இருந்தாலும் அவரது சகோதரர் லூத்விக் வோன் பிதோவனுக்கு எவ்வித திறமையும் இல்லை. இருந்தாலும் பணக்காரன் என்ற அகம்பாவம் அவருக்கிருந்தது.

ஒருமுறை தனியாக வசித்து வந்த வான் பிதோவனை பார்க்க அவரது வீட்டிற்கு வோன் பிதோவன் சென்றபோது, அவரது சகோதரர் என்றறியாத பணியாள் அவரை வீட்டிற்குள் அனுமதிக்கவில்லை.



உடனே தன்னுடைய தங்கநிற விசிட்டிங் கார்ட்டை கொடுத்தனுப்பினார். அதில் "லூத்விக் வோன் பிதோவன், நில உரிமையாளர்" என்று குறிப்பிடப்பட்டிருந்ததை பார்த்த வான் பீதோவன் உடனே ஒரு காகிதத்தை எடுத்து அதில், "லூத்விக் வான் பீதோவன், திறமைக்கு சொந்தக்காரர்" என்று எழுதியனுப்பினாராம்.

கடைசிவரை இவர்களுக்குள் சகோதர பாசம் என்பதே இல்லாமற் போயிற்று.

- மிளகு வைரஸை எதிர்க்கக்கூடிய சக்தி வாய்ந்தது.
- துளசிச் சாறு சளியைப் போக்குவதுடன் வைரஸையும் எதிர்க்கும் திறன் கொண்டது.
- குழந்தைகளுக்கு சளியைப் போக்க துளசிச்சாறுடன் தேன் கலந்து கொதிக்க வைத்து, ஆறிய தண்ணீர் கொஞ்சம் சேர்த்துக் கொடுக்கலாம்.

# தெரிந்துகொள்ள...



- காய்ச்சல் நேரத்தில் பொரித்த உணவுகள், கிழங்கு வகைகள், அசைவ உணவுகளை உண்ணக்கூடாது.
- பறங்கித் தழை, செந்தாழை என்று அழைக்கப்படுவது அன்னாசிப் பழத்தைத்தான்! இதை வெப்பநாடுகளின் ராணி என மருத்துவ நூல்கள் கூறுகின்றன. கடினமான உணவையும் எளிதில் சமிபாடு அடையச் செய்யும் ஆற்றல் கொண்டது அன்னாசி.
- பிரண்டை, மொட்க்கத்தான் இவைகளை வதக்கி துவையல் செய்து சாப்பிட மூட்டுவாத நோய் தீரும்.
- குளிர்ந்த நீரில் குளிக்கும்போது முதலில் தலையில் தண்ணீரை விட்ட பிறகு உடம்பில் நீர்விட வேண்டும்.
- வெந்நீரில் குளிக்கும்போது முதலில் காலில் தண்ணீரைவிட்டு நனைத்து உடம்பு -கழுத்து - தலை எனப் படிப்படியாக மேலே ஊற்றினால் ஆரோக்கியம்.

# வெற்றியின் இரகசியம் 15

- சி. அருண்பரத் -

வாழ்க்கையில் முழுமையான வெற்றி சிலருக்கு மட்டுமே கிடைக்கிறது. அந்தச் சிலருக்கு மட்டுமே தெரிந்த வெற்றியின் இரகசியம், பலருக்கும் பயன்பட வேண்டும் என்ற நோக்கத்தில் உருவானதுதான் இந்த வழிகாட்டித் தொடர். பல்வேறு துறைகளில் சாதனையாளர்களை நேரில் சந்தித்து அறிந்த குணநலன்களையும், வாழ்க்கையில் பல அம்சங்களைத் தெளிவுபடுத்திய சிறந்த நூல்களின் சாராம்சங்களையும், ஒன்று சேர்த்து குழைத்ததில் கிடைத்த வண்ணக் கலவையை, சமூக அக்கறையென்னும் தூரிகையால் வரைந்த ஓவியம் தான், “வெற்றியின் ரகசியம்” எனும் இந்தத் தொடர்.

எதுவும் சாத்தியம் என எண்ணுதல்!


“நினைப்புதான் பிழைப்பைக் கெடுக்கும்” என்பது பேச்சு வழக்கு. இதன் உட்பொருள், தவறான, மட்டமான நினைப்பு பிழைப்பைக் கெடுக்கும் என்பதாகும். அதே சமயம், நம்மைப் பற்றி, நாம் வைத்திருக்கும் உயர்வான எண்ணங்கள் நம்மை உயர்த்தவும் செய்யும்.

“எல்லாம் நன்மைக்குத்தான்” என்ற மனப்பக்குவம் இருக்கும் போது, நடந்து முடிந்த நிகழ்ச்சியைப் பற்றிய புலம்பல் குறையும். நாளைய பொறுப்புகளை நோக்கி கவனம் திரும்பும், பகவத்கீதையில் சொல்லப்பட்ட கீழ்கண்ட வாசகத்தை மன தூன்றி சொல்லிப் பார்க்கலாம். புத்துணர்ச்சி உருவாகும். பிரகாசமான எதிர்காலத்தை பற்றிய நம்பிக்கை பிறக்கும்.

“எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது. எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது. எது நடக்கப் போகிறதோ அதுவும் நன்றாகவே நடக்கவிருக்கிறது”

நாம் மனதிற்குள் என்ன நினைக்கிறோமோ, அதுதான் எண்ண அலைகளாக மாறி, நம்முடைய சிந்தனையிலும், செயலிலும் பிரதிபலிக்கும். நம்மைப் பற்றி என்ன நினைக்கிறோம்? நம்மைச் சுற்றிய உலகத்தைப் பற்றி என்ன நினைக்கிறோம்? தோல்வியை, ஏமாற்றத்தை, கேலி, கிண்டலை, எப்படி எடுத்துக் கொள்கிறோம்? இவையெல்லாம் சேர்ந்து தான், நம் மனப்பான்மையை உருவாக்குகிறது.

நாம் வளர்ந்த சூழ்நிலையால், இயல்பாகவே தாழ்வு மனப்பான்மை இருந்தால், அதை மாற்ற முடியுமா? முடியும். மனது வைத்தால், வெற்றியாளனுக்குரிய மனப்பான்மையை நாம் பெற முடியும் என்பதை இந்த அத்தியாயம் உங்களுக்கு உணர்த்தும். இந்தப் போட்டியுலகத்தில் வெற்றி பெறுவதற்கு, வெற்றியாளனுக்குரிய மனப்பான்மை வேண்டும். “நான் தொண்டனாகவே இருந்து விட்டுப் போகிறேனே” என்று நினைப்பவனுக்கு, தலைமைப்பதவி தேடி வராது. “நான் ஏழையாகவே இருந்து விட்டுப் போகிறேன்” என்று நினைப்பவனுக்கு, பணமும், வசதி வாய்ப்பும் தேடி வராது.




“நான் ஏழை என்றால், என்ன செய்ய முடியும்?” என்று புலம்புபவர்களைப் பார்த்திருப்போம். நாம் பிறப்பால் ஏழையாக இருந்தாலும், வளர்ந்த பின்னும் ஏழ்மையில் வாடினால், குறை நம் பிறப்பில் இல்லை. நம் வளர்ப்பிலும், மனப்பான்மையிலும் தான் இருக்கிறது.

நம்முடைய வளர்ச்சியை மட்டப்படுத்துகிற ஒரே சக்தி, நம் மனப்பான்மை தான் என்பதை மறந்து விடாதீர்கள். நமக்குத் திறமையும், உழைப்பும், வைராக்கியமும் இருந்தால், நம்முடைய வளர்ச்சியை யாராலும் கட்டுப்படுத்த முடியாது.

“நான் சாதாரண குடும்பத்தில் பிறந்தவன் கிராமப்புறத்தில் படித்தவன். எனக்கு ஆங்கிலம் சரியாகப் பேச வராது. நான் தோற்றத்தில் சராசரி. என்னால் முன்னுக்கு வர முடியுமா?” என்று நினைப்பவர்கள், ஒன்றை மட்டும் புரிந்து கொள்ள வேண்டும். நம்முடைய இந்தப் பின்னணிதான், முன்னுக்கு வருவதற்குத் தேவையான உந்து சக்தி. இந்த உந்து சக்தி, எல்லா வசதிகளுடன் பிறந்து வளர்ந்தவர்களிடத்தில் கூட இருப்பதில்லை.

நம்மை நாமே அவமானப்படுத்தக் கூடாது. நம்முடைய உயரத்தை, நாமே குறைத்துக் கொள்ளக் கூடாது. நம்மை நாமே தாழ்த்திக் கொண்டால், இந்த உலகம் எப்படி நம்மை உயர்த்திப் பார்க்கும்?


ஏளனம், நக்கல், நையாண்டி, விமர்சனம், கண்டனம், பொறாமை, சூழ்ச்சி, சதி இவையெல்லாம் நம்மைப் பலப்படுத்த வந்த சக்திகள் என்று எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர, இவற்றால் நொந்துபோய் பலவீனப்பட்டு துவண்டு விடக் கூடாது.

பிரச்சினையைக் கண்டு பயப்படக் கூடாது. பிரச்சினை வரும் போதெல்லாம், நம்முடைய மனத்திடத்தைப் பரிசோதிக்க வந்த சவாலாக எடுத்துக் கொள்ள வேண்டும். தோல்வி வரும் போதெல்லாம், நல்ல பாடம் புகட்ட வந்த அனுபவம் என உணர வேண்டும்.

நம் ஆழ்மனதில் அச்சம், குழப்பம், தெளிவின்மை, தாழ்வு மனப்பான்மை, விரக்தி, ஆத்திரம் ஆகியவை இருந்தால், அது நம் பேச்சிலும், செயலிலும் பிரதிபலித்து, நம்முடைய வாழ்க்கையின் போக்கை மாற்றி விடும்.

தொடரும்...

“சுமார் மூன்றரை ஆண்டுக்காலம் வானை சல்லடை போட்டுத் தேடிப் பார்த்தாச்சு. பூமி போன்ற



## பூமி போன்ற கிரகம் இதுவரை காணோம்

கிரகத்தைக் காணோம். ஒரு வேளை இனிமேல் கண்டுபிடிக்கப்படலாம்,” விஞ்ஞானிகள் கூறுவது இது தான்

பூமி மாதிரியில் எங்கேனும் கிரகம் உள்ளதா என்று கண்டுபிடிப்பதற்காகத்தான் “கெப்ளர்” என்ற விண்கலம் 2009 ஆம் ஆண்டில் வானில் செலுத்தப்பட்டது. இதைப் பறக்கும் டெலஸ்கோப் என்றும் கூறலாம். சூரியனைச் சுற்றி வருகின்ற அந்த விண்கலம் வானை ஆராய்ந்து இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட கிரகங்களைக் கண்டுபிடித்துள்ளது. ஆனால் பூமி மாதிரியிலான கிரகம் அதன் “கண்ணில்” இன்னும் தட்டுப்படவில்லை.

பூமி மாதிரியிலான கிரகத்தில் தான் மனிதர் மாதிரியில் வேற்றுக் கிரகவாசிகள் இருக்க முடியும். சூரிய மண்டலத்தில் ஒன்பது கிரகங்கள் இருந்தாலும் வேறு எந்தக் கிரகமும் பூமி மாதிரியில் இல்லை. சூரிய மண்டலத்தில் பூமியில் மட்டுமே எண்ணற்ற வகை வகையான உயிரினங்கள் இருக்கின்றன.

ஆகவே கோடானு கோடி கிலோ மீற்றருக்கு அப்பால் எங்கோ இருக்கின்ற நட்சத்திரங்களுக்கு (சூரியனும் ஒரு நட்சத்திரமே) கிரகங்கள் இருக்கின்றனவா? அப்படியான கிரகங்களில் பூமி மாதிரி கிரகம் இருக்குமா? என்று அறிவதில் கெப்ளர் விண்கலம் தீவிரமாக ஈடுபட்டது.


பூமியானது சூரியனிலிருந்து தகுந்த தூரத்தில் உள்ளது. ஆகவேதான் பூமியில் புதனில் உள்ளது போல விபரீத வெப்பமும் விபரீதக் குளிரும் இல்லை. செவ்வாயில் உள்ளது போல கடும் குளிர் இல்லை. சூரியனிலிருந்து மிகத் தொலைவில் உள்ளதால் தான் வியாழன், சனி போன்ற கிரகங்கள் பனிக்கட்டி உருண்டைகளாக உள்ளன.

பூமியில் காற்று மண்டலம் உள்ளது. பூமியின் காற்று மண்டலமே சூரியனிலிருந்தும் நட்சத்திரங்களிலிருந்தும் வருகின்ற ஆபத்தான புற ஊதாக் கதிர்கள் எக்ஸ் கதிர்கள் ஆகியவற்றைத் தடுத்து நிறுத்துகிறது. இதன் பலனாகவே பூமியில் உயிரினம் தோன்ற வாய்ப்பு ஏற்பட்டது.

தவிர, பூமியின் காற்றழுத்தம் தகுந்த அளவில் உள்ளது. ஆகவே தான் பூமியில் தண்ணீர் உள்ளது. நீராவி வடிவிலும் பனிக்கட்டி வடிவிலும் தண்ணீர் உள்ளது. கடும் காற்றழுத்தம் உள்ளதால் வெள்ளி கிரகத்தில் போய் இறங்கும் எந்த (ஆளில்லா) விண்கலமும் அப்பளம் போல நொறுங்கி விடுகிறது.

பூமியைப் போல சந்திரனும் சூரியனிலிருந்து தகுந்த தூரத்தில் உள்ளது தான். ஆனால் சந்திரனை ஆபத்தான கதிர்கள் தாக்குகின்றன. தகுந்த காப்பு உடை இல்லாமல் சந்திரனில் இருக்க முடியாது.

பூமி தனது அச்சில் தகுந்த வேகத்தில் சுழல்கிறது. ஒரு நாள் என்பது 24 மணி நேரமாக உள்ளது. பூமியின் சுழற்சி வேகம் தக்க அளவில் உள்ளதால் நாம் பிழைத்தோம். சந்திரனில் தொடர்ந்து 14 நாள் வெயில். தொடர்ந்து 14 நாள் இரவு. சந்திரனில் ஒருவர் பகலாக உள்ள புறத்தில் 14 நாள் இருந்தால் பொசுங்கிப் போய்விடுவார். இரவாக உள்ள புறத்தில்14 நாள் இருந்தால் குளிரில் விறைத்து செத்துப் போய்விடுவார்.



கெப்ளர் விண்கலம் கண்டுபிடித்துள்ள பல கிரகங்கள் பற்றிய தகவலகள் இன்னும் பகுத்து ஆராயப்படவில்லை. அவற்றில் ஒரு வேளை பூமி போன்ற கிரகம் இருக்கலாம்.

கெப்ளர் விண்கலம் எப்படி கிரகங்களைக் கண்டுபிடிக்கிறது?. இரவு வானில் ஒரு நட்சத்திரத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். வானில் மிக உயரத்தில் விமானம் போகிற சத்தமே கேட்காமல் இருக்க, அந்த விமானம் ஒரு கணம் அந்த நட்சத்திரத்தை மறைக்கிறது. அந்த நட்சத்திரத்தை மறைத்தது விமானமாக இருக்க வேண்டும் என்று நீங்கள் ஊகிக்கிறீர்கள். அது மாதிரியில் தான் நட்சத்திரங்களின் கிரகங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன.

கெப்ளர் விண்கலம் வானில் தெரிகின்ற எண்ணற்ற நட்சத்திரங்களை ஆராயும் போது எந்த நட்சத்திரத்தின் ஒளி எந்த அளவுக்கு எவ்வளவு நேரம் மங்குகிறது அல்லது மறைக்கப்படுகிறது என்பதை மிகத் துல்லியமாகப் படம் பிடித்து அனுப்புகிறது. கெப்ளர் இப்படியாக அனுப்புகின்ற படங்கள், தகவல்கள் ஆகியவற்றை நிபுணர்கள் விரிவாக ஆராய்ந்து அந்த குறிப்பிட்ட நட்சத்திரத்தைச் சுற்றுகின்ற கிரகங்கள் பற்றிக் கண்டறிகின்றனர்.

இதுவரை ஒன்றரை இலட்சம் நட்சத்திரங்கள் ஆராயப்பட்டுள்ளன. வானில் தென்படுகின்ற நட்சத்திரங்களில் மூன்றில் ஒரு பங்கு நட்சத்திரங்கள் கிரகங்களைப் பெற்றவையாக இருக்கலாம் என்று நிபுணர்கள் கருதுகின்றனர். அந்த அளவில் நமது அண்டத்தில் (Galaxy) கோடானு கோடி கிரகங்கள் இருக்கலாம் என்று சொல்லப்படுகிறது. ஆகவே இந்த பிரம்மாண்டமான பிரபஞ்சத்தில் பூமி மாதிரி எங்குமே இருக்க வாய்ப்பில்லை என்று கருதக்கூடாது என்று ஒரு நிபுணர் கூறினார். தவிர, இப்பிரஞ்சத்தில் பூமிதான் நடுநாயகமாக இருப்பதாகவும் கருதலாகாது என்றார் அவர்.

- என்.ராமதுரை -

# வட மாகாணக் கண்காட்சி: "ஒன்றிணைந்த முன்னேற்றத்தை நோக்கி"

உட்கட்டமைப்பு, போசணை, சுகாதாரம், சமூக நலன், சிறுதொழில், பொதுச்சேவை, கல்வி என அனைத்து துறைகளிலும் 30 வருட காலத்தில் பெறாத வளர்ச்சியை 03 வருடத்தில் அடைந்த வடக்கு மாகாணம் 'ஒன்றிணைந்த முன்னேற்றத்தை நோக்கி' பயணித்துக் கொண்டிருக்கிறது.

'ஒன்றிணைந்த முன்னேற்றத்தை நோக்கி' என்ற தொனிப் பொருளிலான வட மாகாணக் கண்காட்சி மூலம் 2009 - 2012 வரையான காலப்பகுதியில் வட மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள, மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அபிவிருத்தியை ஒரே இடத்தில் காண்பதற்கும் அவை தொடர்பில் அறிந்து கொள்வதற்குமான சந்தர்ப்பத்தை வடக்கு மாகாண சபை ஏற்படுத்தித் தந்திருந்தது.

பிரமாண்டமான அலங்கார வளைவுடன் கூடிய நுழைவாயில், பிரிவு பிரிவுகளாக கண்காட்சிக் கூடங்கள், கூடங்களின் நடுவே கலை நிகழ்வுகளுக்காக விசேடமாக அமைக்கப்பட்ட மேடை. நுழைவாயிலின் இரு பக்கங்களிலும் பெரிய பெரிய விளம்பரப் பதாகைகளில் கல்வி, சுகாதாரம், பொதுச் சேவை, போசணை, சிறு தொழில், சமூக நலன், உட்கட்டமைப்புக்களில் கடந்த மூன்று வருடங்களில வடக்கில் ஏற்பட்ட முன்னேற்றத்தின் அடைவு மட்டங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

**கண்ணைக் கவர்ந்த கைத்தொழில் உற்பத்திகள்**

வடமாகாணத்திலுள்ள 34 உள்ளூராட்சி சபைகள் பங்குபற்றிய இந்தக் கண்காட்சியில், பார்ப்பவர் மனதைக் கவரும் வகையில் சாயம் பூசப்பட்ட பனை ஓலையில் தயாரிக்கப்பட்ட பூச்செண்டுகள், கைப்பைகள், பென்சில் பெட்டிகள், பூக்கூடை, தொப்பி, பெட்டிகள் உட்பட கண்ணைக் கவரும் வகையில் கையால் நெசவு செய்யப்பட்ட பல்வேறு வர்ணங்களிலான சேலைகள், படுக்கை விரிப்புகள், தலையணை உறைகள், கைக்குட்டைகள், தேங்காய் சிரட்டையை பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட தண்ணீர் குவளை, தேநீர் கோப்பை உள்ளிட்ட பல்வேறு அலங்கார, அன்பளிப்புப் பொருள்கள், சிப்பி, சோகிகள், மட்பாண்டம், மரம், உலோகம் மற்றும் ஐம்பொனனாலான கைவினைப் பொருட்கள், சிலைகள், முக மூடிகள், தும்பாலான உற்பத்திகள், மணப்பெண் அலங்காரப் பொருள்கள், பாதணிகள் என பல்வேறு விதமான கைத்தொழில் உற்பத்திகளே கண்காட்சியில் முக்கிய இடம்பிடித்திருந்தன.

இவற்றை பார்க்கும் போது எமது மாகாணத்திலா இவை அனைத்தும் உற்பத்தி செய்யப்படுகின்றன என ஆச்சரியப்பட வைக்கின்றன.

மாவட்ட தொழிற்துறைத் திணைக்களம், கைத்தொழில் அதிகாரசபை, வழங்கிவருகின்ற பல்வேறு விதமான சுயதொழில் பயிற்சிகள், ஆலோசனைகள், ஊக்குவிப்புக்கள் மற்றும் வாழ்வாதார கடன் முகாமைத்துவ சேவைகள் நிலையம் வழங்கும் கடன்திட்டங்கள் போன்றனவே வடக்கில் கைத் தொழில்துறை வளர்ச்சியடைவதற்கும் பல வறிய, நடுத்தரக் குடும்பங்கள் பொருளாதார ரீதியில் முன்னேறுவதற்கும் வழிசமைத்துள்ளது.

பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், கைத்தறி உற்பத்தியாளர், விற்பனையாளர் மற்றும் பாவனையாளர் சங்கம், மட்பாண்ட கைத்தொழில் நிலையங்கள் தம்மால் பயிற்சியளிக்கப்பட்டவர்கள் மூலம் உற்பத்திசெய்யப்பட்ட உற்பத்திப் பொருள்களை காட்சிப்படுத்தியிருந்தன.

**உள்ளூர் உற்பத்தி உணவுப் பொருள்கள்!**

ஒட்டுசுட்டான் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் பனை ஓலையால் தயாரிக்கப்பட்ட பொருட்கள் மட்டுமன்றி மாம்பழ ஜாம், விளாம பழ ஜாம், பனம்பழத்தில் தயாரிக்கப்பட்ட சோடா,



ஜாம் பணிஸ், பலகாரங்கள், போத்தலில் அடைக்கப்பட்ட தேங்காய் எண்ணெய், பொலித்தீனில் அடைக்கப்பட்ட அரிசிமா போன்றவற்றையும், பண்டத்தரிப்பு பனை தென்னை வளக் கூட்டுறவுச் சங்கம் பனை வளத்திலிருந்து பெறப்பட்ட உணவுப் பொருட்களை காட்சிப்படுத்தியிருந்தன.

இவற்றுடன், உடுவில் ஜசுபி பழரசத் தொழிற்சாலை, சாவகச்சேரி பழமுதிர்ச்சோலை பானசாலை மற்றும் யாழ்.கோ பாற்சாலை என்பனவும் தமது காட்சிக் கூடங்களை அமைத்திருந்தன.



செயற்கை முறை கலக்காது இயற்கை முறையில் பெறப்பட்ட பழங்களைப் பயன்படுத்தி பழரசம் தயாரித்து விற்பனைசெய்து வருகின்ற சாவகச்சேரி பழமுதிர்ச்சோலை பானசாலையின் உரிமையாளர், 240 பேரிடம் வாடிக்கையாக தாம் பழங்களைக் காயாகப பெற்று அவற்றை இயற்கை முறையில் பழுக்க வைத்து பின்னர் அவற்றிலிருந்தே பழரசங்களை தயாரிப்பதைக் கூறினார்.

**உட்கட்டமைப்பு**

மீள்குடியேற்றத்துடன் வட மாகாணத்தில் கட்டடங்களின் அபிவிருத்தி, நீர்வழங்கல் வடிகால் அமைப்பு, வீதி, துறைமுக அபிவிருத்தி, பேருந்து நிலைய அபிவிருத்தி, மழைநீர் சேமிப்பு திட்டம், வறட்சிகால நீர் விநியோகத் திட்டம், மின்சாரம் என்பன தொடர்பான அபிவிருத்திகளுடன் விளக்கமளிக்கும் காட்சிக் கூடங்களும், அவை தொடர்பான விளக்கங்களும் வழங்கப்பட்டன.



உள்ளூராட்சி மன்றங்களுக்கென புதிதாக அமைக்கப்படும் கட்டடங்களின் மாதிரித் தோற்றங்கள், மாநாட்டு மண்டபத்தின் தோற்றம் மற்றும் பிரதேச சபை, நகர சபைகள், மாநகர சபை கூட்ட மண்டபங்களின் உள்ளிருக்கைகளின் மாதிரித் தோற்றங்களும் கண்ணுக்கு விருந்தளித்தன.

யாழ்.மாநகர சபையால் மேற்கொள்ளப்பட்டு வரும் யாழ்.கோட்டையின் புனரமைப்பு வேலைத் திட்டங்கள், சுற்று வட்ட வீதியின் மாதிரித்தோற்றம், யாழ்.மத்தியில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் மிகப்பெரிய (மாநகரசபையின்) வணிகக் கட்டடத்தின் மாதிரி வடிவம் என்பவற்றுடன், சனசமூக நிலையங்கள் எவ்வாறு அமைக்கப்பட வேண்டும் என்பதன் மாதிரி உருவமும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

இவை இன்னும் சிறிது காலத்தில் வடக்கு மாகாணம் எப்படியிருக்கும் என்ற கற்பனையை வரவழைத்தது.

கழிவுகளை வீணாக்காது அவற்றைப் பயன்படுத்தி வீட்டிலேயே சேதனப் பசளை தயாரிக்கும் முறை பற்றியும், அவற்றின் பயன்கள் குறித்தும் சிறந்த காட்சிப்படுத்தல்களுடன் நல்லூர் பிரதேசசபை இந்தக் கண்காட்சியில் விளக்கமளித்தது.

**விவசாயம்**

யாழ்.குடா விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் பயிற்றை, வெண்டி, கத்தரி, மிளகாய், வெங்காயம் உள்ளிட்ட பல நல்லின விதை இனங்கள், பூங்கன்றுகள் என்பவற்றை காட்சிக்கும் விற்பனைக்கும் வைத்திருந்தது.

யாழ்.விவசாயத் திணைக்களமும் நல்லின விதை இனங்கள், நெல் இனங்களைக் காட்சிப்படுத்தியிருந்ததுடன், வடக்கில் மேற்கொள்ளப்படும் பயிர்ச்செய்கை, பழச் செய்கை தொடர்பிலான விளக்கங்கள், அவற்றின் முறைகள் என்பன தொடர்பில் உரிய காட்சிப்படுத்தல்களுடன் விளக்கங்களை வழங்கியது.

**சுகாதாரம்**

யாழ்.மாவட்ட சித்த மருத்துவ உற்பத்தி விற்பனை நிலையத்தினர், நீரிழிவு நோய், உடற்பருமன் உள்ளிட்ட பல்வேறு நோய்களைக் குணமாக்கும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட மருந்து, எண்ணெய் வகைகளைக் காட்சிப்படுத்தி, அவற்றின் பயன்கள் தொடர்பில் விளக்கங்களையும் வழங்கியிருந்தனர்.

அத்துடன், சுகாதாரத் திணைக்களம் ஆரோக்கியமான உணவுப் பழக்கங்கள் குறித்தும், அம்புலன்ஸ் சேவையை எவ்வாறு பெற்றுக்கொள்ளுதல் தொடர்பான மருத்துவ ஆலோசனைகளையும் வழங்கியிருந்தது.

**கல்வி**

கிளிநொச்சி மாவட்டத்தில் அமைக்கப்படும் புதிய விளையாட்டரங்கு மற்றும் வடக்கில் அமைக்கப்பட்ட முன்பள்ளி, ஆரம்ப பாடசாலை, இரண்டாம் நிலைப் பாடசாலை போன்றவற்றின் மாதிரி உருவங்களும், பாடசாலை மட்டத்தில் நடைபெற்ற புத்தாக்கப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களின் ஆக்கங்கள், வட மாகாண கல்வித் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட பாட மற்றும் பயிற்சிப் புத்தகங்கள் என்பன காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

**- கார்த்திகா -**

இவற்றுடன் சிகரம் கல்வி - தொழில் வழிகாட்டல் பிரிவு வடக்கு மாகாண சபையுடன் இணைந்து வெளியிட்ட தமிழ்மொழி மூலமாக சிகரம் கல்வி-தொழில் வழிகாட்டி விபரக்கொத்து நூலும் இங்கே காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

வட மாகாண சமூக சேவைகள் திணைக்களம், நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் என்பன சமூகத்தில் முதியவர்கள், சிறுவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பில் விளக்கியதுடன், அவற்றைத் தீர்ப்பதற்காக தமது திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் குறித்தும் விளக்கமளித்தன.

**கண்ணிவெடி அகற்றல்**

மீள்குடியேற்றத்தில் பாரிய சவாலை ஏற்படுத்திய, ஏற்படுத்தும் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளை இராணுவத்தினர் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஈடுபட்டு வருகின்றன.

இதுவரை கண்ணிவெடி அகற்றப்பட்ட பிரதேசங்கள், அகற்றப்படவேண்டிய பிரதேசங்கள், கண்ணிவெடி அகற்றப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள், கண்ணிவெடி அகற்றலின்போது எதிர்நோக்கும் சவால்கள் என்பன தொடர்பில் மாதிரி அமைப்புக்கள், வரைபடங்கள் மூலம் இராணுவத்தினரின் கண்ணிவெடி அகற்றும் பிரிவு, யுனிசெவ் நிறுவனம், ஹலோரஸ்ட் மனிதாபிமான கண்ணி

தொடர்ச்சி....

(17 ஆம் பக்கம்)

# காணிகளைத் துப்புரவாக்கும் மாதகல் மேற்கு மக்கள்

## - மீள் குடியமர்வுக்கு ஆர்வம்

(மானிப்பாய்)

அண்மையில் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்ட மாதகல் மேற்குப் பகுதியில் குடியமர்வுக்கு மக்கள் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

அவர்கள் தங்கள் காணிகளில் உள்ள பற்றைகளை வெட்டிக் கிணறுகளைத் துப்புரவு செய்துள்ளனர். தமக்குத் தரப்பட்ட கூரைத்தகடுகள் மூலம் தற்காலிக வீடுகளை அமைத்து வருகின்றனர். இவர்களுக்கு பவுசர்கள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது. அரசினால் வழங்கப்பட்ட உதவிகளை விட, தமது முயற்சியினால் வீடுகளை அமைப்பதற்கு பலர் மேற்கொண்டு வருகின்றனர். மானிப்பாய் பிரதேச ஈ.பி.டி.பி அமைப்பாளர் அன்ரன் ஜோன்சன் (ஜீவா) முதற்கட்டமாக இப்பகுதியில் உள்ள பதின் நான்கு கிணறுகளை துப்பரவு செய்வதற்கு உதவியுள்ளார்.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் பொன்னாலை - மாதகல் - கீரிமலை வீதிக்கு மின்சாரம் வழங்குவதற்கான ஆரம்பகட்ட வேலைகளில் மின்சார சபையினர் ஈடுபட்டுள்ளனர்.

இப்பகுதியில் மின்மார்க்கங்களை அமைப்பதற்காக வீதியிலிருந்து சுமார் பதினைந்து அடி தூரத்திற்கு மரங்கள் வெட்டி அகற்றப்பட்டு வருவதுடன் மின்கம்பங்கள் நாட்டுவதற்காக குழிகள் வெட்டப் பட்டும் வருகின்றன.

கடந்த வெள்ளிக்கிழமை இப்பணிகளை பார்வையிட்ட மானிப்பாய் பிரதேச ஈ.பி.டி.பி. அமைப்பாளர் ஜீவா மின்வழங்கலுக்கான மின்சாரசபையின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அப்பகுதி மக்களைக் கோட்டுக் கொண்டுள்ளார். (54)

# சமாதான நீதவான்களாக நியமனம்



கேதீஸ்வரன்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தைச் சேர்ந்த இரு உத்தியோகத்தர்கள் சமாதான நீதிவான்களாக நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மாவட்டச் செயலகத்தின் உதவித் திட்டப் பணிப்பாளர் அமரசிங்கம் கேதீஸ்வரன் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாகவும், மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் வேதநாயகம் தபேந்திரன் யாழ்.மாவட்ட நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் யாழ்ப்பாண நீதி நிர்வாக மாவட்டத்திற்கான (யாழ்ப்பாணம், கிளிநொச்சி நிர்வாக மாவட்டங்கள் சேர்ந்த மாவட்டம்) சமாதான நீதவானாகவும் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

கிளிநொச்சி - உருத்திரபுரத்தைப் பிறப்பிடமாகவும் பெரிய பளை, பளையைச் சேர்ந்த அமரசிங்கம் கேதீஸ்வரன் கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பொது அமைப்புக்களிலும் முக்கியமான பதவிகளை வகித்து வருகின்றார். பச்சிலைப் பள்ளி அபிவிருத்திப் பேரவையை உருவாக்கியவர்களில் ஒருவருமாக உள்ளார். நிறைந்த சமூக சேவைப்பணிகளையும் ஆற்றி வருகின்றார்.

மேலும் யாழ்.சுண்டுக்குழியைப் பிறப்பிடமாகவும் கைதடி வடக்கு கைதடியைச்சேர்ந்த வேதநாயகம் தபேந்திரன் வடக்கு - கிழக்கு மாகாண சபை

தபேந்திரன்



இருந்தபோது சமூக சேவைகள் உத்தியோகத்தர் தொழிற் சங்கத்தின் செயலாளராக 1999 யூன் மாதம் முதல் கடமையாற்றி உள்ளதுடன், தற்போது வடமாகாண சமூக சேவைகள் உத்தியோகத்தர் சமூக சேவைகள் நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் சங்கத்தின் செயலாளராக கடமையாற்றி வருகின்றார்.

இவர் யாழ்.இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஆட்சிக் குழு உறுப்பினராகவும் உள்ளார்.

# யாழ்.மாவட்ட சாரணர் சங்கத்தினால் வடமாகாண ஆளுநருக்கு நினைவுப் பரிசில்



யாழ்.மாவட்ட இலங்கைச் சாரணர் சங்கத்தினர் வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறிக்கு நினைவுப் பரிசில் வழங்கினார்கள். இந்நிகழ்வு யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

கொழும்பு, தம்புள்ள பிரதேசங்களில் நடைபெற்ற சாரணர பாசறை நிகழ்வுகளுக்கு யாழ். மாவட்ட சாரணர்கள் பங்குபற்ற வடமாகாண ஆளுநர் பல்வேறு உதவிகளை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், யாழ்.மாவட்ட சாரணர் சங்க பிரதி ஆணையாளர் எஸ்.தேவராஜன், யாழ்.மாவட்ட சாரணர் சங்க உதவி ஆணையாளர்கள் கே.துஷ்யந்தன், திருமதி எஸ்.தேவாஅமிர்தன், எஸ். சந்திரமௌலீசன் மற்றும் பல சாரண சங்க உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# வாசிப்பை மேம்படுத்த புத்தகக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி அபிவிருத்தி மன்றம் மற்றும் மகாஜன சபை ஆகியவற்றின் ஏற்பாட்டில் புத்தக கண்காட்சியொன்று எதிர்வரும் டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி தொடக்கம் 16 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

பாடசாலை மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கில் 'விடுமுறையை புத்தக நண்பர்களுடன் கழிப்போம்' எனும் தொனிப்பொருளில் இக் கண்காட்சி நடாத்தப்படவுள்ளதாக அபிவிருத்தி மன்றத்தின் தலைவர் .வே.சிவராஜா தெரிவித்தார்.

இக் கண்காட்சியில் மகாஜன சபை நூலகத்திலுள்ள நூல்களும் அளவெட்டி மக்களின் வாசிப்புக்கென அண்மையில் லண்டனைச் சேர்ந்த அளவை மைந்தர்.பொ.கணேஸ்வரன் தனது பெற்றோர்களின் ஞாபகார்த்தமாக கடந்த ஆவணி மாதம் மகாஜனசபைக்கு அன்பளிப்புச் செய்த ஆங்கில நூல்களும் காட்சிப்படுத்தப்படவுள்ளன.



# வேலை வாய்ப்புச் செய்திகள்

யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள பிரபல வர்த்தக நிறுவனம் ஒன்றிற்கு விற்பனைப் பிரதிநிதி, களஞ்சியக் காப்பாளர், பணம் வசூலிப்பவர், மேஷன் டைஸர் மற்றும் கொழும்பு, யாழ்ப்பாண அலுவலகங்களில் வேலை செய்ய சாரதி, அலுவலக உதவியாளர்கள், வேலை உதவியாளர்களுக்கு வெற்றிடங்கள் உண்டு. மேலதிக விபரங்களுக்கு: ஜெகன் - 077 100 1876, e-mail jegan@edinboxoagh.lk

---

கொழும்பு - வெள்ளவத்தையில் உள்ள சலூன் ஒன்றுக்கு திறமையும், பொறுப்புமுள்ள உதவியாளர்கள் தேவை. தங்குமிட வசதியும் நல்ல சம்பளமும் வழங்கப்படும் . தொடர்புகளுக்கு: 077 902 9350

---

இலங்கை முன்னணிக் காப்புறுதி நிறுவனம் ஒன்றிற்கு குழுத்தலைவர் அல்லது முகாமையாளர், காப்புறுதி ஆலோசகர் பதவிகளுக்கு இருபாலாரும் தேவைப்படுகின்றனர். தகைமை அடிப்படையிலும், அனுபவ அடிப்படையிலும் கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். இவற்றுடன் மேலதிகமாக வெளிநாட்டு சுற்றுப்பயண வசதிகள், வெளிநாட்டு, உள்நாட்டுப் பயிற்சிகள் மற்றும் தேவையான கடன் வசதிகள் இன்னும் பலவுண்டு. தொடர்புகளுக்கு: முல்லைத்தீவு 077 317 4649, சாவகச்சேரி - 077 130 1075, மல்லாவி - 077 172 8761.

---

அழகியல்துறை, உடல் அழகுச் சிகிச்சைகள், ஆரோக்கியம் சம்பந்தமான நிறுவனம் ஒன்றிற்கு வெளிக்கள உத்தியோகத்தர் தேவை. 18 தொடக்கம் 30 வயதுக்குட்பட்ட ஆண் - பெண் இருபாலாரும் தங்கள் சுயவிபரக் கோவையுடன் தொடர்பு கொள்ளவும். மாத வருமானம் 30,000 ரூபா வழங்கப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: இல.262, நாயன்மார்கட்டு ஆயுர்வேத வைத்தியசாலை, செம்மணி வீதி, யாழ்ப்பாணம்.

---

அலுவலக சுத்திகரிப்பாளர்கள், உதவியாளர்கள், வீட்டுப் பணிப்பெண்களுக்கான வேலைவாய்ப்பு உண்டு. வயது 21 தொடக்கம் 42 வரை. ஆரம்ப சம்பளம் 32,000 ரூபா தொடர்புகளுக்கு: 011 722 0626, 077 419 3321.

---

தனியார் துறைமுகமொன்றில் கப்பல் வேலைக்கு ஆட்கள் தேவை. வயது 18 தொடக்கம் 55 வரை. உணவு மற்றும் தங்குமிட வசதிகள் உண்டு. சம்பளம் 25,000 ரூபா, 35,000 ரூபா, 40,000 ரூபா. தொடர்புகளுக்கு: 077 303 3803.

---

உணவகமொன்றிற்கு சமையலாளர்கள் (Srilankan, Chaines, Indian) கொத்துத் தயாரிக்கக்கூடியவர்கள், சமயல் உதவியாளர்கள் (ஆண், பெண்), கிளீனர் (Cleaner) (ஆண், பெண்), சுத்திகரிப்பாளர்கள் (ஆண், பெண்), காசாளர் பதவிகளுக்கு வெற்றிடமுண்டு. சம்பளம் நேரில் பேசித் தீர்த்துக் கொள்ளப்படும். தொடர்புகளுக்கு இல: 59, புகையிரத நிலைய வீதி, கிளிநொச்சி. தொலைபேசி: 077 044 5403, 077 367 9669.

---

இலங்கையின் வடக்கில் ஆரம்பிக்கப்படவிருக்கும் DMI அமெரிக்க நிறுவனத்தின் ஐந்து புதிய கிளைகளுக்கு ஐம்பது வெற்றிடங்கள் உண்டு. (Managre, Supervisor, Asst.manager, Customer Service) O/L, .A/L படித்த இளைஞர் - யுவதிகள் விரும்பத்தக்கது. பயிற்சியின் போது 10,000 ரூபா தொடக்கம் 15,000 ரூபா வரையும், பயிற்சியின் பின் 35,000 ரூபாவுக்கு மேல் சம்பளம் வழங்கப்படும். யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படும். தங்குமிட வசதிகள் உண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி: 021 720 0867, 077 556 6224, 077 892 0777.

---

கொங்கிறீட் தயாரிப்பு நிறுவனமொன்றிற்கு (Ready Mix) களஞ்சியப் பொறுப்பாளர், கணக்குப் பதிவாளர், மேற்பார்வையாளர் (கொங்கிறீட் அனுபவமுள்ளவர்), சாரதிகள் (பார வாகனங்கள்), ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், கூலியாட்கள், J.C.B ஒப்பரேட்டர்கள் (பாரம் தூக்கி) தேவைப்படுகின்றனர். ஆண் - பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: முகாமையாளர், மாருதி ரெடிமிக்ஸ், (PVT LTD) கேரதீவு வீதி, நாவற்குழி. தொலைபேசி எண்: 077 703 3039, 077 010 7611, 021 791 2489.

# தொழில் திறனை நிரூபிக்க தேசியசான்றிதழ் பெறுவது எப்படி?

## உங்களுக்கு வழிகாட்டுகிறது தொழிற்பயிற்சி அதிகாரசபை

(யாழ்ப்பாணம்)

தேசிய தொழில் திறன் தகுதிகள் சான்றிதழ்களை யாழ். மாவட்டத்தில் உள்ள பொருத்த மானவர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக அரச மற்றும் தனியார்துறை வேலைவாய்ப்புகான நேர்முகப்பரீட்சையின்போது NVQ சான்றிதழ் முக்கியமாக வேலைப்படுத்தப்பட்டதை யாவரும் அறிந்ததே. அந்தவகையில் அண்மையில். இடம்பெற்ற அஞ்சல்துறை வேலைவாய்ப்புக்கான நேர்முகத்தேர்வின்போது பலர் NVQ சான்றிதழ் இல்லாமல் சிரமங்களை எதிர்கொண்டதும் எல்லோரும் அறிந்ததே. அந்த வகையில் அனைவரும் மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுவரும் தேசிய தொழிற்திறன் தகுதிகள் சான்றிதழினை RPL முறையில் மதிப்பீடுசெய்து வழங்குவதற்கான அங்கீகாரம் யாழ்ப்பாணத்தில் முதன்முதலாக இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபைக்கு கிடைத்துள்ளது என்று தேசியதொழிற் பயிற்சி அதிகாரசபையினர் அறிவித்துள்ளனர்.

இதுவரைகாலமும் RPL முறையில் சான்றிதழ் பெறுவதாயின் கொழும்புக்கோ அல்லது பிறமாவட்டங்களிற்கோ செல்லவேண்டிய நிலமையே இருந்துவந்தது. இப்பொழுது யாழ்ப்பாணத்திலேயே கணனி, மேசன்தொழிநுட்பம், வீட்டுமின்னிணைப்பு, முகஅலங்காரம் மற்றும் தலையலங்காரம் ஆகிய துறைகளிற்கு மதிப்பீடு நடாத்துவதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

NVQ சான்றிதழ் 2 முறைகளில் பெற்றுக்கொள்ள முடியும், CB Training, RPL. CB Training என்பது முன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் கற்கைநெறி அங்கீகாரம் வழங்கப்பட்ட தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சினை தொடர்ந்து மதிப்பீட்டுக்கு உட்படுவதன் மூலம் சான்றிதழ் பெறுதல், RPL என்பது ஏற்கனவே வேறுநிறுவனங்களில் பயிற்சியினை முடித்து அதேதுறையில் 2 வருடங்களிற்கு குறையாது தொழிசார் அனுபவமும் உடையவர்கள் தமது அனுபவசான்றிதழினை சான்றாகக் கொண்டு மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டு சான்றிதழ் பெற்றுக்கொள்ளுதல்.

RPL முறையில் NVQ சான்றிதழுக்காக கீழ்வரும் ஆவணங்களுடன் உங்கள் விண்ணப்பப்படிவங்கள் RPL செயலாண்மை குழு, இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை, இல. 02, வீரசிங்கம் மண்டபம் 1ஆம் மாடி, கே. கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம எனும் முகவரிகரு நேரிலோ அல்லது www.vtcch.webs.com இலிருந்து தரவிறக்கம் செய்து கொள்ளலாம். விண்ணப்பக்கட்டணமாக ரூபா 250 தொழிற்பயிற்சி அதிகார சபையின் வங்கிக்கணக்கில் வைப்பிலிடப்பட்டு, பற்றுச்சீட்டு இணைக்கப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தினையும், வங்கியில் பணம் செலுத்திய பற்றுச்சீட்டினையும் போட்டோ பிரதி செய்து வைத்துக்கொள்வது பயனுடையதாகும். மதிப்பீட்டின்போது மதிப் பிடலுக்கு தேவையான மூலப் பொருட்களிற்கான செலவு அறவிடப்படும். விண்ணப்பப்படிவத்துடன் அனுபவச்சான்றிதழ் (2வருடத்துக்கு குறையாத), கிராமசேவகர் உறுதிப்படுத்தல் கடிதம் (சுய தொழில் செய்பவர்களிற்கு), தேசிய அடையாள அட்டை போட்டோ பிரதி, கடவுச்சீட்டுக்கான அளவு புகைப்படம், பணம செலுத்திய பற்றுச்சீட்டு, குறித்ததுறையில் பெறப்பட்ட சான்றிதழ் ஆகிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# புதிய திருமணபந்தத்தில் சனத்



(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் அதிரடி வீரரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சனத் ஜயசூரிய மூன்றாவது தடவையாக மலீகா என்பவரைத் திருமணம் செய்துள்ளார். இத் திருமணம் கல்கிசையில் உள்ள விகாரை ஒன்றில் கடந்த வெள்ளிக்கிழமை காலை மிகவும் அமைதியான முறையில் இடம்பெற்றது.

விரல் விட்டு எண்ணக் கூடிய தொகையினரே இத் திருமணத்துக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். இதில் எல்லோரையும் ஆச்சரியப்படுத்தக் கூடிய விடயம் என்னவென்றால், இவர் மூன்றாவதாகத் தெரிவு செய்துள்ள மனைவியும் ஒரு விமானப் பணிப் பெண் என்பதுதான். மலீகா ஒரு நடிகையும் ஆவார். அண்மையில் வெளியாகி ஒரு கலக்குக் கலக்கிய 'சுப்பர் சிக்ஸ்' என்கிற சிங்கள திரைப்படத்தில் பவோடா சந்தீபனி, அருணி போன்ற பிரபல நடிகைகளுடன் நடித்து இருந்தார்.

ஆயினும் அடுத்த வாரங்களில் கல்கிசை விடுதியில் மிக பிரமாண்டமான விருந்துபசாரம் ஒன்றை மணமக்கள் நடத்த உள்ளார்கள். மணமகள் மலீகாவின் பிறந்த தினத்தோடு சேர்ந்ததாக இக்கொண்டாட்டம் ஒழுங்கு பண்ணப்பட்டு உள்ளது. சனத்தின் இரண்டாவது மனைவி சந்திரா.

முன்னாள் விமானப் பணிப் பெண். இருவருக்கும் மூன்று சிறுவர்கள். சில மாதங்களுக்கு முன்புதான் விவாகரத்துக் கோரி வழக்கிட்டு இருந்தார். வழக்கு நடவடிக்கைகள் இன்னும் முடிவடைந்து விடவில்லை. சனத்தின் முதல் மனைவியும் விமானப் பணிப் பெண்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிறைக்கைதிகள் சுட்டுக்கொலை; சர்வதேச விசாரணை வேண்டும்

## வெலிக்கடை கைதிகள் கோரிக்கை

(கொழும்பு)

வெலிக்கடைச்சம்பவத்துக்கு சர்வதேச விசாரணை வேண்டும் என்று சிறைக்கைதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் கடந்த நவம்பர் 10ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பில் பக்கச்சார்பற்ற சர்வதேச விசாரணைகள் அவசியம் என்று சம்பவங்களை நேரில் கண்ட கைதிகள் கோரியுள்ளனர்.

அத்துடன் படையினருக்கும் கைதிகளுக்கும் இடையில் மோதல்கள் முடிந்த பின்னர், படையினர் சிறைக்குள் வந்து 11 பேரை வெளியில் அழைத்து சுட்டுக்கொன்றமை தொடர்பில் சாட்சிகளை வழங்கக் குறித்த கைதிகள் தயாராக உள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

ஆயுள்தண்டனை பெற்ற கைதிகளை அழைத்து இவ்வாறு சுட்டுக்கொன்றமை மனித உரிமை மீறல் செயல் என்றும், தாமும் தற்போது உயிருக்கு அஞ்சுவதாகவும் சம்பவத்தில் காயமடைந்த கைதி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

# தெரிவுக்குழு விசாரணையை இடைநிறுத்தி வையுங்கள்

## சட்டத்தரணிகள் மீண்டும் கோரிக்கை

(கொழும்பு)

பிரதம நீதியரசர் சிரானி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றவியல் பிரேரணை விசாரணைகளை இரண்டு மாதங்களுக்கு பிற்போடுமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அவசரக் கோரிக்கையை விடுத்துள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு கொழும்பில் கூடிய சங்கத்தின் உறுப்பினர்கள் இந்தத் தீர்மானத்தை ஏகமனதாக எடுத்துள்ளதாக சங்கத்தின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணைக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நான்கு வழக்குகள் முடியும் வரை, பிரதம நீதியரசருக்கு எதிராக விசாரணைகளை நடத்தும் நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்குமாறு உயர்நீதிமன்றம் கடந்த வார இறுதியில் வேண்டுகோள் விடுத்திருந்தது.

எனினும் அதனை உதாசீனப்படுத்திய நாடாளுமன்ற தெரிவுக்குழு, தமது விசாரணையை நடத்தியது. இந்த நிலையிலேயே சட்டத்தரணிகள் சங்கம் தமது தீர்மானத்தை எடுத்துள்ளது.

அத்துடன் பிரதம நீதியரசருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து நாடளாவிய ரீதியில் மக்களுக்கு தெளிவுபடுத்தப் போவதாகவும் விஜயதாஸ ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

# செய்மதியில் தேசியக்கொடி; வலுவடைகிறது கோரிக்கை

(கொழும்பு)

சீனாவில் இருந்து ஏவப்படவுள்ளதாக கூறப்படும் இலங்கையின் முதலாவது செய்மதியான சுப்ரீம் சட் 1 இல், இலங்கையின் தேசியக்கொடி பறக்க விடப்பட வேண்டும் என்று இலங்கையின் பாதுகாப்பு அமைச்சும், தேசிய தொடர்பாடல் ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவும் கோரிக்கை விடுத்திருந்தன.

இந்தக்கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதா? என்று கடந்த சனிக்கிழமை நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் றுவன் விஜயவர்த்தன இந்தக் கேள்வியை எழுப்பினார்.

இலங்கையர் என்ற ரீதியில் செய்மதி ஒன்று அனுப்பப்படுவதை தாம் வரவேற்பதாக குறிப்பிட்ட அவர், எனினும் அது அனுப்பப்படும் விதம் குறித்து சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்தநிலையில் இலங்கையின் தேசியக் கொடிஙய குறித்த செய்மதியில் பறக்கவிட அனுமதி கிடைக்கவில்லை என்று தெரியவந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை இலங்கையின் தனியார் நிறுவனமான சுப்ரீம் சட், குறித்த செய்மதியில் இருந்து தொடர்புகளை பெற்றுக் கொள்ள 350 மில்லியன் டொலர்களை முதலீடு செய்யவிருந்ததாகவும் விஜயவர்த் தன தகவல் வெளியிட்டார்.

# பின்தங்கிய பிரதேசத்தில் ஐந்து வருடங்கள் சேவை

## ஆசிரியர்களுக்கு அமைச்சர் அறிவுரை

(கொழும்பு)

ஆசிரியர் தொழில் என்பது மிகவும் கடினமான தொழில் இல்லை என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். கல்வி அமைச்சில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பயிற்சிபெற்ற ஆசிரியர்களுக் கான நியமனம் வழங்கும் நியமனம் வழங்கும் நிகழ்வில் உரை யாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கும் போது, 5 வருடங்கள் மாத்திரமே பின்தங்கிய பிரதேசங்களில் பணியாற்ற வேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்படுகிறது. சில தெரிவுகளை மேற்கொள்ளும் போது, ஏனைய அதிமுக்கிய தேவைகளை விட்டுக் கொடுக்க வேண்டிய நிலைமை காணப்படுகிறது.

இந்த நிலையில் ஆசிரியர்கள் சுயநலம் கருதாதது, தமது பணிகளை செய்து முடிக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.


# தேசிய சுகாதார வாரம் அடுத்தமாதம் அனுஷ்டிப்பு

(கொழும்பு)

நாட்டில் உள்ள சுகாதாரப்பிரச்சினைகள் தொடர்பாக மாகாண சுகாதார அமைச்சர்கள் ஒன்று கூடி ஆராய்ந்துள்ளனர். இம்மாநாட்டில் தேசிய சுகாதார வாரம் பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது. நாரஹேன்பிட்டி குருதி வங்கி மத்திய நிலையத்தில், இடம்பெற்ற இந்த ஒன்றுகூடல் மாநாட்டில், சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன கலந்து கொண்டு உரையாற்றினார்.

அடுத்த வருடம், தொற்றா நோய் ஆண்டாக பெயரிடப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், தொற்றா நோயினைக் கட்டுப்படுத்துவதற்கான தேசியத் திட்டங்கள் பல நாடளாவிய ரீதியாக மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார்.

இது தவிர, அடுத்த மாதம் 10ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரையிலான வாரத்தினை தேசிய சுகாதார வாரமாக பிரகடனப்படுத்தப் படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

26. 



பெட்டியினுள் தரப்பட்ட உருவில் A வட்டத்திற்கும் B வட்டத்திற்கும் பொதுவான இலக்கங்கள் யாவை?

1. 5.3    2. 4.2    3. 1.6

27. காகம் ஒன்று தனது அலகில் வடையுடன் அமர்ந்திருந்தது. அவ்வழியே வந்த நரி அதனைக் கண்டது. காகத்திடம் வடையை அபகரிக்க எண்ணியது. காக்கையாரே காக்கையாரே நீர் இனிமையாகப் பாடுவீர். ஒரு பாட்டுப்பாடு என்றது. காகம் வடையைத் தனது கால்களுக்கு இடையே வைத்தபடி கா கா என்று கரைந்தது. நரி வெட்கத்துடன் சென்றது. இக்கதையில் இருந்து புலப்படும் கருத்து யாது?


1. காகம் நரியைக் கண்டால் கரையும்
2. பிறரை வஞ்சிக்க நினைப்பவர்கள் தாமே ஏமாறுவார்கள்
3. நரிக்கு வடை என்றால் மிகவும் விருப்பம்


28. A,B ஆகிய இரண்டு தட்டிலும் உள்ள மெழுகுதிரிகள் ஒரே அளவானவை. இரண்டையும் ஒரே நேரத்தில் எரியச் செய்து இரண்டும் வெவ்வேறு அளவுடைய போத்தல்களினால் ஒரே நேரத்தில் மூடப்பட்டது. இதன்போது முதலில் அணைந்த மெழுகுதிரி எது?






1. A தட்டில் உள்ள மெழுகு திரி
2. B தட்டில் உள்ள மெழுகு திரி
3. A, B ஆகிய இரண்டு தட்டிலும் உள்ள மெழுகுதிரி ஒரே நேரத்தில் அணைந்தது


## பொது உளச்சார்புப் பயிற்சி

01) 

02) 

03) 

04) 

05) 



தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013    பகுதி - I    1.30 மணி

கல்வி முரசு    வெளியீடு 14

இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.



**அடைப்புக்குள் உள்ள ஒருசொல் வித்தியாசமானது. அதன் கீழ்க் கீறிடுக.**

01. ஒழுக்கம் - (நடை, நன்னடத்தை, ஒழுகுகை, சீலம்)
02. ஆர்வம் - (அன்பு, விருப்பு, பற்றுள்ளம், ஆரவாரம்)
03. ஒழுகல் - (ஆசாரம், ஒழுகுதல், நடத்தல், இளகுதல்)
04. தருமம் - (அறம், தருமம், நற்செயல், நீதி)
05. காலம் - (அகாலம், பொழுது, பருவம், தக்கசமயம்)

**ஒத்த கருத்துச் சொற்களைத் தெரிந்து எழுதுங்கள்**

(நெகிழ்தல், நன்மை, செய்தல், மனம், வையகம்)

06. உலகம் :........................................
07. உள்ளம் :........................................
08. கசிதல் :........................................
09. நன்றி :........................................
10. இயற்றல் :........................................

**பின்வரும் நிகழ்வுகள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான பழமொழிகளைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுங்கள்.**

11. சந்தர்ப்பம் கிடைக்கும்போது அதனைத் தக்கபடி பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.
1. சுவரை வைத்துக்கொண்டே சித்திரம் வரைய வேண்டும்.
2. சிறுதுரும்பும் பல்லுக்குத்த உதவும்
3. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்
4. மனமுண்டானால் இடமுண்டு

12. மழைபெய்ததை மண்ணால் மூடி மறைக்க முடியாது.
1. கழுதை அறியுமா கற்பூர வாசனை
2. உலை வாயை மூடலாம் ஊர்வாயை மூட முடியுமா.
3. உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?
4. கோழி மிதித்துக் குஞ்சு சாகுமா!

13. அடியார்கள் வழங்கிய நிதியுதவி கொண்டு ஆலயத்தேர் பெரும் செலவில் செய்யப்பட்டுள்ளது.
1. போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து
2. சிறு துரும்பும் பல்குத்த உதவும்
3. சிறு துளி பெரு வெள்ளம்
4. பாத்திரமறிந்து பிச்சை இடு

14. நாம் நினைப்பது ஒன்று. நடப்பது ஒன்று. எவ்வளவு ஆசைகளை மனதில் ஏற்றிவைத்த மக்களுக்கு ஏற்பட்ட கதியினை கணிப்பிட முடியாது. உலகத்தையே துன்பத்தில் ஆழ்த்திவிட்டது இந்தச் சுனாமிப் பேரலை. கணக்கிட முடியாத உயிர்களை, உடமைகளை எல்லாம் இழந்த மக்கள் யாரை நினைக்கப் போகிறார்கள். யார்தான் உதவி செய்யப் போகிறார்கள். குடும்பமே முற்றாக அழிந்தவர்கள் போனாலும் குடும்பத்தில் தனியாகத் தவிக்கும் சிறுவர்களை நினைத்தால் வேதனை வருகிறது. ஆண்டவர் இப்படிக் கணக்கை முடித்தாரோ என்பது கேள்விக் குறிதான். எனவே நாங்கள் துன்பப்பட்டவர்களுக்கு ஏலுமான உதவியைச் செய்தல் வேண்டும்.

01. மேலே கூறப்பட்ட விவரணம் எதைப் பற்றியது?

.......................................................................................................

02. உடமைகள் என்பது எவற்றைக் குறிக்கும்?

.......................................................................................................

03. உயிர் என்பதன் ஒத்தசொல் ஒன்று தருக.

.......................................................................................................

04. ஆசை என்பதன் எதிர்ச் சொல் ஒன்று தருக.

.......................................................................................................

05. உமது மனதில் சோகத்தை ஏற்படுத்திய ஒரு பகுதியை எழுதுக.

.......................................................................................................

06. குடும்பம் என்பது யாரைக் குறிக்கும்?

.......................................................................................................

07. உயர்திணை, பலர்பால், பன்மை, படர்க்கை உள்ள பெயர்ச்சொல் தருக.

.......................................................................................................

08. 'இன்பம்' என்பதன் எதிர்ப்பதம் இரண்டு உண்டு. அவற்றைக் கூறுக.

1........................................ 2........................................

09. வாழ்க்கை யாரினால் நிர்ணயிக்கப்படுகிறது எனக் கூறப்படுகின்றது?

.......................................................................................................

10. கூடுதலாகப் பாதிக்கப்பட்ட மக்கள் எப்பகுதியை அண்டி வாழ்ந்தவர்கள் எனக் கருதப்படுகின்றது?

.......................................................................................................

**15. பின்வரும் ஒழுங்கின்றி இருக்கும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்தி எழுதுக.**

01. சென்று / வீடு திரும்பினார் / கடவுளை / கோவிலுக்கு / வணங்கி

.......................................................................................................

02. கேட்டு / சொல் / பெரியோர் / நன்று / நடத்தல்

.......................................................................................................

**16. பின்வரும் கூற்றின் கருத்தை வெளிப்படுத்தும் பழமொழியை எழுதுக.**

01. ஒருவருடன் பழகும்போது அளவுடன் பழகுதல் வேண்டும்.

.......................................................................................................

02. எந்தச் செயற்பாடாயினும் ஏனையோர் உதவியை எதிர்பாராது நாமே செய்தல் நன்று.


.......................................................................................................



17. பின்வரும் வீதி சமிக்ஞை மூலம் குறிப்பிடப்படுவது யாது?




1. முன்னால் சிறுவர் கடவை
2. முன்னால் பாதசாரிகள் கடவை
3. முன்னால் பாதை வேலை

18. 

மூன்று வகையான மண் மாதிரிகள் சம அளவில் எடுத்து புனலினுள் பஞ்சு இடப்பட்டு புனலில் சம அளவான மண் A,B,C போத்தலில் இடப்பட்டது எனின் C புனலில் இடப்பட்ட மண் யாதாக இருக்கும்.

1. இருவாட்டி மண் 2. களிமண் 3. மணல்மண்


19. அருகில் தரப்பட்ட படத்தில் காட்டப்பட்டது போன்று நீர்கொண்ட முகவை ஒன்றில் தடி ஒன்றில் வெவ்வேறு பகுதியில் காட்டப்பட்டவாறு நீர் கொண்ட முகவையில் தடிவைக்கப்பட்டது எனின், A,B,C என்ற வித்துக்களில் எவ்வித்து நன்கு முளைத்திருக்கும்.



1. A 2. B 3. C


20. பொருத்தமற்ற தொடர்பினைத் தெரிவு செய்க.

A) புலன்கள் - உணர்ச்சிகள்
B) நாடகம் - கதாபாத்திரம்
C) கிராமம் - தொழிற்சாலை

21. 

இம் மணிக்கூட்டில் காட்டும் நேரத்தை தளவாடி ஒன்றினூடாகப் பார்க்கும்போது காட்டும் நேரம் யாது?

1. 9 மணி 2. 3 மணி 3. 12 மணி 15 நிமிடம்

22. 


இவ்வென்னுருவில் மூன்று விளையாட்டிலும் பங்கு பற்றியவர்களைக் குறித்து நிற்கும் இடத்தை நிறம் தீட்டிக் காட்டுக.

23. 8 மாடுகள் 8 சாக்குப் புல்லை 8 நாட்களில் தின்று முடிக்குமாயின், ஒரு மாடு 8 சாக்குப் புல்லைத் தின்று முடிப்பதற்கு எத்தனை நாட்கள் எடுக்கும்?

1. 8 நாட்கள் 2. 64 நாட்கள் 3. 1 நாட்கள்

24. பின்வரும் சொற்கள் ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக அமைகின்றது. அதனைத் தெரிவு செய்க.

| | | | |
|---|---|---|---|
| 1. கத்தி | திகதி | கல்வி | விடுதி |
| 2. வீதி | திகதி | திம்பு | புதல்வி |
| 3. சங்கு | குளவி | குழந்தை | தையல் |

25. அகர வரிசையில் சொற்களை ஒழுங்குபடுத்தி அதற்குரிய கருத்தை இலகுவில் விளக்கும் நூல் எது?


1. அகராதி 2. அரிச்சுவடி 3. நிகண்டு




அருகில் தரப்பட்ட தராசுத் தட்டுக்கள் சமநிலை அடைவதற்கு பாரம் குறைந்த தட்டில் வைக்க வேண்டிய நிறையைத் தெரிவு செய்க.

1. 750g 15000g, 2kg 2. 500g, 1kg, 2kg 3. 400g, 3000g, 800g

# இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே எல்லை உரிமையில் புதிய பிரச்சினை



(புதுடில்லி)


எல்லைகளை உரிமை கோருதல் தொடர்பாக இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே புதிய பிரச்சினை ஒன்று வெடித்திருக்கிறது.

புதிய சீன கடவுச் சீட்டுக்களில் இருக்கும் வரைபடத்தில் எல்லைப் பிராந்தியங்களான அருணாச்சல பிரதேசம் மற்றும் அக்சாய் சின் ஆகியன சீனாவின் பகுதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளதே இந்த புதிய பிரச்சினையாகும்.

இதற்கு பதிலடியாக இந்திய அரசாங்கமும் சீனக் கடவுச் சீட்டுக்களில் இந்த பிராந்தியங்களை தமது பிர தே சங்களாக காட்டும் வரைப டத்தை பொறித்து வருவதாக கூறப்படுகிறது.

தென்சீனக் கடலில் இருக் கும் பல சர்ச்சைக்குரிய பகுதிகளை சீனா தனது பகுதிகளாக தனது கடவுச் சீட்டுக்களில் காண்பித்திருப்பது குறித்து பற்றி வியட்நாமும், பிலிப்பைன்ஸ்ஸும் கண்டனம் வெளியிட்ட மறுதினம் இந்த விவகாரம் கிளம்பியிருக்கிறது

# முன்னாள் இந்தியப் பிரதமர் குஜ்ராலின் உடல்நிலை பாதிப்பு



(குர்கான்)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ஐ.கே குஜ்ராலின் உடல் நிலை மிகவும் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நுரையீரலில் ஏற்பட்டுள்ள தொற்று காரணமாக குர்கான் நகரில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

அவரது உடல் நிலை கவலைக்கிட மாக இருப்பதாக தகவல்கள் தெரி விக்கின்றன.

92 வயதாகும் ஐ.கே குஜ்ரால், கடுமையான நெஞ்சு வலி காரண-மாக கடந்த சில நாட்களுக்கு முன்பு மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டார்.



கொல்கத்தாவில் நடைபெற்ற புத்தக வெளியீட்டு விழாவில் கலந்து கொண்ட மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி.


# சோமாலிய கடற்கொள்ளையர்களிடமிருந்து இந்தியர்களை மீட்க நடவடிக்கை

(புதுடில்லி)

சோமாலியா கடற்கொள்ளையர் களால் பிடிக்கப்பட்டு இரண்டு ஆண்டுளாக பணையக் கைதி களாக வைக்கப்பட்டுள்ள இந் திய மாலுமிகள் ஏழு பேரை விரைவில் மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்தச் செயலை மத்திய அரசு எடுத்து வருவதாக கப் பல் போக்குவரத்துத்துறை அமைச் சர் ஜி.கே. வாசன் தெரிவித்தார்.

கேரள மாநிலத்தவர் உள்ளிட்ட இந்திய மாலுமிகளை மீட்க, இந் தியாவில் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ள சோமா லிய கடற் கொள்ளையர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று மத்திய கப்பல் போக் குவரத்துத்துறை அமைச்சர் ஜி.கே. வாசன் மற்றும் வெளி யுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷீத் ஆகியோரைச் சந்தித்து கேரள மாநில முதலமைச்சர்



உம்மன் சாண்டி கோரிக்கை விடுத்தார்.

இது பற்றி கருத்துத் தெரிவித்த மத்திய அமைச்சர் வாசன், மும்பையில் சிறை வைக்கப்பட்டுள்ள 120 சோமாலிய கடற் கொள்ளையர்கள் மீதான வழக்கை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்குமாறு கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சகம் மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

சோமாலிய கடற் கொள்ளையர்களை விடுவித்து, இந்திய மாலுமிகளை விரைவில் பாதுகாப்பாக மீட்பதற்கான அனைத்து முயற்சிகளையும் மத்திய அரசு எடுத்து வருவதாகவும், அந்த முயற்சி வெற்றி பெறும் என்றும் வாசன் நம்பிக்கை தெரிவித்தார்.


## உள்ளங்கையில்....

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

கணவன் மனைவிகளும் காதலர்களும் பரஸ்பரத் துணைகளை வேவுபார்ப்பதற்காக இந்தக் கருவிகளைப் பயன்படுத்துகிறார்கள் என்றும், அதன் மூலம் தங்களது தனி மனித சுதந்திரத்திற்குள் ஊடுருவினார்கள் என்றும் ஏராளமான விவாகரத்து வழக்குகளும், நஷ்ட ஈடு வழக்குகளும் அமெரிக்கா முழுவதுமாக நடத்தப்பட்டு வருகின்றன.

நாம் செல்லும் வழித்தடங்களில் நம்மை வழி நடத்திச் செல்ல ஆயிரம் சாதனங்கள் வந்து விட்டன. உலகமே நம் உள்ளங்கையினுள் அடங்கி விட்டது. ஆனால் வாழ்க்கைப் பாதையில் நாம் வழி தவறிச் செல்லும் தருணங்களில் மீட்டு வருவதற்கு நமக்கு மன பலமும் அறிவுணர்வும் ஆன்மீக வழிகளும் மட்டுமே துணை நிற்கப் போகின்றன. நம் வாழ்க்கைப் பாதையில் வழி நடத்தக் கூடிய ஒரே மென்பொருள் நம் மனசாட்சியின் குரலாக மட்டுமே இருக்க முடியும். இனித் தைரியமாகக் கண் போன போக்கிலே கால் போகலாம். திருப்பி நம் இடம் கொண்டு சேர்க்க ஆயிரக்கணக்கான மென்பொருட்கள் காத்திருக்கின்றன. ஆனால் மனம் போன போக்கில் மனிதன் போனால் அவனை நல்வழி நடத்திச் செல்ல எந்தவிதமான ஜி.பி.எஸ். மென்பொருளும் உதவிக்கு வராது. மனிதன் போகும் பாதையை மறந்து போனால் ஆற்றுப் படுத்தி வழி நடத்த கூகுள் கூடவே வரப் போவதில்லை. மனிதனின் ஆன்மாவுக்கான தேடுபொறிகள் வேறு வகையானவை.

# தென் தமிழகத்தில் மழை நீடிக்கும்; சென்னை வானிலை ஆய்வு மையம்



(சென்னை)

வங்கக்கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு நிலை காரண-மாக தென் தமிழகத்தில் இன்றும் மழை நீடிக்கும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.


வட தமிழகத்தின் ஒரு சில இடங்களிலும் மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை மையம் அறிவித்துள்ளது.

வங்கக்கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு நிலை காரண-மாக, கடந்த 24 மணி நேரத்தில் தென் மாவட்டங்களில் கனமழை பெய்துள்ளது.

திருநெல்வேலி மாவட்டம் தென்காசி பகுதியில் பெய்த மழை காரணமாக, குற்றால அருவிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதேபோல் தூத்துக்குடி, விருதுநகர் உள்ளிட்ட மாவட்டங்களிலும் மழை பெய்து வருகிறது.

காற்றழுத்த தாழ்வு நிலை அதே இடத்தில் நீடிப்பதால், தென் மாவட்டங்களில் இன்றும் மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.




## வாழ்க வளமுடன்



தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பெயர் : ச. சத்தியா

முகவரி: நவாலி கிழக்கு, மானிப்பாய்.

அகவை 10 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்


## வடமாகாணக்...

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெடி அகற்றும் நிறுவனம் ஆகியன காட்சிப்படுத் தியிருந்தன.

ஹலோரஸ்ட் நிறுவனம் 2002 தொடக்கம் 2012 வரை 6,519,761 சதுர கிலோ மீற்றர் நிலப் பரப் பில் கண்ணிவெடிகளை அகற்றியுள்ளது.

இதேவேளை, 7,8,9ஆம் தர பாடசாலை மாண வர்களுக்கு வாழ்க்கைத் தேர்ச்சியும், குடியுரிமைக் கல்வியும் என்ற பாடத்துக்குள் மிதிவெடி அபாயக் கல்வி என்ற பாடத்தை 2013ஆம் ஆண்டு தொடக்கம் கல்வி அமைச்சு அறிமுகப்படுத்தவுள்ளது.


**விரைவான மீள்குடியேற்றம்!**

2009 ஆம் ஆண்டு இறுதிக்கட்ட போரால் இடம் பெயர்ந்தவர்கள் தங்க வைக்கப்பட்டிருந்த 'மெனிக் பாம்', யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள், குடியிருப்புக்களின் நிலை, யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின் நடைபெற்ற மீள்குடியேற்றம், மீள் குடியேற்ற பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்திகள் என படிப்படியான முன்னேற்றம் குறித்து கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த மாதிரி அமைப்புக்கள் மூலம் அறிந்துகொள்ள முடிந்தது.

இவ்வாறு வடக்கு மகாணம் அனைத்து துறை களிலும் தற்போது அடைந்துள்ள வளர்ச்சி தொடர்பிலும், எதிர்காலத்தில் அடையப்போகும் வளர்ச்சி தொடர்பிலும் இந்த வடக்கு மாகாணக் கண்காட்சி அறியத்தந்தது.

மிக விரைவில் ஏனைய மாகாணங்களை விட அபிவிருத்தியடைந்த மாகாணமாக வட மாகாணம் மாறும் என்பதில் ஐயமில்லை.

# அமெரிக்க கடற்படையினர் அத்துமீறல்; ஐ.நா. சபையில் ஈரான் குற்றச்சாட்டு



(தெஹ்ரான்)

சர்வதேச சட்டதிட்டங்களுக்கு எதிராக நடப்பதாகவும், கடற்பகுதிகளில் அத்துமீறி நுழைவதாகவும் அமெரிக்கா மீது ஈரான் குற்றம்சாட்டியுள்ளது.

இது தொடர்பாக ஐ.நா பொதுச்செயலர் பான் கீ மூனுக்கு ஐ.நாவுக்கான ஈரான் தூதர் முகமது கஸாயி கடிதம் அனுப்பி உள்ளார்.

இக்கடிதத்தில் கூறப் பட்டுள்ளதாவது, அமெரிக்க கடற்படையினர் ஈரான் நாட்டின் கடற்பகுதியில் அத்து மீறி நுழைகின்றனர்.

கடற்கரையோரத்தில் அமைந்துள்ள புஷ்ஹெர் நகரின் வான்பகுதியில் ஒக்ரோபர் மாதம் 7 முறையும், நவம்பர் மாதம் ஒரு முறையும் அமெரிக்கக் கடற்படையினர் அத்துமீறியுள்ளனர்.

சர்வதேச சட்டதிட்டங்களுக்கு எதிராக அமெரிக்கா நடந்து வருகிறது. இந்நடவடிக்கையினால் ஏதேனும் பாதகமான விளைவுகள் ஏற்படின் - பொறுப் பேற்க வேண்டும்.

அமெரிக்காவின் அத்துமீறல் நடவடிக்கையை ஐ.நா. கண்டிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட் டிருந்தது. இதுவரையிலும் ஈரானின் குற்றச்சாட்டுக்கு அமெரிக்கா எவ்வித பதிலும் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# சவீதா மரணம் குறித்து பொது விசாரணை நடத்தப்படும்



இந்தியாவை சேர்ந்த பெண் சவீதாவின் மரணம் குறித்து பொது விசாரணைக்கு உத்தரவிட வாய்ப்புள்ளது என்று அயர்லாந்து அரசின் மூத்த அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் கர்நாடக மாநிலம் பெல்காமைச் சேர்ந்த சவீதா, தனது கணவர் பிரவீணுடன் அயர்லாந்தில் வசித்து வந்தார்.

கருக்கலைப்புக்காக அங்குள்ள மருத்துவமனையொன்றில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அயர்லாந்து, கத்தோலிக்க நாடு என்பதால் கருக்கலைப்புக்கு மருத்துவர்கள் மறுத்தனர். இதனைத் தொடர்ந்து சவீதா மரணமடைந்தார்.

இதுதொடர்பாக மருத்துவ விசாரணைக்கு அந்நாட்டு அரசு உத்தரவிட்டுள்ளது. ஆனால் இந்த விசாரணை மீது தனக்கு நம்பிக்கையில்லை என்றும், பொது விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்றும் சவீதாவின் கணவர் பிரவீண் வலியுறுத்தி வருகிறார்.

இந்நிலையில் அயர்லாந்து மருத்துவ அமைச்சர் ஜேம்ஸ் ரெய்லி, பிரவீணை கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்து ஆழ்ந்த வருத்தம் தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து, சவீதா மரணம் தொடர்பாக பொது விசாரணைக்கு உத்தரவிட வாய்ப் புள்ளது என்று அயர்லாந்து அரசின் மூத்த அதிகாரி இமன் கில்மோர் கூறியதாக தகவல் வெளியாகி உள்ளது.

# பங்களாதேஷில் தீ விபத்து 120 பேர் உடல் கருகிப் பலி



பங்களாதேஷ் தலைநகர் டாக்கா அருகே உள்ளே புடவை தொழிற்சாலையொன்றில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தீ விபத்தில் சுமார் 120 பேர் வரை உயிரிழந்துள்ளனர்.

மேலும் பலர் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகின்றது. தீயில் கருகி பல தொழிலாளர்கள் உயிரிழந்துள்ள அதேவேளை, சிலர் கட்டடத்தில் இருந்து தம்மைக் காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டு கீழே குதித்துள்ளதனாலும் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன.

இந்தப் புடவை ஆலை கட்டடமானது 9 மாடிகளைக் கொண்டதெனவும் இதில் நூற்றுக்கணக்கானோர் தொழில் புரிவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. மீட்பு பணியும் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

# நாய் கடித்தால் தபால் இல்லை; பிரிட்டன் தபால்துறை எச்சரிக்கை



தபால்காரர்களை நாய் கடித்தால், அந்த நாயின் எஜமானர் வீட்டுக்கு தபால் விநியோகம் செய்வதை நிறுத்தப் போவதாக பிரிட்டன் தபால் துறை எச்சரித்துள்ளது. பிரிட்டனில் ஒவ்வொரு ஆண்டும், தபால்காரர்கள் 3000 பேர் நாய்க் கடியால் பாதிக்கப்படுகின்றனர். இதற்கு நாய்களின் எஜமானரை தண்டிக்க, உரிய சட்டங்கள் இல்லாததால், தபால்காரர்கள் தொடர்ந்தும் பாதிப்புக்கு உள்ளாகின்றனர்.

நாய்க் கடியால் பாதிக்கப்பட்ட தபால்காரர்கள் ஒன்று சேர்ந்து இதற்கு உரிய தீர்வு காணும்படி வற்புறுத்தியுள்ளனர். தபால்காரர்களைப் பாதுகாக்க உரிய சட்டங்கள் இயற்றும்படி, நீதிமன்றம் உத்தரவிட்டு உள்ளது. தபால்காரர்களை கடிக்கும் நாய்களின் எஜமானர்கள் மீது வழக்குத் தொடரவும், அவர்களது வீட்டுக்கு தபால்கள் விநியோகிப்பதை நிறுத்தவும் விதிமுறைகளை வகுக்கப் போவதாக றோயல் மெயில் நிறுவனம் அறிவித்துள்ளது.



**கியூபாவின் ஹவன்னா நகரில் நடைபெற்ற கொலம்பிய அரசுடனான பேச்சுவார்த்தையில் பங்கேற்க வந்த கொலம்பிய புரட்சிக்கார படையின் உறுப்பினர் தன்ஜா நிஜ்மெய்ஜர்.**

# எகிப்தில் ஜனாதிபதிக்கு எதிராக மீண்டும் மக்கள் போராட்டம்



(கெய்ரோ)

எகிப்தில் ஜனாதிபதி முகமது முர்ஸிக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருகின்றன. எகிப்து ஜனாதிபதிக்கு வரம்பற்ற அதிகாரத்தை வழங்கும் அரசியல் சாசன அறிவிப்பை ஜனாதிபதி முகமது முர்சி வெளியிட்டார்.

மேலும் ஜனாதிபதியின் முடிவுகள் நீதிமன்ற பரிசீலனைக்கு அப்பாற்பட்டவை என்று அவர் அறிவித்துள்ளதை எகிப்து நீதித்துறை கண்டித்துள்ளது.

இதுகுறித்து அந்நாட்டின் உச்ச நீதிக்கவுன்சில், இது நீதித்துறை சுதந்திரத்தின் மீதும் அதன் உத்தரவுகள் மீதும் முன்னெப்போதும் இல்லாத தாக்குதல் என்று விமர்சித்துள்ளது.

இதனிடையே ஜனாதிபதியின் அறிவிப்பை எதிர்த்து எதிர்க் கட்சிகள் போராட்டம் நடத்தத் திட்டமிட்டுள்ளன.

இதற்காக எதிர்க்கட்சித் தொண்டர்கள் அடங்கிய குழுவொன்று கெய்ரோவில் உள்ள தாரிர் சதுக்கத்தில் கூடாரம் அமைத்துத் தங்கியுள்ளது. அவர்களுடன் நேற்று முன்தினம் காலையில் மேலும் சில தொண்டர்கள் சேர முயற்சித்தபோது, பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசினர்.

தவிர ஜனாதிபதி முர்ஸியின் சர்வாதிகாரப் போக்கைக் கண்டித்து நாடு முழுவதும் மக்கள் வீதிகளில் இறங்கிப் போராடத் தொடங்கியுள்ளனர். ஏற்கெனவே, முன்னாள் ஜனாதிபதி முபாரக்கை எதிர்த்து மக்கள் போராட்டம் நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

# சீனா அரசின் அதிரடி உத்தரவு

எய்ட்ஸ் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க மறுக்கும் மருத்துவமனைகளின் உரிமம் இரத்துச் செய்யப்படும் என சீன அரசு அறிவித்துள்ளது.

சீனாவில் ஏழு இலட்சம் பேர் எய்ட்ஸ் மற்றும் எச்.ஐ.வி.யால் பாதிக்கப்பட்டுள்ளனர். எச்.ஐ.வி.யால் பாதிக்கப்பட்டிருந்த டியான்ஜின் நகரைச் சேர்ந்த வாலிபருக்கு நுரையீரல் புற்றுநோய் சிகிச்சை மேற்கொள்ள வேண்டி இருந்தது.

ஆனால் அவருக்கு சிகிச்சை அளிக்க எந்தவொரு மருத்துவமனையும் முன்வரவில்லை. இதுகுறித்து அவர் சீன அரசிடம் முறையிட்டார்.

இதனையடுத்து சீன அரசு புதிய உத்தரவைப் பிறப்பித்துள்ளது. அதில், எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு சிகிச்சை அளிக்கத் தயங்கக்கூடாது.

உண்மையிலேயே போதிய வசதிகள் இல்லாத மருத்துவமனை என்றால், வேறொரு மருத்துவமனையைப் பரிந்துரை செய்யலாம்.

அத்துடன் எய்ட்ஸ் நோயாளிகளுக்கு தேவையான சிகிச்சை மற்றும் ஆலோசனைகளை வழங்க வேண்டும். இதைச் செய்யாத பட்சத்தில் அந்த மருத்துவமனைகளின் அங்கீகாரம் இரத்துச் செய்யப்பட்டு மூடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு ஆடைக் கைத்தொழில்துறையினர் கோரிக்கை

(கொழும்பு)

அரசாங்கம் முன்வைத்துள்ள நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என இலங்கையின் ஆடைக் கைத்தொழில் துறையினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தப் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படாமை காரணமாக தமது உற்பத்திகளுக்கு ஐரோப்பாவின் சந்தை வாய்ப்புக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக ஆடைக் கைத்தொழில் நிறுவனத்துறையினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படுவதன் மூலமே ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜிஎஸ்பி சலுகையின் பலன்களை பெற்றுக்கொள்ள முடியும்.

கடந்த வாரம் கொழும்பில் கூடிய ஆடைக் கைத்தொழில் ஏற்றுமதியாளர்களின் பொதுக் கூட்டத்தில் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

ஏற்றுமதியாளர் சங்கத் தலைவர் யோகான் லோரன்ஸ், இதன் போது கருத்துரைக்கையில், நாம் முகங்கொடுத்து வரும் நட்டங்களை ஒரே இரவில் சரிசெய்து விடமுடியாது.

எனவே அரசாங்கம் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தி ஆடைக் கைத்தொழிலை முன்னேற்ற நடவடிக்கை எடுக்கும் என்று தாம் எதிர்பார்ப்பதாக குறிப்பிட்டார்.

# கத்திக்குத்தில் முடிவடைந்த இளைஞர் குழு மோதல்

(நெல்லியடி)

நெல்லியடி நகரப்பகுதியில் இரு இளைஞர் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் ஒருவர் கத்திக்குத்துக்கு இலக்கானார்.

நேற்று முன்தினம் இரவு 10.00 மணியளவில் கலிகைப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் குழுவுக்கும் இராஜகிராமம் பகுதியைச் சேர்ந்த இளைஞர் குழுவுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டுள்ளது. இதில் ஒருவர் காயமடைந்ததுடன் அவரது துவிச்சக்கர வண்டி யாக்கரையில் உள்ள கிணற்றில் வீசப்பட்டுள்ளது.

இராஜகிராமத்தைச் சேர்ந்த தங்கேஸ்வரன் பிரதீபன் (வயது -26) என்பவரே இவ்வாறு கத்திக்குத்துக்கு இலக்கான நிலையில் நெல்லியடிப் பொலிஸாரின் உதவியுடன் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் நெல லியடிப் பொலிஸார் நேற்றுக் காலை இரண்டு சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளனர். சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் சிலர் தலைமறைவாகி விட்டனர். அவர்களைத் தேடும் பணியில் பொலிஸார் நேற்று ஈடுபட்டனர். சந்தேக நபர்கள் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படுவர் என பொலிஸார் தெரிவித்தனர். (18)

### அனர்த்த...

3 எச்சரிக்கை கோபுரங்கள் மின்சாரத்திலும் இயங்குவதாகவும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் யாழ். மாவட்ட அதிகாரி மேலும் தெரிவித்தார்.

### இலங்கை...

அரசும் இராஜதந்திர ரீதியில் காய்களை நகர்த்தி வருவதாக அறியமுடிகின்றது.

இதேவேளை, தமிழர் பிரச்சினைக்கான தீர்வில் அமெரிக்க அரசு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தொடர்புகொண்டு அக்கறையாகச் செயற்பட இலங்கை அரசுதான் காரணம். அதற்காக இலங்கை அரசுக்கு நாம் நன்றி சொல்லவேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

தமிழ்க் கூட்டமைப்புடன் அமெரிக்கா பேணிவரும் தொடர்பாடல்கள் மற்றும் சந்திப்புகள் குறித்து கருத்து வெளியிட்ட அவர், இது தொடர்பில் மேலும் கூறியதாவது,

அமெரிக்க அரசு எங்களுடன் தொடர்பாடல்களை மிகவும் சிறந்த முறையில் பேணி வருகிறது. அண்மையில் இலங்கை வந்திருந்த அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பிரதிநிதி எங்களுடன் நடத்திய சந்திப்பு மிகவும் ஆக்கபூர்வமாக இருந்தது.

இப்படி எங்களுடன் அமெரிக்க அரசு தொடர்பாடல்களை பேண இலங்கை அரசுதான் காரணம். அதற்காக அவர்களுக்கு நாம் நன்றியைத்தான் சொல்லவேண்டும்.

தமிழர் பிரச்சினை தீர்வில் இந்த அரசு காட்டிவரும் கபடப் போக்கு, நேர்மையற்ற தன்மை என்பவற்றை அமெரிக்கா நன்கு புரிந்து கொண்டுள்ளது.

இன்னும் எதிர்காலத்தில் தமிழர் பிரச்சினைத் தீர்வில் அமெரிக்கா எமக்கு ஆதரவாக செயற்படும் என்று நாம் உறுதியாக நம்புகின்றோம். அரசின் ஏமாற்றுப்போக்கை இன்று உலக நாடுகள் உணர்ந்துள்ளன என கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் மேலும் தெரிவித்தார்.

### அமைச்சரவையில்...

முன்னதாகவே எதிர்பார்க்கப்பட்டது. இருந்தபோதிலும், புதிய பிரதமர் யார் என்பது தொடர்பில் உருவான சர்ச்சை காரணமாகவே இந்த மாற்றம் தள்ளிப்போடப்பட்டது. இப்போது, பிரதமர் பதவியிலிருந்து விலகுவதற்கு ஜயரட்ண இணக்கம் தெரிவித்திருப்பதால் டிசம்பர் மாதத்தில் அமைச்சரவை மாற்றம் இடம்பெறும் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடும் சுகவீனமுற்றுள்ள பிரதமர் ஜயரட்ண தற்போது அமெரிக்காவில் சிகிச்சை பெற்றுவருகின்றார். அவரை ஜனாதிபதி நேரில் சந்தித்தபோது, பிரதமர் பதவியிலிருந்து விலகுவதற்கு அவர் இணக்கம் தெரிவித்ததாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புதிய பிரதமராக ஜனாதிபதியின் சகோதரரும் தற்போதைய சபாநாயகருமான சமல் ராஜபக்ஷ நியமிக்கப்படலாம் என சில தகவல்கள் தெரிவிக்கின்றன. இருந்த போதிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் சிலர் இதனை எதிர்ப்பதாகத் தெரிகின்றது. அமெரிக்காவில் தற்போது விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி கொழும்பு திரும்பியவுடன், இந்த விடயத்தில் கவனம் செலுத்துவார் என அந்தத் தகவல்கள் மேலும் தெரிவித்தன.

### மனித...

தொடரில் கலந்துகொண்ட இலங்கை பிரதிநிதிகள் குழுவின் தலைவர் அமைச்சர் மகிந்த சமரசிங்கவிடம் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

உத்தேச அறிக்கையில் முன்வைக்கப்படவுள்ள பரிந்துரைகள் அடங்கிய செயற்பாட்டுத் திட்டத்தை எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தொடரில் சமர்ப்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையை தயாரிக்கும் போது கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு முன்வைத்த பரிந்துரைகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்படுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### அமெரிக்க...

இது அதிகாரபூர்வ பயணமல்ல, எனவே அமெரிக்க அரசாங்கத்துடன் எந்தப் பேச்சுக்களும் நடத்தப்படமாட்டாது. அங்கு அமெரிக்க அரசின் பிரதிநிதிகளுடன் எந்த விதமான அதிகாரபூர்வ சந்திப்புகளுக்கும் ஏற்பாடு செய்யப்படவில்லை என்று தெரிவித்துள்ளார்.

### தடுக்க...

மேற்படி குழுவினரால் பஸ் நடத்துனர் தாக்கப்படுவதை அவதானித்த சாரதி அதனைத் தடுக்க முயன்றபோது சாரதியையும் மேற்படி குழுவினர் தாக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவத்தை தொடர்ந்து சாரதியும் பஸ் நடத்துனரும் சுன்னாகம் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக உடனடியாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் சாரதியும் நடத்துனரும் முறையிட்டுள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வளலாய் பிள்ளையார் ஆலயத்தில் எழுந்தருளி சிலை திருட்டு

(வடமராட்சி)

ஐம்பொன்னினால் உருவான மிகப் பழமை வாய்ந்த விநாயகர் எழுந்தருளி சிலை ஒன்று வளலாய் பிள்ளையார் கோயிலில் திருடப்பட்டுள்ளது.

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

62 வருடங்கள் பழமை வாய்ந்த விநாயகர் எழுந்தருளிச் சிலை சுமார் 50 கிலோ நிறையுடையதாக ஐம்பொன்னினால் உருவானது. இவ்வாலயம் 22 வருடங்களின் பின்னர் தற்போது நிர்வாகத்தினரிடம் கையளிக்கப்பட்ட நிலையில் பாலஸ்தானம் மேற்கொண்டு ஆலய விக்கிரகங்கள் அனைத்தும் ஒரு தனி அறையிலேயே காணப்பட்டது. இவ்வறையின் சுவரைச் சீற்றைக் கழற்றி இவ்விநாயகர் சிலை திருடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த 21 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது. மறுநாள் காலை பூஜை செய்வதற்காக அங்கு சென்ற பூசகர் சிலை திருடப்பட்டுள்ளதைக் கூறி அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறையிட்டார். பொலிஸார் மோப்பநாய் சகிதம் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இப்பகுதி, மக்களின் பாவனைக்கு கையளிக்கப்பட்டும் இதுவரை கண்ணிவெடி அகற்றப்படாமையினால் இன்னமும் ஆலயச் சூழலில் பொதுமக்கள் குடியிருப்பு இல்லாத நிலையில் இத்திருட்டுச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

பொலிஸ் நிலையத்தில் முறையிட்டும் இதுவரை திருட்டுச் சம்பவம் தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் இப்பகுதியில் கண்ணிவெடி அகற்றப்படாமையால் மக்கள் இன்னமும் மீள் குடியேறவில்லை என்றும் இப்பகுதியில் இராணுவத்தினர் மாத்திரமே இருப்பதாகவும் ஆலய நிர்வாக சபைத் தலைவர் ச.ஞானரூபன் தெரிவித்தார். சம்பவம் பற்றிக் கிராம சேவையாளருக்கும் முறையிட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (116)

# குறுந்தகவல்கள் மூலம் ஏமாற்றிய மூவர் கைது

கையடக்கத் தொலைபேசி மூலம் போலியான குறுந்தகவல்களை அனுப்பி ஏமாற்றிவந்ததாகக் கூறப்படும் மூவரை சிலாபம் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்களில் நைஜீரிய பிரஜைகள் இருவரும் இலங்கைப் பிரஜையும் அடங்குகின்றனர்.

அதிஷ்ட இலாபச் சீட்டிழுப்பில் கார் ஒன்றையும் பணத்தையும் ஏனைய பொருட்களையும் தாங்கள் வென்றுள்ளதாகக் கூறியே இவர்கள் போலியான குறுந்தகவலை அனுப்பியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சந்தேக நபர்களிடமிருந்து 70,000 ரூபா பணம், 2,450 அமெரிக்க டொலர்கள், ஒரு போலி கடவுச்சீட்டு மற்றும் 4 கையடக்கத் தொலைபேசிகளை மீட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர். இவர்கள் தொடர்பில் சிலாபம் பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

# பங்களாதேஷ் தீப்பரவல் சம்பவம்; இலங்கையருக்கு பாதிப்பில்லை

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவிற்கு அருகில் உள்ள அஷூலியா பிரதேசத்தில் ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் இடம்பெற்ற தீப்பரவல் சம்பவத்தில் இலங்கையர்கள் பாதிக்கப்படவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் சரத் வேரகொட இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

பங்களாதேஷில் உள்ள ஆடைத் தொழிலகங்களில் இலங்கையர்கள் பலர் பணியாற்றி வருகின்ற போதும், தீப்பரவல் ஏற்பட்ட தொழிலகத்தில் இலங்கையர்கள் இருக்கவில்லை என்று உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டார்.

பங்களாதேஷில் சுமார் 5 ஆயிரம் இலங்கை பணியாளர்கள் பணியாற்றி வருவதாகவும் அவர் தெரிவித்தார். குறித்த தீப்பரவல் சம்பவத்தில் 9 மாடிகளைக் கொண்ட கட்டடம் பாரிய சேதங்களை எதிர்கொண்டுள்ளது.

சிலர் தீக்காயங்களில் இருந்து தப்பிக்க முயன்று மாடிகளில் இருந்து வெளியில் குதித்த போதே உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவத்தில் 112 பேர் காயமடைந்ததாகவும், இன்னும் பலரை காணவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.


# மனித உரிமை செயன்முறை விசேட திட்டம் ஆரம்பம்

2013 ஆம் ஆண்டுக்கான மனித உரிமை செயன்முறைத் திட்டம் என்ற பெயரிலான விசேட திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சிவில் அமைப்புக்கள் மற்றும் மனித உரிமை ஆணைக்குழு ஆகியன இணைந்து இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி பிரதீபா மஹானாமஹேவா தெரிவித்தார். சிவில் அமைப்புக்களுக்கும் மனித உரிமை ஆணைக்குழுவுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளும் எதிர்பார்ப்பிலேயே இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றமை குறித்து இந்திய உயர்ஸ்தானிகராலயத்திடம் ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# சமாதான முனைப்பை பாராட்டினால் தேர்தலில் தோல்வி நிச்சயம்

## ஜனாதிபதி கூறியதாக விக்கிலீக்ஸ்




நோர்வேயின் சமாதான முனைப்புக்களைப் பாராட்டி னால் தேர்தலில் தோல்வியைத் தழுவ நேரிடும் என தற்போ தைய ஜனாதிபதியும், முன்னாள பிரதமரு மான மகிந்த ராஜபக்ஷ கூறிய தாக விக்கிலீக்ஸ் இணையம் தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத தூதரக அதிகாரிகள் அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்துள்ள குறிப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட் டுள்ளது.

2005 ஆம் ஆண்டு செப்ரெம் பர் மாதம் 12 ஆம் திகதி இந்தக் குறிப்பு அனுப்பி வைக்கப்பட் டுள்ளது. அப்போதைய பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கும், அப் போதைய அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லன்ஸ்டாடிற்கும் இடை யில் நடைபெற்ற சந்திப்பின் அடிப்படையில் தகவல்கள் வழங் கப்பட்டுள்ளன.

சமாதான ஏற்பாட்டாளர் பணி களை நோர்வே அரசாங்கம் சீரிய முறையில் மேற்கொண்டு வருவ தாகவும் வேறும் தரப் பினரை ஈடுபடுத்தும் திட்டம் கிடை யாது எனவும் பிரதமர் மகிந்த தெரிவித்துள்ளார்.

இலங்கை யுத்த நிறுத்தக் கண் காணிப்புக்குழு மற்றும் நோர்வே அரசாங்கத்தின் பணிகள் பாராட் டுக்குரியது என அவர் குறிப்பிட் டுள்ளார்.

எனினும், இந்த விடயங்களை வெளிப்படுத்தினால் தேர்தலில் வெற்றியீட்ட முடியாத நிலை மை ஏற்படும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தெற்கைச் சேர்ந்த 98 வீத மான மக்கள் நோர்வே அரசா ங்கம் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயற்பட்டு வருவ தாகவே கருதுகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார்.

நோர்வே அரசாங்கத்தை பாராட்டும் வகையிலான அறி விப்புக்கள் தேர்தல் தோல்விக்கு வழிகோலும் என அவர் குறிப் பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும் சமாதான முனைப்புக்கள் நூறு வீதம் முன னெடுக்கப்படும் என அவர் உறு தியளித்துள்ளார்.

தேர்தலில் வெற்றியீட் டினால விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிர பாகரனை நேருக்கு நேர் சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தத் தயார் என தாம் தேர்தலில் பிரசாரம் செய் துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# சிறைச்சாலை பாதுகாப்பிற்கு 200 பேரை இணைக்கத்திட்டம்

(கொழும்பு)

சிறைச்சாலை பாதுகாப்பு ஊழியர்கள் 200 பேரை சேவையில் புதிதாக இணைத்துக்கொள்ளப்படவுள்ளதாக இலங்கை சிறைச் சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் அண்மையில் இடம்பெற்ற மோதலையடுத்தும் நாட்டில் உள்ள சகல சிறைச்சாலைகளின் பாது காப்புக் கருதியும் மேற்படி ஊழியர்கள் புதிதாக சேவையில் இணைத் துக்கொள்ளப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் அறி வித்துள்ளது.

இதேவேளை சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதலின் போது வெளிநாட்டுக் கைதிகள் எவரும் தாக்குதலுக்கு உள்ளானார்களா என்பதை அறிய ஒவ்வொரு வெளிநாட்டுத் தூதரகங்களினால் பிரதிநிதிகள் அனுப்பப்பட்டு ஆராயப்பட்டுள்ளன.


27 கைதிகள் உயிரிழந்துள்ளதையடுத்து வெலிக்கடைச் சிறையில் இரவு நேரங்களில் பேய் ஆவிகள் சுற்றி வருவதாக வதந் திகள் பரவியுள்ளதை அடுத்து சிறைச்சாலை அதிகாரிகள் சமயச் சடங் குளை மேற்கொள்ள தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படு கின்றது

# இலங்கையில் தாய்ப்பால் வங்கி சுகாதாரக் கல்விப்பணியகம் திட்டம்

(கொழும்பு)

இலங்கையிலும் தாய்ப்பால் வங்கி ஒன்றை அமைப்பது குறித்து சுகாதார கல்விப்பணிய கத்தின் கவனம் திரும்பியுள்ளது.

தொழில் புரியும் தாய்மார் தமது குழந்தைகளுக்கு தாய்ப் பாலை ஊட்டுவதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்ற னர். எனவேதான் இலங் கையி லும் தாய்ப்பால் வங்கி ஒன்றை அமைப்பது குறித்து சுகாதார கல்விப்பணியகத்தின் கவனம் திரும்பியுள்ளதாகத் தேசிய போஷாக்கு தொடர்பான இணைப பாளர் டாக்டர் லலித் சந்திர சேன தெரிவித்தார்.



உலக தாய்ப்பால் ஊட்டல் தொடர்பான ஆய்வின் 2012ஆம் ஆண்டுக்கான அறிக்கை வெளி யிடும் வைபவம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. இந்த வைபவத்தின் போதே இது தொடர்பான தகவலை அவர் தெரிவித்தார்.

குழந்தை பிறந்து மூன்று அல்லது 4 மாதங்களில் தமது பிரசவகால விடுமுறை முடிந்த பின்னர் தாய்மார் தொழிலுக்குச் செல்ல நேரிடுகின் றது.இத்த கைய தாய்மார் தமது குழந் தைக்கு பால்மாவை வழங்கு கின்றனர்.

இதனால் குழந்தையின் போஷாக்கிற்கு பங்கம் ஏற்படு கின்றது. குறைந்த பட்சம் தாய் மார் ஆறு மாதகாலத்துக்காவது தமது குழந்தைகளுக்கு தாய்ப் பால் ஊட்ட வேண்டும் என வைத்திய நிபுணர்கள் தெரிவிக் கின்றனர்.

அத்தகைய தாய்மாரின் குழந் தைகளுக்கு தாய்ப்பால்வங்கி யூடாக தாய்ப்பாலைக் கொடுக்க முடியும் என தேசிய போஷாக்கு தொடர்பான இணைப்பாளர் டாக் டர் லலித் சந்திரசேன தெரிவித் தார்.

எடைகுறைந்த குழந்தை களுக்கு அவர்களது போஷாக்கு நிலையை அதிகரித்துக்கொள் வதற்கு உத்தேச தாய்ப்பால் வங்கி வரப்பிரசாதமாகும் எனவும்

பிலிப்பைன்ஸ் போன்ற நாடு களில் இத்தகைய வங்கிகள் நல்ல பலனை அளித்துள்ளதாக வும் அவர் தெரிவித்தார்.

குறைந்த செலவில் இலங் கையில் தாய்ப்பால் வங்கிகளை அமைக்க முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அரச அதிபர் வீட்டில் தங்கநகைகள் திருட்டு

(கண்டி)

கண்டி மாவட்ட அரசாங்க அதிபரின் வீட்டில் சுமார் நான்கு இலட் சத்து 43 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்கள் காணா மற் போயுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கண்டி புஷ்பதான மாவத்தையில் அமைந்துள்ள அரசாங்க அதி பரின் வீட்டில் நேற்று முன்தினமிரவு இந்த திருட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. இது தொடர்பாக கண்டி குற்றத்தடுப்பு பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

திருட்டுச் சம்பவம் தொடர்பாக அரசாங்க அதிபரின் மனைவி யான ஆசிரியை அமிதா செனவிரத்ன, கண்டி பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

தங்கச் சங்கிலி, வளையல், மோதிரம் உட்பட பல நகைகள் திருட்டுப் போயுள்ளதாக முறைபாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் எவரும் கைதுசெய்யப்படவில்லை என்பதுடன், விசாரணைகளை துரிதப்படுத்தியுள்ளதாகக் கண்டிப் பொலிஸார் தெரிவித்தனர்.

# பாடசாலை அடிப்படையில் ஆசிரிய பயிலுனர் நியமனம்

அடுத்த வருடம்முதல் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு கல்வியற் கல்லூரிகளுக்கு ஆசிரிய பயிலுநர்களை இணைத்துக்கொள்ள கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

கஷ்ட பிரதேச பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றா குறைக்கு தீர்வு காணும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள் ளப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் கோத்தாபய ஜயரத்ன குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய வருடாந்தம் 3750ற்கும் மேற்பட்டவர்களை கல்வியற் கல்லூரியின் ஆசிரி யர்களாகச் சேவையில் இணைத்து கொள்ளவுள்ளதாகக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

# குண்டுதயாரிக்க உதவிய உறுப்பினர் நாடாளுமன்ற தெரிவுக் குழுவில்

## ஹேமகுமாரநாணயக்கார தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாத குழுவொன் றுக்கு குண்டு தயாரிக்க உத விய உறுப்பினர் ஒருவர், பிர தம நீதியரசருக்கு எதிரான நம் பிக்கையில்லாப் பிரேரணையை விசாரிக்கும் தெரிவுக்குழுவில் இருக் கின்றாரா என மக்கள் கேட்ப தாக மௌபிம மக்கள் கட்சியின் தலைவர் ஹேமகுமார நாணயக் கார தெரிவித்துள்ளார்.

கத்திகளை பயன்படுத்தியும், ஆட்களை கொலை செய்து, தமது பாடசாலையின் அதிபரை கொலை செய்ய சூழ்ச்சிகளை மேற் கொண்டு வேலைத்திட்டத்தை செயற்படுத்திய நபர் ஒருவரும், தெரிவுக்குழுவில் அங்கம் வகிக் கின்றாரா என மக்கள் வினவுவ தாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சட்டம் எப்படியாக இருந்தா லும் 10 ஆம் வகுப்பை கூட படித்து முடிக்காத நபர் ஒருவர் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிப்பதாகவும் அவர்



கூறியுள்ளார். அத்துடன் நீதி மன்றத்தினால் குற்றம் சுமத் தப்பட்டவர்களும் இந்த தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர் எனவும் ஹேமகுமார நாணயக் கார கூறியுள்ளார்.

கொழும்பில் எதிர்க்கட்சிகள் இணைந்து நடத்திய ஊடகவிய லாளர் சந்திப்பில் அவர் இத னைக் கூறியுள்ளார். நாடாளு மன்றத்தெரிவுக்குழுவினால் வழங் கப்படும் தீர்ப்பானது, நீதியான தும், நியாயமானதுமான தீர்ப் பாக இருக்காது. கல்வித்தகுதி யற்றவர்கள் இருக்கும் நாடா ளுமன்றத் தெரிவுக்குழு காட்டு நீதிமன்றமாக இருக்குமோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது.

தெரிவுக்குழுவிற்கு, அரசாங் கத்தில் அங்கம் வகிக்கும் பெரு பான்மையான உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளதன் மூலம் அதில் வழங்கப்படும் தீர்ப்பு என் னவாக இருக்கும் என்பது, கல் லில் செதுக்கிய சிற்பம் போல் தெளிவாகியுள்ளது. தற்போ தைய அரசாங்கம் ராஜபக்ஷ அரசாங்கம் அல்ல ராஜயக்ஷ அர சாங்கம் எனவும் அவர் கூறி யுள்ளார்.

# பேஸ்புக்கில் காழ்ப்புணர்வு; நடவடிக்கை எடுக்கமுடியாது

பேஸ்புக்கில் சமய இன காழ்ப் புணர்வை பரப்புவோருக்கு எதி ராக நடவடிக்கை எடுக்க முடி யாது என இலங்கை கணனி அவசர நடவடிக்கை அணி தெரிவித்துள்ளது.

பேஸ்புக் பயன்பாட்டுக்கான நிபந்தனைகளின் படி இந்த விட யத்தில். நடவடிக்கை எடுப்பதை தடுத்து வருகின்றது என இலங்கை கணனி அவசர நடவடிக்கை அணியின் பேச்சாளர் ரொஷான் சந்திரகுப்தா தெரிவித்தார்.

இது குறித்து ஐக்கிய அமெ ரிக்காவிலுள்ள பேஸ்புக்குடன் தொடர்புகொண்டோம். பேஸ் புக் நிபந்தனைகள் கருத்து சுதந் திரத்தை பாதுகாக்கின்றன. இத னால் இன மற்றும் மத காழ்புணர் வுகளை பரப்புவோர் மீதும் நட வடிக்கை எடுக்க முடியாது என அவர்கள் எமக்கு அறிவித்துள் ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பில் இலங்கை கணனி அவசர நடவ டிக்கை அணி நீதி அமைச்சுடன் பேச்சு நடத்தவுள்ளது எனவும் அவர் கூறினார். இதேவேளை, பேஸ் புக் தொடர்பான முறைப்பாடு களை நாம் பொலிஸ் கணணிப் பிரிவுக்கு அனுப்பிவருகின்றோம் என பொலிஸ் பேச்சாளர் பிர சாந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

பேஸ்புக்கை பயன்படுத்தி இன மற்றும் மத காழ்ப்புணர்ச் சிகளை பரப்பும் போக்கு இளை ஞர்களிடையே பரவி வருகின் றது. பல போலி பேஸ்புக் பதி வுகள் உருவாக்கப்பட்டுள்ளது எனவும் கடவுச்சொல்லை திருடு தல், புகைப்படங்களை அனுப்பு தல் என்பன பேஸ்புக் தொடர் பாக அதிகம் மேற்கொள்ளப் படும் முறைப்பாடுகளாகும்.

## பாராட்டு விழா

(யாழ். நிருபர்)

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியில் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கான பாராட்டு விழா இன்று முற்பகல் 8.30 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் வே. முருகமூர்த்தி தலைமையில் நடைபெறும் இவ் விழாவிற்கு காரைநகர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் பு.ஸ்ரீவிக் கினேஸ்வரன் பிரதம விருந்தினராகவும் தீவக வலய ஆரம்பப்பிரிவு சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் மு. கேசவன் சிறப்பு விருந் தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (10)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 நவம்பர் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.